559

மலேயாச் சொற்பொழிவுகள்

அ. மு. பரமசிவானந்தம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS

...லைப் பதிப்பகம், சென்னை-10

O-,NPS,M
N50
104481

43945

மலேயாச் சொற்பொழிவுகள்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 ... 1950
MADRAS

வித்துவான் - அ. மு. பரமசிவானந்தம், பீ.ஓ.எல்., எம்.லிட்.

தமிழ்த் துணைப்பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை

சாது அச்சுக்கூடம்

இராயப்பேட்டை, சென்னை

தமிழ்க்கலைப் பதிப்பகம்

தமிழ்க்கலை இல்லம், சென்னை 10

உரிமைப் பதிவு]

[விலை ரூ. 1—8—0

O-,5NPS,M
N50

உள்ளுறை

		பக்கம்
இன்றைய தமிழ்	...	5
சமரசம்	...	13
தமிழும் சமயமும்	...	21
தமிழர் வாழ்க்கை	...	29
அறிவும் அறமும்	...	37
தீதொழிய நன்மைசெயல்	...	50
சமய வாழ்க்கை	...	67
தமிழ் இன்பம்	...	80
புலவர் வீரம்	...	91

TAMIL NADU ARCHIVES LIBRARY
10448I
43946

முன்னுரை

மலேயா தமிழ்ப் பண்ணையார் ‘வருக’ என்றார்கள். இசைந்தேன். கோடை விடுமுறை கூட நின்றது. சரியாக மூன்றரைத் திங்கள் பயணமும் பணியும். வெளி நாட்டில் வாழும் தமிழர் நிலையைக் காணத் துடித்த என் உள்ளத்திற்கு அவர் தம் அழைப்பு விருந்தாயிற்று. மலேயா முழுதும் சுற்றினேன். அங்குள்ள தமிழர்தம் அன்பும் ஆதரவும் என்னைத் திணற வைத்தன. பண்ணையார் தமிழ் வளர ஒல்லும் வகையால் பணியாற்றுகின்றார்கள். அவர் தம் பெரும் பணியில் என்னுடையது ஒரு துளி. ஊர்தோறும் பெருங் கூட்டம் கூடி வரவேற்றனர். சிலவிடங்கள் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பெருமக்கள். அவர்தம் உணர்ச்சியும், கூட்டமும், அமைதியும் ஆர்வமும் என்னை அவர்களிடையில் பேச வைத்தன. பேசினேன், பேசியவற்றுள் சிலவே இன்று இந்த நூலாக வெளி வருகின்றது. கருத்தலையின் வழியே கை சென்றது. பேச்சு முறையிலேயே பெரும்பாலும் இந்நூல் அமைந்துள்ளது. கருத்துக்கள் சில மாறி மாறிக் கூடவந்திருக்கும். குணம் கொண்டு ஏற்க வேண்டுகின்றேன்.

வருகவென அழைத்த மலேயா தமிழ்ப்பண்ணையாருக்கும் அதற்கு முதற் காரணராய திரு. கா. இராமநாதன் செட்டியார் அவர்களுக்கும் இந்நூலை உரிமையாக்கி என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அ. மு. பரமசிவானந்தம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 MAR 1950

ஓர் அத்தியாயம்

கோலால...
28-6-48

*மலேயா தமிழ்ப் பண்ணையின் சார்பாகச் சென்னையி லிருந்து வந்த பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ச் சொற்பொழி வாளர் திரு. அ. மு. பரமசிவானந்தம் நேற்று 'கேரிக் பென்ட்' ஏறி விட்டதாகத் தகவல் கிடைத்தது. மலேயாவில் சரியாக ஒருமாதம். சென்னையிலிருந்து வர ஒருவாரம். திரும்ப ஒரு வாரம். மொத்தம் கப்பல், கார், ரயில் பிரயாணம் ஆறு வாரம். சிங்கப்பூரிலிருந்து பினங்குவரை சென்று சிங்கப்பூர் திரும்பினர். உள்நாட்டுப் பிரயாணத்தின் பெரும்பாகம் தனிக்காரில். பார்த்த ஊர் பல. சொற்பொழிவு செய்த ஊர் இருபது இருக்கலாம். மொத்தம் சொற்பொழிவுகள் இருபத் தைந்துக்கு மேல். கேட்டோர் பற்பலர். இந்த நாட்டில் தமிழில் ஓர் ஆர்வம் உண்டாயிற்று. தமிழ் பரவியது. 'தமிழ்க் கலை'யும் பரவியது. 'வருக' என எழுதியதும், வருகிறேன் என்று உடனே பதில் எழுதியதும், என்னைத்தவிரத் தெரிந்த வர் ஒருவரும் இல்லாத வேற்று நாட்டிற்குக் கப்பல் ஏறிவர இசைந்ததும், அவசரத்தால் ஏற்பட்ட பல சங்கடங்களுக்கு இடையே புறப்பட்டதும், தனக்கு வரும் சிரமத்தைச்சிறிதும் பாராது பிறருக்குச் சிரமம் கொடுக்க நினையாது பயனென்று கருதாது ஆர்வம் குறையாது பணியாற்றியதும் மிகப் போற்றற் குரியன. 'அ. மு. ப. வரவழைக்கத் தகுந்தவர்' என்று யான் சொல்லியதைச் சரியென அவர் அறிவாலும், குணத்தாலும், பணியாலும் மெய்ப்பித்தார்.

* * * * *

மலேயா தமிழ் வளர்ச்சியில் அ. மு. ப. வந்து போனது ஓர் அத்தியாயம். இவ்வாறு இன்னும் பல அத்தியாயங்கள் எழுதப்பட வேண்டும்.

---

*மலேயா சுற்றுப் பயணம்பற்றிக் கோலாலம்பூர் திரு. கா. இராமநாதன் செட்டியார் அவர்கள் கருத்து. அவர் தம் நாட்குறிப்பிலிருந்து எடுத்தது.

இன்றைய தமிழ்

இன்றைய தமிழ் என்றால் நேற்றைய தமிழ், அதற்கு முந்திய தமிழ் என்று தமிழில் பலவகை உண்டோ என்று கேட்கத் தோன்றும். ஆனால் அந்தக் கேள்விக்கு இடமில்லை. தமிழ் ஒன்றேதான். அது மிகப் பழமையானது. பல ஆயிரம் ஆண்டுகளாகத் திருந்திய மொழியாக நிலமிசை வழங்கி வந்த மொழி தமிழ் மொழி. இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் தமிழில் தோன்றிய இலக்கியங்கள் பல. கடல் கோளாலும், பிறவற்றாலும் அழிந்தன போக, எஞ்சிய இலக்கியங்களும், இலக்கணங்களும் இன்றும் நம்மிடை வாழ்கின்றன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே திருந்திய இலக்கியம் பெற்றமொழி இதுவாயின், இது தோன்றி, வளர்ந்து, திருந்த இன்னும் பல ஆயிரம் ஆண்டுகள் முன் கழிந்திருக்க வேண்டும். அன்று தோன்றிய தமிழ்மொழிதான் - ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வழக்கில் வந்த மொழிதான் - இன்றும் தமிழ் மொழியாக இருக்கின்றது. எனவே இன்றைய தமிழ் என்பது புதிதாகத் தோன்றியதொன்றன்று எனவும், அத்தொன்மை மொழி இன்று - இந்த இருபதாம் நூற்றாண்டில் எவ்வாறு போற்றி வளர்க்கப்படுகிறது என்பதைக் காண்பதே இப்பேச்சின் நோக்கம் எனவும் அறியக்கிடக்கிறது.

பழந்தமிழ் மொழியில் கிளைத்த மொழிகள் சில. திராவிட மொழிகளுக்கெல்லாம் தாய் மொழியாகத் தமிழ் இலங்குகிறது. சேய் மொழிகளும், தானும் ஒன்றையொன்று தழுவிப் பிரியா நிலையில் இன்று தமிழ் வாழ்கிறது. பல மொழிகள் தோன்ற இடமளிப்பினும் தமிழ் தன் பழமை நலம் குறையா வகையிலேயே வளர்ந்து வருகிறது. இதை இந்த நூற்றாண்டின் புலவராக எண்ணத்தக்க ஆசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கள்,

'பல்லுலகும் பலவுயிரும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா ளமுந்துளுவும்
உன்உதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாஉன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே'

என்று பாராட்டுகிறார்.

இன்றைய தமிழ் அன்றைய இயற்கை நலம் கெடாமல்தான் வளர்ந்து வருகின்றது. இடைக்காலத்தே பிறநாட்டு மொழிகளும், கலை, நாகரிகம் முதலியன கலந்த பல மொழிபெயர்ப்பு நூல்களும், பலமொழிச் சொற்களும் தமிழில் வந்து கலந்தன. எனினும் அக்கலப்பு பிற திரவிட மொழிகளில் விரவியதுபோன்று அவ்வளவு அதிகமாக இல்லை. சங்ககாலத்திற்குப் பிறகு பல இலக்கியங்கள் தமிழில் தோன்றின. சமய இலக்கியங்கள் பல. மொழிபெயர்ப்பு

நூல்கள் பல, இன்னும் சிற்றிலக்கியங்கள் பல. இரண்டாயிர ஆண்டுகளாகத் தமிழ் வளர்ந்து வந்துதான் இருக்கின்றது.

இன்றைய தமிழன் தமிழ்மொழியை இதுவரை அவ்வளவாகப் போற்றவில்லை என்பதுதான் அறிஞர் முடிபு. இனிய தமிழ் மொழியை ஓம்பாது தமிழன் வாளா கிடக்கிறான் என்றான் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தே வாழ்ந்த பாரதி,

'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்
பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும்
இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ சொல்லீர்
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்'

என்பது அவன் மொழி! தமிழன் தன்னையும் தன் மொழியையும் மறந்து விலங்கினைப்போல வாழ்கின்றான் என்றான். ஆம்! இந்த நூற்றாண்டின் தொடக்கத்தே இருந்த தமிழ்நாட்டு நிலை அது.

இன்றைய தமிழகம் விழித்துவிட்டது. அன்னைத் தமிழுக்கு ஆக்கப்பணி செய்யத் தமிழர் ஒருங்கு திரண்டு எழுகின்றனர். பாமாலை சூடும் புலவர் பலர் இன்று தமிழ்நாட்டை அணி செய்கின்றனர். உரைநடை நூல்கள் பல்கிப் பெருகுகின்றன. ஆனால் ஆகும் பாடல்களும், உரைநடைகளும் இன்றைய நாட்டு நிலைக்கு ஏற்ப, காலத்தை ஒட்டி, மக்கள் கருத்தை ஒட்டி, அவர்தம் வாழ்வுக்கு அரண் செய்யும் வகையில் ஆக்கப்படுகின்றன.

'பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியில்
பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள் தமிழ்மொழியில்
இயற்றல் வேண்டும்'

என்ற பாரதியின் விழைவு இன்று செயலில் காட்டப்படுகின்றது இன்றைய தமிழ் நாட்டில்.

இன்றைய தமிழ் நாட்டில் தனித் தமிழ் உணர்ச்சி வளர்ந்து வருகின்றது. ஆக்கப்படுகின்ற பாடலும் உரைநடைகளும் இன்றைய உலக நிலைக்கு ஏற்பவே அமைகின்றன. இடையே தமிழ் நாட்டில் பிறநாட்டு மக்கள் கலப்பால் பல்வேறு சமய இலக்கியங்களும் பிறவும் தோன்றின. அத்துடன் சாதி வெறியும், சமய வேறுபாடும் தலைவிரித்தாடும் வகையில் இடைக்கால இலக்கியங்கள் உதவின. புத்த சமணர் காலத்தே துறவு மனப்பான்மையும் உலகம் நிலையாது என்ற உணர்வும் வற்புறுத்தப்பட்டன. மக்களுக்குள் இழிவு கற்பிக்கும் மனப்பான்மையும், தீண்டாமை, பெண் அடிமை முதலிய பிற குறைகளும் தமிழ்நாட்டில் தாண்டவமாடின. ஆனால் இன்றைய தமிழ் இலக்கியங்கள் இவற்றைப் போக்க வழி கோலுகின்றன. அத்துடன் மனிதனுக்கு மனிதன் உயர்வு தாழ்வு கற்பிக்கின்ற முறை ஒழிய வேண்டும் என்றும், பெண்ணடிமை,

தீண்டாமை முதலியன நீங்கவேண்டும் என்றும் இலக்கியங்கள் இன்று வற்புறுத்துகின்றன. இன்றைய உலகப்பேச்சாக இருக்கும் பொருளாதாரச் சமத்துவம், குடியாட்சி முதலியபற்றிய இலக்கியங் களும் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே வருகின்றன.

உரைநடை நூல்களும் இன்றும் நாட்டில் பெருகுகின்றன. சில பேரறிஞர்கள் பண்டைத் தமிழர்தம் நல்வாழ்வை - சங்ககாலச் செம்மை வாழ்வை அந்தச் சங்க இலக்கியங்களிலிருந்து எடுத்து இனிய எளிய நடையில் நாட்டுக்குக் காட்டுகின்றனர். சென்ற நூற்றுண்டில் இருந்ததைக் காட்டிலும் இன்றைய நாளில் பல சங்க இலக்கியங்கள் மக்களிடையில் பரவலாயின. நூல்களில் பல சங்க இலக்கியங்கள் எடுத்தாளப்படுகின்றன. அவற்றின் இன்சுவை அறிய அவாவும் மக்கள் தொகை நாளுக்கு நாள் பெருகு வதைக் காண்கின்ருேம். எனவே, அறிஞர்களும் சங்க இலக்கியங் களை எளிய உரைநடையில் விளக்கி அன்றைய தமிழன் ஏற்றத்தை உலகுக்குக் காட்டுகின்றனர். உரைநடை ஒருபுறம், பாடல் ஒரு புறம் இரண்டும் இன்று தமிழ்நாட்டில் வளர்கின்றன. இன்றைய தமிழ் ஏற்றமுறுகின்றது.

தமிழ் நாட்டில் சிறந்த இன்றைய இலக்கியங்களாகப் பாட் டிசைக்கும் புலவர்கள் பலர். அவருள் நால்வர் தலை சிறந்தோரா வர். திரு.வி. கலியாணசுந்தரனுர், பாரதிதாசனுர், நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை, தேசிகவினாயகம் பிள்ளை என்போர்தம் பாடல்கள் இன்று நாட்டில் பலர் வாயிலும் பழகக் காணலாம். இடைக்கால இலக்கியங்களுக்கு இல்லாத ஏற்றம் இந்தப் புல வர்தம் - இன்றைய தமிழுக்கு வந்துள்ளது. ஏன்?

உலகில் பல நாடுகள் பல வழிகளில் முன்னேறுகின்றன. அவற்றைக் கண்டு நிற்கும் இன்றைய தமிழ் நாட்டு அறிஞர்கள் நம் தமிழ்நாடும் அந்நிலையில் முன்னேற ஆசைப்படுகின்றனர். அவர் தம் ஆசை பாட்டாகப் பெருக்கெடுக்கின்றது. நாட்டில் உள்ள பல குறைகள் நீங்க அவர் விரும்பிய நிலையில் எழும் இன்றைய இலக்கி யங்கள் மக்களுக்கு விருந்தாக அமைகின்றன. நாமக்கல் கவிஞர் வீழ்ந்த தமிழ்நாட்டை நிமிர்ந்துவாழச் சொல்லுகிருர். நாட்டு வளம் கூறி இன்றைய எளிமையையும் விளக்கி, இனிச் செய்ய வேண்டு வனவும் காட்டுகிருர் அவர்.

(பல்லவி)

தமிழனென்று சொல்லடா—தலை நிமிர்ந்து நில்லடா

(சரணங்கள்)

அமுத மூறும் அன்பு கொண்டு
அரசு செய்த நாட்டிலே
அடிமை யென்று பிறர் நினைக்க
முடிவணங்கி நிற்பதோ
இமயந் தொட்டுக் குமரிமட்டும்
இசை பரந்த மக்கள் யாம்
இனியும் அந்த பெருமை கொள்ள
ஏற்ற யாவும் செய்குவோம் (தமிழ்)

கங்கையோடு பெருமை கொண்ட
காவிரிப்பொன் னுட்டிலே
கவலை யின்றிச் சோறிருக்கக்
கலைக ளெண்ணி வாழ்ந்த நாம்
மங்கி மங்கி வறுமை மிஞ்ச
மதி மயங்கி மாய்வதோ
மாநிலத்தில் சோற்றுப் பஞ்சம்
மறையுமாறு மாற்றுவோம் (தமிழ்)

என்று உணர்ச்சி ததும்பப் பாடியுள்ளனர். தமிழன் தன் வேறு பாடுகள் யாவையும் இல்லையாகச் செய்து ஒன்றிக்கலந்து, நாட்டை உயர்த்தவேண்டுமென்பது அவர் கருத்து. இந்திய நாட்டில் உள்ள வேறுபாட்டைப் பாரதிதாசனுர்,

'வாழ்கின்ருர் முப்பத்து முக்கோடி மக்களென்ருல்
சூழ்கின்ற பேதம்அந்தத் தொகை இருக்கும்'

என்கின்ருர். இந்த வேறுபாடு நீங்க வேண்டும். அடிமை மனப் பான்மை அகலவேண்டும்.

இடைக்காலத்தே சமய இலக்கியங்கள் பல தோன்றின. அவை பெரும்பாலும் வேறுபாட்டை வளர்க்கும் வகையில் அமைந்து விட்டன. ஆனுல், இன்றைய கவிஞர்கள் அந்த வேறுபாடுகளைக் களைய முற்படுகின்றனர். தீண்டாமை அகலவேண்டும் எனவும், கோயில்கள் சந்தைக் கடைகளாக இல்லாது உண்மையில் வழிபாட்டுக் கூடங்களாக வேண்டும் எனவும் வற்புறுத்துகின்றனர். ஒரு சாதி உயர்ந்ததென்றும் மற்ருெரு சாதி தாழ்ந்ததென்றும் எண்ணும் மனப்பான்மை மடியவேண்டும் என்றும் வற்புறுத்துகின்றனர்.

ஆதியிலே வழிபாட்டுக் கார்ந்தபெருங் கோயில்பல
சாதிமதச் சாக்கடையாய்ச் சண்டாளர் இருப்பிடமாய்
நீதி அறம் அழித்துவரல் நின்மலனே நீஅறிவாய்
கோதுகளை அறுத்தொழித்துக் குணம்பெருகச் செய்யாயோ!

என்ருர் அறிஞர் திரு. வி. க.

வேதியராலே விளைந்திடுமேல் - வயல்
வேலை செய்யாது விளைந்திடுமோ
வாதமெலாம் கட்டி வைத்திடுவோம்—ஒத்து
வாழ்வதை மேற்கொண் டுழைத்திடுவோம்'

என்றும்,

சாவியிட்டுப் பூட்டுமிட்டுச் சந்நிதியில் காவலிட்டுத்
தேவிருக்கும் கோவிலைநீர் சிறைச்சாலை ஆக்கலாமோ

என்றும் தேசிகவிநாயகம் பிள்ளை தீட்டுகின்ருர். மற்றும் தமிழர், தம் இயற்கை வழிபாட்டை மறந்து வேடிக்கைகளையும், விழாக்களையும் பெரிதாக எண்ணி நிற்பதைத் திரு. வி. க. தம் 'முருகன் அல்லது அழகு' என்னும் நூலில் கண்டிக்கிருர்.

'முருகன், இயற்கை அழகுக் கடவுள் என்ற உணர்விலாச் சிலர், முருகன் திரு உருவைச் செயற்கை அணிகளால் அழகு செய்கின்றனர்.

இயற்கை அழகினைச் செயற்கை அணியா அழகு செய்யும்? திருவிழா திருவிழா என்று செயற்கைத் தீநெறி பற்றித் திரிபவர்க்குப் பெரிதும் இரங்குகின்றேன். முருகன் விழாக்களெல்லாம் இயற்கை அழகுணர்வை ஊட்டுமாறு கொண்டாடப்பெறல் வேண்டும். இல்லையேல் விழாக்களின் பொருள் இறந்துபடும்'

என்ற மொழி இன்றைய சீர்திருத்த நிலையை வற்புறுத்தும். இத்தகைய பாட்டும் உரையும் தமிழில் இன்று தோன்றி மாசு படிந்த சமயத்தின் மாசு நீக்க முற்படுகின்றன. இன்றைய தமிழில் இத்தகைய இலக்கியங்கள் சிறந்த இடம் பெற்றுள்ளன.

மற்றும் நாட்டில் உள்ள மற்றொரு குறையாகிய பெண்ணடிமையைப் பேசாத இன்றைய புலவர் இல்லை. பாரதியார் அவர்தம் வாழ்வு உயரப் பலவகைகளில் பாட்டிசைக்கின்றார். அவரை ஒட்டி இன்றைய கவிஞரும் எழுதுகிறார்கள்.

பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்து வருதல்முயற் கொம்பே

என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார்.

மங்கைய ராகப் பிறப்பதற்கே - நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா
பங்கயக் கைநலம் பார்த்தல்லோ - இந்தப்
பாரில் அறங்கள் வளருதம்மா

என்றார் தேசிகவிநாயகம் பிள்ளை. இவற்றோடு நாட்டை ஆளும் முறையையும், இன்றைய பொருளாதாரச் சீர்கேட்டையும் கூட இன்றைய புலவர்கள் எண்ணாது விடவில்லை, கவி என்றால், பாட்டு என்றால் அது வாழ்வொடு - வழக்கொடு கூடியதாக இருக்கவேண்டும் என்பது முடிபு. அந்த முடிவிலே இந்தக் கவிஞர்கள் வாழ்வையும் வாழ்வொடு ஒட்டிய பிறவற்றையும் வரையறுக்கின்றனர். தொழிலாளி-முதலாளிச் சண்டைகள் நீங்கவேண்டும் என்றும், எல்லாரும் எல்லா நலன்களையும் பெற்றுச் சிறக்கவேண்டும் என்றும் அவர்கள் தீட்டுகிறார்கள். ஒரு சிலர் அடக்க, மற்றவர் அடங்கி நடக்கும் அடிமை வாழ்வு வேண்டாம் என்று காட்டுகிறார்கள். வஞ்சமற்ற உள்ளத்தில் மக்கள் வாழ்க்கை மலரவேண்டும் என்பது அவர்கள் விருப்பம். அனைத்துக்கு மேலாக ஜனநாயக ஆட்சி முறை அமையவேண்டும் என்பதும், மன்னன் முதலிய ஆளும் இனத்தார் அங்கே தேவை இல்லை என்பதும் அவர்கள் ஆசை. இதோ அவர்கள் வாக்கிலேயே தருகிறேன்.

'வலியோர் சிலர், எளியோர் தமை, வதையே புரிகுவதா
மகராசர்கள் உலகாளுதல் நிலையாம் எனும் நினைவா
கொலை வாளினை எடடா மிகு கொடியோர் செயலறவே
குணமேவிய தமிழா'

என்று தமிழரைத் தட்டி எழுப்புகிறார் புரட்சிக்கவிஞர்.

மன்னவர் என்ற மனிதரில்லை - அங்கே
மந்திரி தந்திரி யாருமில்லை
சின்னவர் என்று எவருமில்லை - பட்டம்
தேடி அலைந்திடும் மக்கள் இல்லை

கோயில் குளங்களும் வேணதுண்டு - ஆனல்
கும்பிடப் போவதில் சண்டையில்லை
வாயில் ஜபதபம் வஞ்சனை நெஞ்சத்தில்
வைத்துப் பிழைத்திடத் தேவை இல்லை

என்று நாமக்கல் கவிஞர் தாம் விரும்பும் தமிழகம் இவ்வாறு இருக்கவேண்டும் என்று படம் பிடித்துக் காட்டுகிருர். எனவே இன்றைய கவிஞர்கள் இன்றைய நாட்டுத் தேவையை நன்கு தம் உணர்வுப் பாடல்களில் விளக்கி உள்ளனர் என்பது கண்கூடு.

இனி, வெறும் பாடல்கள் மட்டும் இன்றைய தமிழை அணி செய்கின்றன என்று எண்ணுது, உரை நடைகளும் நாள்தோறும் பெருகிக்கொண்டே வருவதையும் காணவேண்டும். கடந்த பத்து ஆண்டுகளாகத் தமிழ் நாட்டில் ஒரு புத்துணர்ச்சி பெருக்கெடுத்து ஓடுகிறது. அந்த உணர்ச்சி நிலைக்கேற்ப, பல தமிழ் நூல்கள் வெளி வருகின்றன. பண்டைச்சங்க இலக்கியங்களை எல்லோரும் எளிதில் படித்துப் பயன் பெறுகின்ற முறைப்படி எளிய இனிய நடையில் அறிஞர்கள் நூல் எழுதத் தொடங்கிவிட்டனர். தமிழ் நாட்டு மாணவர்கள் இடைக்கால இலக்கியங்களைப் படிக்க விரும்புவதைக் காட்டிலும், சங்க இலக்கியங்களைப் படிக்க வேண்டும் என்ற பேரார்வம் கொண்டு விட்டனர். சங்கச் சான்ருேர் நல்வாக்குகள் நல்ல நூல் வடிவில் விளக்கம் பெற்று வருகின்றன. திரு. ரா. பி. சேதுப்பிள்ளை, மு. வரதராசனர் போன்ற பேராசிரியர்களது எழுத்துக்கள் இன்று தமிழ் நாட்டில் மட்டுமின்றித் தமிழ் வழங்கும் நிலப்பகுதிகளிலெல்லாம் போற்றப்பட்டு வருவது கண்கூடு. இன்னும் சில அறிஞர்களது எழுத்துக்களும் நாட்டை அணிசெய்கின்றன. தனித் தமிழ்த் துறையில் தலையாய வழியில் நிற்கின்ருர் ஆசிரியர் மறைமலை அடிகளார்.

இன்றைய தமிழ் நாட்டு உரைநடை நல்ல திருத்தம் பெற்று விட்டது. பிறர்க்குப் புரியாவகையில் உயர்ந்தநடையில் எழுதவேண்டும் என்ற எண்ணம் போய், எளிய இனிய நடையே வழக்கத்தில் வந்துவிட்டது. புரியாத நூல்கள் என்று இதுவரையில் பேசப்பட்ட இலக்கியங்களெல்லாம் இன்று மக்களுக்கு எளியநடையில் எழுதித் தரப்படுகின்றன. எனவே இன்றைய தமிழில் பாட்டும் உரையும் மிகப் பரவி மக்கள் உள்ளத்தில் ஒரு புத்துணர்ச்சியை உண்டாக்கி விட்டன.

புலவர்களும் அறிஞர்களும் மட்டுமன்றி இன்று தமிழ்நாட்டு அரசியலாரும் தமிழுக்கு அரண் செய்கின்றனர். அலுவல்கள் தமிழில் நடைபெற வழி கோலுகின்றனர். உலகம் போற்றும் தமிழர்தம் குறளுக்கு இன்று உரிய இடத்தைக் கொடுத்துவிட்டனர். குறள் பயிலாது தமிழ் நாட்டு மாணவர் தேர்வில் வெற்றி

பெற இயலாது. அத்துடன் இடைக்காலத்தே பிறர் சேர்க்கையால் ஊறுபட்ட - மாறுபட்ட தமிழ்நாட்டு ஊர்ப்பெயர்களும், பிறவும் நல்ல பண்டைய தமிழ்ப் பெயர்களாலேயே ஆக்கப்படுகின்றன. தமிழ் நாட்டில் தமிழ் முதன்மொழியாக்கப்பட்டு விட்டது. தமிழ் நாட்டில் பிறந்த எவரும் தமிழ் பயிலாது வேறு மொழியைப் பயின்று பட்டம் பெறுதல் என்பது இனி இயலாததாயிற்று. தமிழ் பேசத் தெரியாது என்ருல் பெருமை என்ற எண்ணம் போய் தமிழில் 'பேசத் தெரியாவிட்டால் தமிழ்நாட்டில் வாழ்வு இல்லை என்ற வகையில் நிலை மாறிவிட்டது. உயர் நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகள் சிலவற்றிலும் பாடங்கள் தமிழில் கற்பிக்கப்படுகின்றன. அரசியலார் இன்றைய தமிழுக்கு உதவும் வகை இவை.

எனவே தமிழ் நாட்டில் இன்று அனைவரும் ஒரு முகமாகத் தமிழை வளர்க்க முற்பட்டு விட்டனர். அரசியலார் ஆணை ஒரு புறம், அறிஞர்தம் அறிவுரைகள் ஒருபுறம், பாவாணர்தம் பாடல்கள் ஒருபுறம், எழுத்தாளர்தம் நல் எழுத்தோவியங்கள் ஒருபுறம் —இப்படிப் பலவகையில் இன்று தமிழ் நல்ல நிலையில் வளர்க்கப் படுகின்றது. அத்துடன் கடந்த சில ஆண்டுகளாகப் பத்திரிகைகள் தமிழ்நாட்டில் அதிகமாக வளர்ந்துவருகின்றன. திங்கள் தோறும் பல கிழமை, திங்கள் வெளியீடுகள் வந்துகொண்டே இருக்கின்றன. அவையெல்லாம் இன்று நல்ல முறையில் தமிழை வளர்க்க உதவுகின்றன. இதழ்களுக்கேற்ப எழுத்தாளர் பலர் வளர்ந்து வருகின்றனர். இளம் எழுத்தாளர் பெரும் கூட்டமாகத் திரண்டு மாநாடுகள் நடத்துவதையும் சில ஆண்டுகளாகக் கண்டு வருகின்ருேம்.

எழுத்தளவில் மட்டுமின்றி பேச்சளவிலும் இன்றைய தமிழ் ஏற்றமுறுகின்றது. மேடையேறித் தமிழ் பேசத் தெரியாது என்று பெருமை பேச இன்று முடியாது. இனிய தமிழில் உயரிய கருத்துக்களை விளக்க நல்ல பேச்சாளர்கள் நாடு முழுதும் தோன்றி விட்டனர். அரசியல்கட்சிகள் அனைத்திலும் சிறந்தபேச்சாளர்கள் இன்று நிறைந்துநிற்கின்றனர். பிற அறிஞர்களும் பேச்சுக்கலையில் பெருநிலை எய்தியுள்ளார்கள். மேடைக்கலை முதலிய நூல்களின் தேவையையும் நாடு அறிகின்றது. அறிஞர் பேச்சுக்கலையில் வல்லவராக விளங்குவதுபோன்றே மக்களும் தம் உணர்வைக் கூட்டங்களுக்கு மிகப் பெருவாரியாக வந்து கூடுவதன்மூலம் நமக்குக் காட்டுகின்றனர். சங்க இலக்கிய மாநாடுகளாயினும் பல ஆயிரக் கணக்கில் மக்கள் திரண்டு தமிழ் மொழியில் தமக்குள்ள ஆர்வத்தை நன்கு விளக்குகின்றனர்.

இயற்றமிழ் முறைமட்டுமன்றி, இசைத்தமிழும் இன்று நல்ல நிலையில் போற்றப்படுகின்றது. தமிழ் நாட்டு அரங்குகளில் பிற மொழிப் பாடல்கள் இடம் பெற்றதை, பெற்று வாழ்ந்ததை இதற்குள் தமிழர் மறந்திருக்கமாட்டார்கள். ஆனல் இன்று தமிழ் நாட்டு அரங்கங்களில் தமிழ் இசை முதலிடம் பெற்றுள்ளது. தமிழ் இசையை வளர்க்க ஊர்தொறும் இசைச்சங்கங்கள் தோன்றி வளர்ந்து வருகின்றன. தமிழ் இசைப்பாடல்கள் சிறந்த முறையில்

வெளிவருகின்றன. சுத்தானந்த பாரதியார் போன்ற அறிஞர்கள் இசைப் பாடல்களைப் பாடி வெளியிட உதவுகின்றனர்.

நாடகத்தமிழும் கடந்த இரண்டொரு ஆண்டுகளாக வளம் பெற்று வருகிறது. படக்கலைக் காட்சியிலே கண்மூடிக் கிடந்த நாட்டில் இன்று பல இடங்களில் நாடக சாலைகள் ஏற்பட்டுவிட்டன. உயர்ந்த கலையில் - தமிழர்தம் பண்பாட்டை விளக்கும் நாடகங்கள் எழுதி நடிக்கப்பட்டுவருகின்றன. அறிஞர் அண்ணாதுரை போன்ற எழுத்திலும் பேச்சிலும் வல்லவர்களது நாடகங்கள் இன்று தமிழ் நாட்டு மேடைகளை அலங்கரிக்கின்றன.

இந்த முறையில் இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழும் இன்று போற்றி வளர்க்கப்படுகின்றன. 'பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள், தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்' என்ற பாரதியின் விருப்பம் நிறைவேற்றப்படுகிறது. பல மொழி பெயர்ப்பு நூல்கள் இன்று வெளிவருகின்றன. ஒரு சிலர் கொச்சைத் தமிழில் எழுத விரும்பி கலப்பு வகையிலே நூல்கள் எழுதினும் கூட, தூய இனிய தமிழ் நடை நாட்டில் அரும்பிவிட்டது. தமிழர் இதுவரை பெருத உணர்ச்சியை இன்று பெற்றிருக்கின்றனர். தமிழ் நாடு அறிஞராலும், அரசாங்கத்தாராலும் மொழி வழியில் சீராக்கப்படுகின்றது. தமிழ் வளர்ச்சி ஒன்றில், இன்று அனைவரும் கட்சி வேறுபாடுகளையும் கருத்து வேறுபாடுகளையும் மறந்து பணியாற்றுகின்றார்கள். அந்தப் பணி இன்று தமிழ் நாட்டை வளரச் செய்கின்றது. தமிழ் நாட்டிலே உள்ள தமிழர் மட்டுமன்றி, உலகில் பல இடங்களில் உள்ள தமிழர்கள் இன்று தாய் மொழியைப் போற்றத் தொடங்கிவிட்டனர். மலேயா தமிழ்ப் பண்ணை இன்று இங்கு தமிழ் வளரப் பாடுபடுகிறது. லண்டனிலே தமிழ்ச் சங்கம் பணியாற்றுகின்றது. தென் ஆப்பிரிக்காவிலே தமிழ்ச் சங்கம் உண்டு. அவை யெல்லாம் தாய்நாட்டு வளர்ச்சியை ஒட்டிப் பல வேறு வகையில் மொழி வளர்ச்சிக்குப் பாடுபடுகின்றன. எனவே இன்று உலகில் தமிழன் வாழும் இடங்கள்தோறும் புத்துணர்ச்சி பூக்கின்றது. தமிழ்த் தாய் தலை நிமிரும் வகையில் பணியாற்றுகின்றன. எல்லோருடைய பணிகளும் ஒன்று சேர்ந்து தமிழை - இன்றைய தமிழை - இனிவரும் தமிழை ஏற்றமுறச் செய்யும். எல்லாக் கலையும் இதன்பால் உள என்னும் வகையில் இன்றைய தமிழர் நல்ல மொழிபெயர்ப்பு நூல்களைச் செய்யவேண்டும். பழந் தமிழ் முறையினைப் போற்றல் வேண்டும். இடையில் வந்த கலப்புகள் நீங்கி, பழமையும் புதுமையும் ஒன்றிய நிலையில் தமிழன்னை சிறக்க வாழ்வாள். அவள் வாழத் தமிழன் வாழ்வான். அந்த ஆக்கப் பணியில் இன்றைய தமிழர் அனைவரும் ஒரு முகமாக உழைக்கவேண்டும். என் அன்பின் வேண்டுகோள் இது. தமிழ் வாழ தரணி வாழத் தமிழர் அனைவரும் ஒன்றுபடுக!

ச ம ர ச ம்

'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்பது ஒளவை அருந்தமிழ். நாட்டினது பொருள்வளம் பெருக வேண்டுமானால் வாணிபமும் பிற நலன்களும் சிறக்க வேண்டும். தமிழ்நாட்டிடைப் பிறந்த போதிலும் வளம் பெருக்கும் வகை காண மலாய் நாடு வந்திருக்கும் தமிழர் முன் இதோ நான் நிற்கின்றேன். தமிழ் நாட்டுக்கு அடுத்து, தமிழர் பெரும்பாலராக வாழ்கின்ற நாடு மலேயா நாடாகும். பல லட்சக் கணக்கில் தமிழ் மக்கள் இங்கு வாழ்கின்றார்கள். அவர் தம் கலை நலனும் வாழ்வு வளனும் ஏற்றமுற எல்லோரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்.

தமிழ் நாட்டுப் பண்பை ஒட்டியே இங்கு மக்கள் - தமிழர் தம் வாழ்வை நடத்துகின்றனர். இருபது நூற்றாண்டுகளுக்கு முன்னமே இம்மலேயா தமிழ் நாட்டோடு பலவகையில் தொடர்பு கொண்டு விளங்கிற்று. இந்நாட்டின் சிறந்த பேரூர்கள் இரண்டும் தமிழ் நாட்டு முறைப்படி ஊர் எனவே வழங்குகின்றன. சிங்கப்பூர், கோலாலம்பூர் என்ற இரண்டும் ஊர் என முடியும் உயரிய தமிழ்ப் பெயர்களன்றோ! இத்தகைய தமிழ் நலன் வாய்ந்த ஊரிலுள்ள தமிழ்மக்கள் தமிழர் தம் தலையாய கொள்கையாக விளங்கும் 'சமரசம்' பற்றி ஆய்ந்து அறிந்துகொள்ள வேண்டியது இன்றியமையாத தன்றோ!

சமரசம் என்பதன் பொருள் யாது? ஒன்றிய உணர்வு வாழ்க்கை என்பதே. வாழ்வில் பல்வேறு கொள்கைகள் முளைத்தலும், பரவலும் இயல்பே! மக்கள் மனந்தோறும் புத்தம் புதிய கருத்துக்களும், கொள்கைகளும் தோன்றல் முறை! ஏற்றதும்கூட. ஆனால் அக்கருத்துக்களையும், கொள்கைகளையும் விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டு, அதற்காகப் பிறரொடு போரிடுவதும், வேறுபாடுறுவதும் வேண்டற்பால தன்றாகும். எத்துணைக் கொள்கை வேறுபாடு இருப்பினும், அவ்வேறுபாடுக் கொள்கைகள் ஆய்வுக்கு அரண் செய்வனவாக அமையவேண்டுமே யன்றி, பகைக்கும் காழ்ப்புகளுக்கும் வேறுபாடுகளுக்கும் வழிகளாக அமைய லாகா! அவரவர் கருத்துக்களைக் கலந்து, ஆய்ந்து, கருத்தொருமித்த அன்பு வாழ்வில் வாழ்தல் தான் சாலச் சிறந்தது. இக்கருத்தை - அடிப்படையை வற்புறுத்துவதுதான் சமரசம். இச்சமரசம் சமயத்தை அடிப்படையாகக் கொண்டதென்று பலர் கருதுகின்றனர். ஆனால், சமயக்கொள்கைகள் நன்றாகக் கால்கொள்ளாத அந்தப் பழங்காலத்திலேயே தமிழ் நாட்டில் சமரசக் கொள்கை கால்கொண்டிருந்தது. மக்கள் மனம் ஒன்றிய வாழ்வில் உயர்ந்திருந்தது அன்று. அனைவரையும் ஒத்து நோக்கும் அரும்பண்பில் அன்றைய தமிழ்நாடு வளர்ச்சியுற்றது.

சங்ககாலப் புலவன் சமரசத்தின் உச்சிக்கிளைமீது ஏறி நிற்கின்றான். உலகை உணர்வுக் கண்களால் காண்கின்றான். உள்ளம் உணர்ச்சி அலையினிடையில் உருவாக்கப்படுகின்றது. அவ்வுருவில் ஒளி பிறக்கின்றது. பிறந்த ஒளி உலகில் வாக்காக ஒளி வீசுகிறது. இது அவன் வாக்கு.

‘ யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன
சாதலும் புதுவ தன்றே ’ (புறம் - 192)

என்று எண்ணி எழுதிக்கொண்டேபோகிறான். அவன் திறந்த உள்ளத்தை இரண்டாயிரம் ஆண்டுகள் கழியினும் நாம் காணும் வகையில் சமரசத்தை வளர்த்துவிட்டான் அந்த வள்ளற் கவிஞன். பரந்த சமரசம்! நிறைந்த கருத்து! சிறந்த உள்ளக் கிடக்கை!

எந்த வேறுபாட்டுக்கும் இடம் கொடாவகையில் கவிஞன் சமரசத்தை வாரி வீசுகின்றான். எல்லா ஊரும் நம் ஊரே, எல்லாரும் நம் உறவினரே! அங்கு நாடு, மொழி, சமயம், கருத்து எல்லா வேற்றுமைகளும் அடிப்பட்டுப் போகின்றன. அவ்வாறு வேறுபாடற்ற சமரசத்துக்கு அதே அறிஞன் வழிகாட்டுகின்றான். வேறுபாடும் காழ்ப்பும் எப்பொழுது உண்டாகின்றன; நமக்குவருகின்ற தீமையை மற்றவர் நமக்குத் தந்தார் என்று எண்ணும்போதல்லவா? ஆனால் கவிஞன் ஆய்ந்த முடிவில் அந்த எண்ணத்துக்கு இடமில்லை. அவரவர் வாழ்கின்ற முறையிலேதான் வரும் நன்மை தீமைகள் அமைகின்றன என்கின்றான். இந்த உணர்ச்சி தோன்றியபின் வேறுபாட்டுக்கு இடம் எங்கே? எத்தகைய அல்லலில் ஆழ்ந்தாலும் அதற்குக் காரணம் தானே என அறிந்தபின் சச்சரவுகள் தலைகாட்டுங் கொல்! முடிந்த முடிபாலே இன்ப துன்பங்கள் மட்டுமன்றி, இறக்கும் அந்த முடிவுவரை எல்லாம் பிறரால் நேருவன அல்ல என்ற முடிபில் நிற்கின்றான் கவிஞன். ஆம்! அந்த முடிபில்தான் சமரசம் முகிழ்த்தது. நன்மை தீமைகள் பிறரால் வருவன அல்ல என்ற உணர்வில், எல்லோரும் உறவினர் என்ற கலப்பில், யாதும் ஊரே என்ற உயர் எண்ணத்தில் தோன்றி வளர்ந்தது சமரசம். அச்சமரசம் சமயங்களிடைத் தவழ்ந்து, வளர்ந்து அனைத்தையும் ஒன்றாக்க முயன்று நின்ற நிலையையும், பிறவகைகளையும் இனிக் காண்போம்.

சமயம் என்பது யாது? ஒரு கொள்கைபற்றி வளர்வது. இன்று நாட்டில்-உலகில் பல சமயங்கள் உள்ளனவே! அவற்றின் கொள்கைகள் யாவை? அவை உலகில் போரிடுவதைக் காண்கின்றோமே, அவ்வாறு போரிடக் காரணம் என்ன? எத்தனையோ பெரும்போர்கள் சமயத்தின் பேரால் நடைபெற்றனவே. சில ஆண்டுகளாக இந்தியநாட்டில் சமயத்தின் பேரால் நடக்கும் கொள்ளையும் கொலையும் கணக்கிலடங்காவே! இப்படியா சமயம் அறிவுறுத்தும், அநீதியில் செலுத்தும் என்று எண்ணவேண்டிய நாளிலே நாம் நிற்கின்றோம். சமயங்களின் அடிப்படையையும், சமரச நோக்கை

யும், கொள்கைகளேயும் நன்கு உணரா மக்கள் பெருகிவிட்டமை தான் இந்நிலைக்கு நம்மை ஈர்த்துச் சென்றுள்ளது. எல்லாச் சமயங்களும் எண்ணின் ஒன்றே என்ற உணர்வு பிறப்பின் வேறுபாடுகளுக்கு இடமில்லை. ஆனால் எண்ணுவார் மிகச் சிலர். சைவ சமயம் சமரசத்தை நன்கு விளக்கிக் காட்டுகின்றது.

'தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி'

என்ற மணிமொழி உலகத்துக்கு எல்லாம் இறைவனாயிருக்கின்ற அவனே தென்னாட்டில் சிவன் என வழங்கப்படுகின்றான் என்பதை விளக்கவில்லையா?

'யாதொரு தெய்வங் கொண்டீர்
அத்தெய்வ மாகி ஆங்கே
மாதொருபா கனார்தாம் வருவர்'

என்ற சாத்திர அடி அக்கொள்கையை இன்னும் நன்கு வலியுறுத்துகின்றதே! எந்தத் தெய்வத்தை வணங்கினாலும், அவ்வவர் வழிபாட்டில் வருகின்ற இறைவன் ஒருவனே என்ற கொள்கையில் முகிழ்த்த அடியன்றோ இது. இந்த அடிப்படைக் கொள்கையை - உண்மையை உணராமையாலன்றோ உலகில் சமயப்போர்கள் தலைவிரித்தாடுகின்றன.

இன்று மட்டுமல்லாது சமயம் தோன்றிய அந்த நாள் தொட்டு சமயவாழ்வைக் கண்டு வருவோமேயானால் சமயம் சமரசத்தின் மேல்தான் கட்டப்பட்டது என்பது நன்கு விளக்கும். சமயத்தின் அடிப்படையே, தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராயிருத்தல்.

மற்றொன்றும் இங்கு எண்ணற்பாலது. சமயங்களெல்லாம் அன்பின் அடிப்படையிலே கட்டப்பட்டன.

'அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப் பாரே'

என்ற திருமூலர் வாக்கு அன்பு வேறு சிவன் வேறு அல்ல என்பதை வற்புறுத்தவில்லையா? இத்தகைய அன்பின் அடிப்படையில் தான் சைவம் தோன்றி வளர்ந்தது. 'அன்பே கடவுள்' என்ற கொள்கை எச்சமயத்தோர்க்கும் ஏற்ற கொள்கையன்றோ! 'இதயத்தில் அன்புடையவர்கள் பாக்கியவான்கள்' என்ற இயேசுவின் அன்பின் அறிவுறுத்து எதைக் காட்டுகிறது. இந்த அன்பின் மேல்தான் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராகும் தனிப் பண்பு முகிழ்க்க வேண்டும். அப்பண்பில்தான் துன்பம் இன்பத்தின் அடிப்படை என்ற எண்ணம் தோன்றும். தோன்றவே மற்றவர் வாழத் தாம் வருந்தினாலும் கெடுதல் இல்லை என்ற தகைமை முற்றும். அதன் முடிவிலே தான் சமரசம் முகிழ்க்கும்.

சமயத்தில் மட்டுமன்றி உலக வாழ்விலேயும் - பிறவகைகளிலேயும் எல்லாவற்றிலும் சமரசம் முகிழ்க்கத்தான் வேண்டும். சமர

சம் இன்றேல் வாழ்வில்லை. வளமில்லை. இன்றைய உலகில் ஒரு தலைமுறையில் இரண்டு பெரும்போர்களைக் கண்டோம். அடுத்த போரும் தோன்றுமோ என்ற அச்சத்தின் வாயிலில் நிற்கின்றோம். இந்த நிலை ஏன் உண்டாயிற்று? அரசியலிலே சமரசம் இல்லை. நாட்டாசையும், பிறவெறிகளும் நாடுகளைப் பிடித்து ஆட்டுகின்றன. ஒரு நாடு மற்றொரு நாட்டின்மேல் ஆதிக்கம் செலுத்த அவாவுகின்றது. மக்களினத்தவர் அனைவரும் சமம் என்ற உணர்ச்சியற்று நிறத்தால் - நாட்டால் - சாதியால் - சமயத்தால் வேறுபாடுகள் கற்பிக்கப்படுகின்றன. வெள்ளையன் கரியனை வெறுக்கிறான். கீழ் நாட்டான் மேல்நாட்டானை வெறுக்கிறான். பார்ப்பான் புலையனை வெறுக்கிறான். மகமதியன் இந்துவை வெறுக்கிறான். இப்படிப்பட்ட வெறுப்பு மனப்பான்மை வளர மக்கள் மட்டுமன்றி, பெரிய அரசியல் அரங்கங்களே-அரசாங்கங்களே முன்னின்று செயலாற்றுகின்றன. போர் முடிந்தபின் புத்துலகு காணவேண்டுமென்று உலக நாடுகள் விழைகின்றன. சென்ற போர் முடிந்த பிறகும் இதே விழைவில்தான் நாடுகள் முயன்றன. அந்த முயற்சிதான் சர்வதேச சங்கமாக உருப்பெற்றது. ஆனால் அச்சங்கம் மூலையிலேயே முடிவுற்றது. அடுத்த போர் தோன்றிவிட்டது. இப்படிப் போர் முடிந்தபின் உணர்வில் பொதுநலம் காண விழைவதும், சிறிதுநாள் கழிந்ததும் மறுபடியும் பழைய போரில் கருத்திருத்துவதுமாகிய இச்செயல் ஏன்? சுயநலமல்லவா காரணம். இன்றைக்கு உலகில் வல்லரசுகளாக இருக்கும் பேரரசுகள் பலவிடங்களில் கூட்டம் கூடிப் பேசுகின்றன. பேச்சின் நிலையில் பெருமனங்கள் ஒன்றிற்று என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். ஆங்கிலப் பேராசிரியன் 'ரஸ்கின்' என்பான் கூறியவாறு அவர்கள் தலையொடு தலை முட்டிக்கொண்டு பேசினாலும் உளங்கள் ஒன்றவில்லையே. எத்துணைதான் பேசினாலும் உளம் ஒன்றவில்லையாயின் உற்றபயன் உண்டாகுமோ?

'கூட்டத்தில் கூடிநின்று கூடிப் பிதற்றலின்றி
நாட்டத்தில் கொள்ளாரடி - கிளியே
நாளில் மறப்பாரடி'

என்ற பாரதியின் அடிகள் இங்கு நினைவிற்கு வருகின்றன. சமரசம் என்பது பேச்சளவில் அரும்புவதன்று. செயலில் செழிப்பது! வாழ்வில் வளருவது. வழக்கில் விளக்க முறுவது. இதை நினைவில் வையாத மேலைநாட்டு மக்களும் - ஏன் - கீழைநாட்டு மக்களும் கூடத்தான் சமரசம் வாயால் வந்துவிடும் என்று எண்ணுகின்றனர். மேடைகளில் ஏறி வாயாரப் பேசுகின்றனர்.

இன்றைய சமரசம் எந்த நிலையிலும் செயலில் இல்லை. சமயத்தில் சமரசம் வேண்டும் என்று கூறினோம். அச்சமரசம் எப்போது வரும்! எல்லாச் சமயங்களும் தத்தம் அடிப்படையைத் தொட்டுப் பார்த்தால் தானே! சங்ககாலப் புலவராகிய இளங்கோவடிகள், தாம் சமண சமயத்தைச் சார்ந்தவராயிருந்த போதிலும், பிறசமயங்களைப் பற்றிக் கூறும்போதும், பிறசமய தெய்வங்களை வாழ்த்

தும்போதும் அவ்வச் சமயத்தைச் சேர்ந்த சமயவாதியோ என எண்ணும்படி அழகாகப் பாட்டிசைக்கின்றார்.

'நாராயணா என்னா நாஎன்ன நாவே'

என்ற அடியை எண்ணும்போது அவர் ஒருஆழ்வாரோ என நினைக்கவேண்டியுள்ளது. குன்றக்குரவையை எண்ணும்போது குமரன்அடியாரோ எனக் கருதவேண்டியுள்ளது. 'பிறவாயாக்கைப் பெரியோன்' எனச் சிவனை ஏத்தும்போது சைவரோ என எண்ணுகிறது உள்ளம். இப்படி அன்றைய சமயத்தவர்கள் அனைத்து எல்லைகளையும் தாண்டி, அன்புச் சமயத்தில் ஒன்றி வாழ்ந்தார்கள். அவர்கள் சமய வாழ்வெல்லாம் மற்றவர்க்கென வாழ்ந்ததையே விளக்க வருவன! கடவுள் பெயரால் கண்டதை வணங்கிக் கருத்தழிந்து, காளியும் காடனும் தம்மைப் பற்ற வாழ்கின்ற வாழ்வல்ல அவர்தம் வாழ்வு! சமய வேறுபாடுகள் பல வகையில் - கருத்தில் மாறுபடினும் - அடிப்படையில் ஒன்று என்பதை அவர்கள் நன்கு உணர்ந்து இருந்தார்கள். மற்றவர்களுக்கு உதவுவதே அவர்தம் குறிக்கோள் பிறர் வாழத் தாம் வருந்துவதே அவர்தம் பணி. பிறர் வருந்தி உழைக்கத் தாம் ஆடாது அசையாது உண்டு வாழ்வதில் அவர் சமயம் அமையவில்லை. உலகத்தார் பொருட்டு உயிர் நீத்த ஏசுவை ஒரு அன்பர் மனமுருகி எண்ணுகிறார்.

'வன்கணன் படிறன் பொல்லா வஞ்சனென் றிகழ்ந்தி டாதென்
புன்கணுக்கு இரங்கி ஓர்பூம் பொழிலிடைப் புனித மூர்த்தி
நின்கணீர் சொரியச் செந்நீர் நிலத்துக வியர்த்தல் கண்டும்
என்கணீர் சொரியக் காணேன் என்செய்வான் தோன்றி னேனே'

என்ற அடிகள் எண்ணுவார் இதயத்தை நெக்குருகச் செய்வன அல்லவோ!

'எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றறியா' நிலையி லன்றோ சைவம் வளருகின்றது. இதைவிட்டு ஒரு சமயத்தான் வாழவேண்டும் என்றும், மற்றவன் தாழவேண்டும் என்றும் பேசிக்கொண்டு, உதட்டில் உறவு பேசி, உள்ளத்தில் விடம் விதைக்கும் பேதையர் வாழினும் வீழினும் என்? இத்தகைய மக்கள் இன்று சமயந்தோறும் அதிகமாகிவிட்டனர். ஆங்கில நாட்டுப் பேரறிஞர் பெர்னாட்ஷா கூறினார் 'உலகில் இருந்த ஒரே கிறிஸ்து சிலுவையில் மாண்டான்; இன்று இருப்பவர் கிராஸ்தவர்கள் (சிலுவை அணிந்தவர்) என்று! அச்சமயத்தவர் கிறிஸ்துவின் கொள்கைகளைக் காற்றில் பறக்கவிட்டார்கள். சிலுவையைப் பற்றினார்கள். கொள்கையை விட்டார்கள். பொருளற்ற சடங்குகளாம் சக்கைகளைப் பற்றினார்கள். ஆகவேதான் அதே சமயத்தைச் சேர்ந்த மக்கள் பெருவாரியாக வாழும் மேலைநாடுகளில் போர், போர் என்ற பேச்சு நிலைத்து நிற்கின்றது. கிறிஸ்தவர்களுக்குச் சொல்லிய இந்நிலை எச்சமயத்தவர்க்கும் பொருந்தும். திருநீறும், கண்டிகையும், சிவபூசையும் கொள்ளும் அந்த வெளிவேட அளவுக்கு உள்

ளத்தில் அன்பு இல்லையே சைவர்களுக்கு. இருந்தால் இத்துணை நாள் நாட்டில் சமரசம் வந்து விடாதா? ஒன்றிவாழுங்கள், சமய வேறுபாடு வேண்டாம் என்று கூறுபவர் யாராயினும் - காந்தியாயினும் - அவரைக் கொல்லத் தெரியும் அவர்களுக்கு. அவ்வளவுதான். எனவே இன்றைய வாழ்வில் - சமயத்தில் சமரசம் ஏட்டிலே - பேச்சிலே உள்ளது. சமய அடிப்படையாம் அன்பைப் பிடித்து எல்லாச் சமயங்களையும் இணைத்து வாழின் நலம் உண்டு.

சமய மடுத்து நம் நாட்டில் சாதி வேறுபாடுகள் தலைவிரித்தாடுகின்றன. 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற வள்ளுவன் வாய்மொழி பிறந்த தமிழ்நாட்டில்தான் இன்று பிறநாடுகளில் இல்லாத சாதிவேறுபாடுகளைக் காண்கின்றோம். அச்சாதிவேறுபாடுகளை நிலைநிறுத்தும் நூல்கள், சட்டங்கள் அனைத்தும் இன்னும் அங்கு கால்கொண்டுதான் இருக்கின்றன. அந்நிய ஆதிக்கம் அகன்றும் நீங்கவேண்டிய இந்த வேறுபாடுகள் இன்னும் நீங்கா வகையில்தான் நிலைத்துள்ளன. ஆனால் சாதி வேண்டாம், வேறுபாடு வேண்டாம் என்று தலைவர்களும், அரசாங்கத்தாரும் ஒருங்கே பேசுகின்றார்கள். சாதியை ஒழிக்க அவர்கள் செய்யும் வேலை ஒன்றும் காணோம். சாதி வேண்டாம் என்று வற்புறுத்தி மேடைமேல் பேசிவிட்டு சாதியை வளர்க்கும் விழா முதலியவற்றை விடாது கொண்டாடித்தான் வருகிறார்கள். ஆவணி மாதம் தமிழ்நாட்டு அரசாங்கத்தில் ஒரு விடுமுறைநாள் உண்டு. எதற்காக என்றால் சாதி உயர்ந்தவன் இவன், தாழ்ந்தவன் இவன் என்று காட்டுவதற்காக! ஆம்! அந்த விழாவிற்கு 'ஆவணி அவிட்டம்' என்று பெயர். அன்று உயர்ந்த சாதியார் என்று பூணூலால் பெருமைபேசிக்கொள்பவர்கள் பழைய பூணூலை மாற்றிப் புதிய பூணூல் அணிவர். இப்படி ஒரு சாதியார் - தம்மை உயர்ந்தவர் என்று கூறிக்கொள்ளும் சின்னம் அணிவதற்காக - அரசாங்கத்தார் அனைவருக்கும் பொதுவிடுமுறை விடுகின்றார்கள். அவர்கள் சாதியை வளர்க்கிறார்களா அல்லது அழிக்கிறார்களா? எண்ணிப் பாருங்கள். இதுபோன்று எத்தனையோ எடுத்துக்காட்டுக்கள். இப்படி ஒருபுறம் சாதியை வளர்த்துக்கொண்டே சாதி ஒழிய வேண்டும் என்று பிரசாரம் புரிவாரானால் ஒன்று அவர்கள் நாட்டு மக்களை ஏமாளிகள் என்று எண்ணி இருக்கவேண்டும். அல்லது அவர்கள் வந்தவாறு பேசும் தன்னலப்போக்காளராக இருக்க வேண்டும். உண்மையாகச் சாதி ஒழியவேண்டுமானால் சாதியைக் குறிக்கும் எந்தச் சடங்கும் எங்கும் தலைகாட்டலாகாது. எந்தப் பொதுவிடத்திற்கும் யாரும் தடைஇல்லாது செல்ல ஏற்பாடு செய்யவேண்டும். சாதியை வளர்க்கும் மனுநீதிபோன்ற சட்டங்கள் மறையவேண்டும். இவற்றையெல்லாம் செய்யாது நேரடியாகச் சாதியை வளர்த்துக்கொண்டு, இக்குற்றங்களை விளக்கிக் காட்டிச் சமரசம் விழைபவர்கள் 'வகுப்புத் துவேஷிகள்' என்று நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருந்தால் சமரசம் எப்படி நிலவும். ஆகவே சாதியில் சமரசம் வேண்டுமானால் அன்றைய தமிழ்ப் புலவன் கூறிய 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற

சொல் வழக்கில் வரவேண்டும். அன்றே சாதியில் சமரசங் காணலாம். இப்படியே எத்தனையோவகையில் சமரசங்களைக் கண்டு கொண்டேபோகலாம். சமயத்தில் சமரசம், அரசியலில் சமரசம், சாதியில் சமரசம் கண்டோம். வாழ்வின் பல பகுதிகளிலும் சமரசம் காணவேண்டியவர்களாக உள்ளோம், இன்றைய உலகத்தில் வாழ்கின்ற நாம். அவற்றில் சிறப்பாக வேண்டப்படுவது பொருளாதாரத்தில் சமரசமாகும். அச்சமரசம் நிலைக்க அல்லும் பகலும் பலர் பாடுபடுகின்றனர்.

இன்று உலகெங்கணும் பேசப்படுவது பொருளாதாரச் சமரசம். ஒருவன் ஏழையாகவும், மற்றொருவன் செல்வனாகவும் இருப்பதை நம் நாடுகளில் மிக எளிதாகக் காண்கிறோம். ஒருவன் உழைத்தும் போதிய உணவில்லாதிருப்பவும் மற்றவன் உழைக்காது மிகுதியான பொருள் ஈட்டுவதையும் காண்கிறோம். இந்த வேறுபாடு கூடாது என்பது இன்றைய அறிவியல் அறிஞர் கருத்து. உழைப்பவன் உழைப்புக்கேற்ற பயன்பெறவேண்டும் என்பது அவர்கள் விருப்பம். அந்த விருப்பத்துக்கு மாறாக செல்வர்கள் உள்ளனர். தம் தகுதியை - செல்வநிலையை விட்டுக் கொடுக்க அவர்கள் விரும்பவில்லை. இது தனிப்பட்ட மனிதருக்குள் நடப்பது. இதே நிகழ்ச்சி நாட்டுக்கும் நாட்டுக்கும் நடைபெறுகின்றது. ஒருநாடு அடிமைவாழ்வில் அனைத்து இன்பத்தையும் இழந்துவாட, மற்றொரு நாடு எல்லாச் செல்வத்தையும் கொள்ளைகொள்ளுகின்றது. மேற்கு கிழக்கை அழுத்தப்பார்க்கிறது. வடக்கு தெற்கை வாட்டப் பார்க்கிறது. இந்தக் கொடுமைதான் வளர்ந்து வளர்ந்து போராட்டமாகிறது. இன்றைய உலகப் போராட்டங்களெல்லாம் பொருளாதாரத்தை ஒட்டியே உண்டாகின்றன என்பதை வரலாற்று அறிஞர்கள் நன்கு விளக்கியுள்ளார்கள். எனவே தனிமனிதனாயினும் நாடாயினும், நாட்டில்-உலகில் - சமரசம் நிலவவேண்டும் என்ற நினைப்பில் இருப்பின் பொருளாதாரச் சமத்துவம் முதலில் செழிக்க ஆவனசெய்யவேண்டும். ஏழை பணக்காரன் என்ற வேறுபாடும், நாட்டை நாடு நலியுறுத்தும் கொடுமையும் நிலைபெறச்செய்து-உலகில் சமரசமும் சமாதானமும் நிலவவேண்டும் என்று பேசுவது பயனற்றதாகும். இன்றைய உலகம் விழித்துவிட்டது. உழைப்புக்கு முதல் இடம் கொடுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. மக்கள் கண் திறந்து பார்க்கத் தலைப்பட்டனர். எல்லா நாடுகளினும் எல்லாச் சமரசமும் இயையவேண்டும் என்ற எண்ணம் தோன்றி வளர்ந்துவருகிறது. எனவே யார் விரும்பினும் விரும்பாவிட்டாலும் உலகில் மக்கள் உணர்ந்து அவர்வழி சமரசம் கால்கொள்ளும் என்பது உறுதி.

இனி. சமரசம் முகிழ்க்கும் வழியைச் சிறிது காணலாம். எல்லாவகையிலும் அனைவரும் ஒன்றிவாழ்வதே சமரசம் என்றோம்! நாட்டுக்கு நாடும், வீட்டுக்கு வீடும் வேறுபாடு காணுதிருப்பதே சமரசம் என்றோம். ஆம்! இச்சமரசம் எப்படித் தோன்றும்? 'தன்னைப்போல் பிறரிடம் அன்புகூர்க' என்ற இயேசுவின் மொழி இதற்கு வழிகாட்டும். உன்னையும் மற்றவனையும் வேறு

என்று கருதாது ஒத்துநோக்கின் அந்த உளத்தில் சமரசம் அரும்பும். 'தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்ற பழந்தமிழ்ப் பாட்டனது பாடல் உளத்தில் உரம்பெறின் பின் வேறுபாட்டுக்கு இடம் ஏது? எல்லாச் சமயங்களும் இந்த உண்மையை வலியுறுத்துகின்றன. அவரவர் வரும் நன்மை தீமையைத் தம்மதே என்று கருதினால் மாற்றான்மேல் மாறுபாட்டு உணர்வு தோன்றாதே! 'எச்சமயத்தோர் சொல்லும் தீதொழிய நன்மைசெயல்' என்ற ஔவையின் வாக்கு இதையன்றோ வற்புறுத்துகின்றது. மற்றவனுக்கு மறந்தும் கேடு சூழற்க என்பதன்றோ சமயத்தின் அடிப்படை.

விவேகானந்த அடிகள் இப் பெருங்கருத்தினைத் தம் வேதாந்த வழியில் விளக்குகின்றார். இன்பம் பெறுபவனும், தருபவனும், துன்பம் பெறுபவனும், தருபவனும் ஒருவன் என்கின்றார். அவர் கூறுவது இதோ மொழிபெயர்ப்பில் தரப்படுகிறது.

'ஏயநன் மாலை வேயினும் அதன்மேல்
மனவிருப் பெய்தி மகிழவும் வேண்டா
யாக்கையை ஒருவன் தாக்கி உதைப்பினும்
கோப தாபம் கொள்ளவும் வேண்டா
புகழ்கின் றோனும் புகழ்உறு வோனும்
இகழ்கின் றோனும் இகழ்உறு வோனும்
ஏகனே அன்றி அநேகரே அலர்'

என்பது அவர் கருத்து. ஆகவே வரும் இன்ப துன்பங்களை ஏற்று அதனால் எந்த வேறுபாட்டையும் வளர்க்காத உண்மை நெறியிலே தான் சமரசம் முகிழ்க்கும். வாழ்வு அனைவருக்கும் பொதுவன்றி ஒருசிலருக்கு என்ற வகுக்கப்பட்டதன்று என்று எண்ணும் இன்ப அன்பில்தான் சமரசம் முகிழ்க்கும். நாட்டுச்செல்வமும் நலங்கீங்குகளும், அந்நாட்டில் வாழும் எல்லாருக்கும் உரித்தே ஒழிய ஒருசிலருக்கு உரித்தன்று என்ற உணர்விலேதான் சமரசம் தோன்றும். எல்லாச் சமயங்களும் அன்பின் அடிப்படையின் அமைந்தன; ஆகவே அவற்றுள் வேறுபாடு இல்லை; எல்லாச் சமயங்களும் ஒன்றே என்ற தத்துவ நெறியில்தான் சமரசம் கால்கொள்ளும். பிறப்பால் உயர்வு தாழ்வு இல்லை; மக்களாய்ப் பிறந்தார் அனைவரும் சமமே; அவர்கள் அனைவரும் உடன்பிறந்தவர்கள் என்ற உறுதியிலேதான் சமரச உணர்ச்சி உதித்தோடும். நிறத்தாலும், நாட்டாலும் பிறவற்றாலும் வேறுபாடுகள் இன்றி 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பது வாழ்விடை வரின்தான் சமரசம் வளரும் என்ற உணர்ச்சி மக்கள் உள்ளத்தில் மலர வேண்டும். இவை பொன் எழுத்தால் எழுதப்பெறவேண்டும். மக்கள் மனம் இவ்வுண்மையை உணரவேண்டும். வாய்ப்பேச்சு வேண்டாம். செயல் சிறக்கவேண்டும். அதற்குக் காலம் இதுவே! விழிமின்! உணர்மின்! ஒன்றிய உணர்வில் சமரசம் காண்மின்! காண்மின்! காண்மின்!

தமிழும் சமயமும்

உலகிலே பல மொழிகள் உள்ளன. அவை வழங்கும் நாடுகளும் பல! நம் இந்திய நாட்டில்கூடப் பல மொழிகள் பல பிரிவுகளில் வழங்கப்பட்டு வருவதைக் காண்கின்றோம். அம்மொழிகளிலெல்லாம் தொன்மை வாய்ந்தது தமிழ் மொழி என்றால் அது மிகையாகாது. மொழிக் குடும்பங்களிலெல்லாம் மிகப் பழமை வாய்ந்தது திராவிட மொழிக் குடும்பம் என்று நேரு போன்ற பெரியவர்களெல்லாம் கூறி இருக்கிறார்கள். அந்தத் திராவிட மொழிக் குடும்பத்தின் தாயாகி, முதன் மொழியாகி நிற்பது தமிழ் மொழியாகும். தொல்காப்பியனார் காலத்திலேயே - சில ஆராய்ச்சியாளர் கணக்குப்படி இன்றைக்கு 7000 ஆண்டுகளுக்கு முன்பே - தமிழ்நாட்டில் சிறந்த இலக்கிய இலக்கணங்கள் விளக்கமுற்று நின்றன என்பது அறியக் கிடக்கின்றது. வடக்கே இமயமும் கங்கையும் இல்லாத அந்த நாளிலே - தெற்கே குமரியும் கபாடபுரமும் தமிழ் நாட்டை அணிசெய்த அந்தக் காலத்திலே - தமிழில் சிறந்த இலக்கியங்கள் தழைத்து நின்றன. தமிழர்தம் பீடும் பெருமையும் கால எல்லையையும் கடந்து நிற்பனவாகும். கிழக்கே இதோ இன்று நான் நிற்கும் மலேயா நாட்டையும், மேற்கே மடகாஸ்கர் தீவையும் ஒன்றுபடுத்திய ஒரு நிலப்பரப்பில் தமிழ் வாழ்ந்த தென்றும், அப்பரப்பு பின் கடலால் கொள்ளப்பட, ஆழ்ந்த வடகடலிலிருந்து இமயமும் பிறவும் எழுந்தன என்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர். சிலப்பதிகாரம் என்ற செந்தமிழ் இலக்கியம் இக்கருத்தை வலியுறுத்துகின்றது.

> ‘அடியிற் றன்னள வரசர்க் குணர்த்தி
> வடிவேல் எறிந்த வான்பகை பொறாது
> பஃறுளி யாற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
> குமரிக்கோடும் கொடுங் கடல் கொள்ள
> வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
> தென்திசை யாண்ட தென்னவன் வாழி’

என்ற இளங்கோவடிகள் எழுத்து இதனை வலியுறுத்தும்.

இத்தகைய தொன்மைவாய்ந்த தமிழ்நாட்டில் தமிழ் மொழியும் தன் எழில் நலம் குன்றாவகையில் ஏற்றமுற்று விளங்கிற்று. தமிழில் இல்லாப் பொருள் ஒன்றும் இல்லை எனும்படி எல்லாச் சிறப்புக்களும் விளங்கின. அந்தக் காலத்திலேயே தமிழ் நாட்டு இலக்கியங்களில் சமயக் கருத்துக்கள் தோன்றலாயின!

சமயம் என்ற உடன் இன்று நாட்டில் மதவெறி கொண்டு, மக்களைக் கொன்று குவிக்கும் சமயம் என எண்ணல் வேண்டா! சமயம் என்பது நல்ல கொள்கையின் மேல் கட்டப்பட்டது. தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனாக வாழ்வதே சமயத்தின் அடிப்படை. எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே சமய உணர்வு. இன்பதுன்பங்களை எந்த வேறுபாடும் இன்றி ஏற்று வாழ்வதே சமய வாழ்க்கை. எல்லாரும் ஒரு குலம், என்று எண்ணுவதே சமய நலன். இத்தகைய சமயக் கொள்கை தமிழ் நாட்டில் சமயம் என்ற பெயர் தலைகாட்டா முன்பிருந்தே வழக்கத்தில் இருந்து வந்தது.

வளமார்ந்த சமயக் கொள்கையுடைய இத் தமிழர்கள் அந்தப் பழைய காலத்தே அழகை அனுபவிக்கக் கற்றவர்கள். வாழ்வில் தூய்மையும் எழிலும் காண வாழ்ந்தவர்கள். உலகின் எழிலையும் இனிமையையும் கண்டு இன்புற்றவர்கள். தம் கருத்துக்கு ஏற்ப அழகார் சோலைகளும், மலைகளும் பிறவும் மகிழ் நலம் அளிப்பதை எண்ணி எண்ணி அவர்கள் உள்ளத்தில் இன்ப ஊற்றுப் பெருக்கெடுத்தது. அந்த இன்ப ஊற்றுக்கு நிலைக்களனாக நின்ற இயற்கையை வாழ்த்தினர்; வழுத்தினர். அந்த வாழ்த்தே சமய வணக்கத்திற்கு அடிப்படையாக அமைந்தது.

இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தமிழர்கள் இயற்கையை - தமக்கு இன்பந்தரும் எழிலார் இயற்கையை - எண்ணினார்கள். எண்ண அலை இதய எல்லையைத்தாண்டி வாழ்த்தாக வந்தது. வாயார வாழ்த்தினார்கள். வாழ்த்து வணக்கத்தில் சென்று முடிந்தது. நல்வுணர்வில்-நல் வாழ்த்தில் - முளைத்த வணக்கம் இயற்கை வணக்கமாக - எழில் வணக்கமாக முடிந்ததை எண்ண இதயம் களிக்கும்.

பண்டைத் தமிழர் இயற்கையைத் தெய்வமாக வழிபட்டவர்கள். அழகைத் தெய்வமெனப் போற்றினார்கள். அழகை அழகன் என்றார்கள். அழகன் முருகன் ஆனான். பின்னால் முருகனுக்கு என்று முளைத்த கதைகள் பல. நக்கீரர் இந்த முருகனைப் பாடுங்கால் 'என்றும் இளையாய் அழகியாய்' என்று ஏத்தி இருக்கின்றார். எனவே தமிழ் மக்கள் இயற்கையிலே—எழிலார் அழகிலே இறைவனைக் கண்டார்கள், அந்தத் தொடக்க நாளிலே. பாரதியார் பாநலம் நாட்டிற்குத் தெரியும். அவர் கவிஞர் ஆதலால் பழமையை எண்ணிப் பார்க்கிறார். அழகிடைத் தமிழர் கண்ட கடவுள் உணர்ச்சி தெரிகின்றது. கலைமகளை அந்த நிலையில் காண்கின்றார் அவர். எங்கெங்கே இயற்கையும் எழிலும் உண்டோ, அங்கங்கே கலைமகளைக் காணலாம் என்பது அவர் கருத்து.

'மாதர் தீங்குரல் பாட்டில் இருப்பாள்
மக்கள் பேசும் மழலையில் உள்ளாள்
கீதம் பாடும் குயிலின் குரலைக்
கிளியின் நாவை இருப்பிடம் கொண்டாள்

கோதகன்ற தொழில் உடைத் தாகிக்
குலவு சித்திரம் கோபுரம் கோயில்
ஈதனைத்தின் எழிலிடை யுற்றுள்
இன்பமே வடிவாகிடப் பெற்றுள்'

என்பது அவர் மொழி! எனவே தமிழரது சமய உணர்வுத் தொடக்கம் இயற்கையில் - எழிலில் முகிழ்ந்ததென்பதும், அதுவே காலப் போக்கில் பல்வேறு வகையில் மாறி வந்துள்ள தென்பதும் அறியக் கிடக்கின்றது.

இயற்கை வழிபாட்டைப்பற்றி மற்ருென்றும் கூறவேண்டியுள்ளது. தமிழ் நாட்டில் இயற்கை நிலையங்களில் கடவுளை வழிபடுகின்ற நிலைக்கு கேதார கௌரி விரதமும் ஒரு எடுத்துக் காட்டாகும். கேதாரணி என்பதற்கு வயல் என்பது பொருள். வயலிடை-வளமார் எழிலிடை-மக்கள் கொண்டாடும் விரதமே கேதார விரதமாயிறறு. மற்றும் தமிழ் நாட்டில் உள்ள பெருங் கோயில்களிலெல்லாம் தலவிருட்சம் என்ற பெயரில் மரங்கள் உள்ளனவே! அம்மரங்களின் அடியிலேதான் பண்டைத் தமிழர் தாம் கொண்ட கடவுளரை வழிபட்டு வந்தனர் என்பது வெளிப்படை.

இவ்வாறு இயற்கை வாழ்வில் தோன்றிய தமிழர் சமய நெறியில் பல கருத்துக்களும், கொள்கைகளும் நாள் ஏறஏற வந்து சேரலாயின. கடைச்சங்க இலக்கியங்களில் பல சமயக் கொள்கைகளையும், பிற நிலைகளையும் காண்கின்ருேம். சமயத்தை வாழ வைப்பதற்கு அன்பே அடிப்படை என்று கண்டார்கள் அறிஞர்கள். சிவனை வழிபட்ட திருமூலர் சிவன் வேறு அன்பு வேறு என்று காணவில்லை.

'அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப் பாரே!

என்பது அவர் வாய்மொழி. எனவே இயற்கை வழிபாட்டில் தோன்றிய தமிழர் சமயம் அன்புச் சமயமாக அலர்ந்தது. சங்க காலத்தும், இடைக்காலத்தும் தோன்றி, சமயம் வளர்த்த பெரியார்கள் இவ்வன்பினை அடிப்படையாகக் கொண்டே தம் சமயத்தை ஓம்பினர். அன்புடன் இயைந்த பிற அறச்செயல்களும், அருநெறிகளும் சமய நிலையங்களாயின. அந்த நாளில்—அன்புச் சமயம் வாழ்ந்த நாளில் வேடிக்கைகளுக்கும், விழாக்களுக்கும், பிற விளையாட்டுகளுக்கும் அதில் இடமில்லை. கோயில் குளங்களுக்குக் கூட முதலிடம் கொடுக்க வில்லை சமயத் தலைவர்கள். அவைகள் சமயத் துறையில் ஒரு படியேயன்றி, அதுவே சமய உணர்வின் முடிவு என்று அவர்கள் கொள்ளவில்லை. உள்ளத்தில் அன்பு கொண்டு தன்னைப்போல் மற்றவரை நேசித்துப் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பி வாழ்த்தலே சமயவாழ்வு என்று கொண்டார்கள். மற்றக் குறிகள்

கோயில்கள், நூல்களெல்லாம் அதற்குப் பின்னால் வருவனவே என்பது அவர்கள் சமய நெறி.

> ' நடமாடும் கோயில் நம்பர்க் கொன்றீயில்
> படமாடும் கோயில் பரமர்க் கங்காகும் '

என்றது அன்றைய சமய நெறி. அப்பர் அடிகள் மெய்ச்சமய நெறி வளர்த்தவர். அவர் கூறுகின்றார், சமயத்துக்கு அடிப்படை மாசற்ற மனத்திடைத் தோன்றும் அன்பே என்று.

> ' குறிகளும் அடையாளமும் கோயிலும்
> நெறிகளும் அவர் நின்றதோர் நீர்மையும்
> அறிய ஆயிரம் ஆரணம் ஓதிலும்
> பொறியிலீர் மனம் என்கொல் புகாதே '

என்பது அப்பர் தேவாரம்.

பிற்காலத்தில், ஏன் - தற்காலத்திலும் கூட சமயத்தின் அடிப் படை வீழ்ந்தது. பொருளற்ற சடங்குகள் தழைந்தன. இதைக் கண்டுதான் அப்பர் பெருமான் அவ்வாறு கூறினார். இயேசுநாதர் கோயில்கள் கள்ளர்தம் குகைகளாயின என்று கூறவில்லையா! இன்று மக்கள் - மதவெறிகொண்ட மக்கள் வெறும் பகட்டையும், வெளிவேடங்களையுமே சமயமென்று காட்டி, சமய அடிப்படை யான அன்பைக் காற்றில் பறக்க விடுகின்றனர். ஆண்டவனை அன் பால் வழிபடுவது நீங்கி, ஆடம்பர விழாக்களால் வழிபடுவதாகக் காட்டுகின்றனர். ஆடையாபரணங்களால் தம்மை அழகு செய்து கொண்டு ஆண்டவன் கோயிலுக்குப் போகின்றனர். ஆனால் உள்ளத்தை அழகு செய்யும் அன்பு இல்லை. அங்கு எப்படி ஆண்ட வன் வருவான். இக்கருத்தை அழகு படக் காட்டுகின்றார் பாரதி தாசனார்.

> தலைகாது மூக்குக் கழுத்துக் கைமார்பு விரல்
> தாள் என்ற எட்டுறுப்பும்
> தங்கநகை வெள்ளிநகை ரத்தின மிழைத்தநகை
> தையலர்கள் அணியாமலும்
> விலைகுறையும் ஆடைகள் அணிந்துமே கோயில்வர
> வேண்டுமென்றே பாதிரி
> விடுத்ததொரு சேதியால் விடமென்று கோயிலை
> வெறுத்தார்கள் பெண்கள் புருஷர்
> நிலைகண்ட பாதிரிபின் எட்டுறுப்பே யன்றி
> நீள்இமைகள் உதடு நாக்கு
> நிறையநகை போடலாம் கோயிலில் முகம்பார்க்க
> நிலைக் கண்ணாடியும் உண்டென
> இலைபோட் டழைத்ததும் நகைபோட்ட பக்தர்கள்
> எல்லாரும் வந்து சேர்ந்தார்
> ஏசுநாதர் மட்டும் அங்குவர வில்லையே
> இனிய பாரத தேசமே !

என்றார் அவர். எனவே அன்பில் முளைத்த அருந்தமிழ்ச் சமயம் இன்று இப்படி வன்பில்—வழக்கில்—வீணில் கெடுகிறது. அதனால் தான் சமயத்தின் பேரால் கொள்ளையும் கொலையும், போரும் நடை பெறுகின்றன. சமயங்கள் அடிப்படையான அன்பைப் பற்றின் அன்று உலகம் உய்யும்! உண்மைச் சமயம் வாழும்.

இனி சமயக் கருத்துக்கள் தமிழ் இலக்கியங்கள் எவ்வெவ் வாறு வாரி வழங்குகின்றன என்பதைக் காணலாம். தமிழ்நாட்டு இலக்கியங்களில் தொன்மை வாய்ந்தன சங்க இலக்கியங்கள். அவற்றுள் சமயங்களைப்பற்றிய குறிப்புகள் வருகின்றன. சங்க காலத்தே தலை நிமிர்ந்து வாழ்ந்த சமயம் சைவமாயினும் வைணவ மும், பௌத்தமும், சமணமும்கூடக் கால்கொண்டிருந்தன. கடவு ளரைப் பற்றிய பல கதைகளும், கருத்துக்களும் இடம்பெறலாயின. எல்லாச் சமயத்தவரும் சைவம் சிறந்தது என்பதை ஒப்புக்கொள்ளு கின்றனர். சைவரும் பிற சமயத்தாரோடு கலந்து, தம் சமயத் துடன் அவர் சமயமும் கலந்து வாழும் வழியில் நின்றனர்.

சங்க காலத்தே தமிழில் சமயங்களுக்கெனத் தனி இலக்கிய நூல்கள் இல்லை. பிற்காலத்தே காணும் தேவார திருவாசகம் போன்ற தோத்திர இலக்கியங்களும், பிற புராண இலக்கியங் களும், கோவை உலா அந்தாதி போன்ற பிற சமய இலக்கியங் களும் அன்று கிடையா! ஒரே சமயத்துக்கு உரிய இலக்கியம் என்றோ, ஒரு சமயத்தைப் புகழுங்கால், மற்றொரு சமயத்தை இகழும் இலக்கியம் என்றோ இலக்கியங்கள் சமயத்தில் இல்லை. அவை பிற்காலத்தே தோன்றியவை. சங்க காலத்தில் வாழ்வையே பெரிதாக விரும்பி மக்கள் வாழ்ந்தார்கள். ஆகவே வாழ்க்கையைப் பற்றிய இலக்கியங்கள் பல! நூல்கள் பல! வாழ்க்கை நுணுக்கங் களை ஆய்ந்து விளக்கும் அருங்கலைகள் பல! அந்த இலக்கியங் களுக்கு இடையில்—கலைகளுக்கு நடுவில் கடவுளைப் பற்றிய கருத் துக்கள் வருகின்றன. கடவுளைப் பற்றிய அன்பு நெறியும், பிற கதைகளும் கடைச்சங்க நூல்களிலேயே இடம் பெற்றுள்ளன. சிவ னைப்பற்றிய கதைகளும், திருமால்,முருகன் போன்றோரைப் பற்றிய கதைகளும் சங்க இலக்கியங்களில் இடம் பெறுகின்றன. வீதி தோறும் காணும் விநாயக வணக்கம் இந்நாட்டில் அன்று இல்லை. அது ஏழாம் நூற்றாண்டில் பரஞ்சோதியார் வாதாபியை வென்ற பிறகே நம் நாட்டுக்கு வந்திருக்க வேண்டும். விநாயகரைப்பற்றி முதல் விளக்கும் தமிழ் இலக்கியமும் ஏழாம் நூற்றாண்டில் எழுந்த தேவாரமேயாகும். சங்க இலக்கியங்களில் வேறு நிலத் தெய்வங் களும் பிற சிறு தெய்வங்களும்கூடக் குறிக்கப் பெறுகின்றன. இனி நூல் வழிச் சென்று காண்போம்.

சங்க இலக்கியங்கள் சிவனைப்பற்றிப் பலவகையில் புகழ்கின் றன. அவற்றுள் ஒன்று அவன் இயற்கையோடு வாழ்ந்தவன் என் பது. அவன் ஆலமர் செல்வன் என்று குறிக்கப்படுகின்றான். கோயில் கள் உண்டாவதற்கு முன் மர நிழல்களில் வைத்து இறைவனை வழி பட்டார்கள் என்று முன்னமே கண்டோம். ஆல் நிழல் பலருக்கும்

இருக்க இடம் அளிக்கும் பரந்த இடமாதலால் அங்கு அனைவரும் ஒன்று கூடி ஆண்டவனை - சிவனை - வழிபட்டார்கள் என்று தெரிகின்றது.

‘ நீலநாகம் நல்கிய கலிங்கம்
ஆலமர் செல்வற் கமர்ந்தனன் கொடுத்த
சாவம் தாங்கிய சாந்துபுலர் திணிதோள்
ஆர்வ நன் மொழி ஆயும் ’

என்று சிறுபாணாற்றுப்படை அவனது ஆலமர் அழகையும்

‘ நீல மணிமிடற்று ஒருவன் போல மன்னுக’

என்று புறம் (91) அவனது நீலகண்டத்தையும்.

இமயவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்
உமையமர்ந் துயர்மலை இருந்தன னாக
ஐயிரு தலையின் அரக்கர் கோமான்
தொடிப் பொலி தடக்கையின் உறப்புகுந் தம்மலை
எடுக்கல் செல்லாது உழப்பவன் போல

எனக்கலித்தொகை (38) அவனது உமையொடு கூடிய இமய வாழ்வையும், மேருவை வில்லாக்கியதையும், இராவணன் கைலையின்கீழ் கிடந்ததையும் விளக்க வருகின்றன. பல்வேறு வகையில் கடவுளைப் பரவினர் என்பதை,

‘ பரவியும் தொழுதும் விரவுமலர் தூவியும்
வேறுபல் உறுவில் கடவுள் பேணி
நறையும் விரையும் ஓச்சி ’

என்று பத்துப்பாட்டில் ஒன்றாகிய குறிப்பாட்டு விளக்கின்றது. இனி முருகன் சூரனைக் கொன்ற சிறப்பினை

‘ நளியிரும் பரப்பின் மாக்கடல் முன்னி
அணங்குடை அவுணர் ஏமம் புணர்க்கும்
சூருடை முழுமுதல் தடிந்த பேரிசை
கடுஞ்சின விறல் வேள் ’

என்று பதிற்றுப்பத்து பாராட்டுகிறது.

இவர்களை யன்றித் திருமால்போன்ற பிற கடவுளர்களையும், நிலத்துக்குரிய பிறகடவுர்களையும், அவரவர்களுக்கு உரிய கொடி, கோயில் முதலியவைகளையும் விளக்கும் பாடல்கள் பலப்பல! நாஞ்சிற் கொடியும், பனைக்கொடியும், புட்கொடியும், பிற கொடிகளும் உடைய தெய்வங்கள் போற்றப் படுகின்றன. இத் தெய்வங்களை யன்றி வீரர்களைத் தெய்வமாக வழிபட்ட முறையும் தமிழ் நாட்டில் காணும் தலை சிறந்த வழக்கமாகும். இன்று கல்லுருவில்

காணும் தெய்வங்கள் அன்று இல்லை என்றும், வீரரையே கல்லில் செதுக்கி வழிபட்டார்கள் என்றும் சங்க இலக்கியம் நமக்கு எடுத்துக் காட்டுகின்றது. 'அணுவுக்கணுவாய் அப்பாலுக் கப்பாலாய். எங்கும் பரந்த இறைவனை, ஒரு சிற்றுருவில் அடக்கி, அதற்குச் சீரும்சிறப்பும் செய்வதோடு, தான், தெய்வத்திற்கு ஆற்றவேண்டிய கடன் முடிந்துவிட்டது என்று கருதுவோருக்கு இது ஒரு எடுத்துக் காட்டாகும்.

தமிழ்நாட்டில் வீரர் சிறந்த முறையில் போற்றப்பட்டார்கள். அடியவர்களது அரு நெறியையும் அற வாழ்வையும் விளக்க வந்த சேக்கிழார் அவர்தம் வீரத்தைப் போற்றுகின்றார். 'ஈரநெஞ்சினர் யாதும் குறைவிலர், வீரம் எம்மால் விளம்பும் தகையதோ' என்றார் அவர். எனவே வீரர் வழிபாடு—கல் நாட்டி வழிபடும் சிறப்பு தமிழர்க்குச் சிறந்தது என்பதும், அந்த வீரக் கல்வழிபாடே பிற கடவுளர்களுக்கும் கற்சிலை சமைக்கக் காரணமாக அமைந்தது என்பதும் அறியக் கிடக்கின்றது.

> 'ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி
> ஒளிறேந்து மருப்பின் களிறெறிந்து வீழ்ந்தெனக்
> கல்லேபரவின் அல்லது
> நெல்லுகுத்துப் பரவும் கடவுளும் இலவே' (புறம் 335)

என்ற அடிகள் இக்கருத்தை வலியுறுத்துகின்றன. இப்படி சங்க இலக்கியங்கள் சமயக்கருத்துக்களைத் தொட்டுக்காட்டிக்கொண்டே செல்லுகின்றன. பின் சங்க காலத்தை ஒட்டி எழுந்த ஐம்பெருங் காப்பியங்கள் சமய இலக்கியங்களாக இல்லையாயினும், சமயத்தை வலியுறுத்தத் தலைப்பட்டன என்பது தெரிகின்றது. மணிமேகலை, சீவகசிந்தாமணி போன்றவை ஒரு சமயத்தை உயர்த்திப் பேசும் அளவுக்கு உரம் பெற்றுவிட்டன. அக்காலத்தே தமிழ் நாட்டில் பௌத்தமும் சமணமும் தலை சிறந்த சமயங்களாகி நின்றன. எனவே ஐஞ்சிறு காப்பியங்களும், பிற சிற்றிலக்கியங்களும் அச்சமயங்களைப் போற்றும் வகையில் தமிழில் தழைத்தன.

ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தே சமணமும் பௌத்தமும் வீழ, சைவ வைணவம் தலை நிமிரலாயின. ஆகவே அந்த இரு சமயங்களைப் பற்றிய இலக்கியங்கள் எழலாயின. அக்காலத்திலேயே சமயங்களில் சடங்குகள் அதிகமாகப் புகுந்தன என்பது நன்கு விளங்குகின்றது. அப்பர் போன்ற மெய்யடியார்கள் அத்தகைய சடங்குகள் பயனற்றன வென்றும், அன்பே அடியவர்க்கும் சமயவழி நிற்பவர்களுக்கும் ஏற்றதென்றும் அடிக்கடி வற்புறுத்தி வருகின்றனர். சாதி வெறியும், சமய வெறியும், பிற வேறுபாட்டு வெறிகளும் அக்காலத்தில் கால்கொள்ள ஆரம்பித்தன. அது வரையில் தமிழ்நாட்டில் காணமுடியாத பல கொடும் வேறுபாடுகள் கடவுளர் பேரால் நாட்டில் நடமாடத் தொடங்கின. அடியார் சிலர் அவற்றை வெறுத்து ஒதுக்க விழைந்த போதிலும்,

பெரும்பாலோர் அவ்வேற்றுமைகளை வளர்த்தார்கள் என்றே விளங்குகிறது. அப்பர் போன்ற அடியவர்கள், நம்மாழ்வாரைப் போன்ற பெரியவர்கள் வேறு எந்த வகையிலே - நிலையிலே சாதி வேறுபாடு முதலியவற்றைக் கண்டபோதிலும், கடவுள் பெயரிலாவது - சமய வழியிலாவது எல்லா வேறுபாடுகளையும் விட்டு ஒன்றுகுங்கள் என உணர்த்துகின்றனர். வேற்றுமைக்குள் ஒற்றுமை காண அத்தகைய பெரியார்கள் விழைந்தபோதிலும் வேற்றுமை வேற்றுமையாகவே வேர்விட்டு வளரலாயிற்று. இவ்வளர்ச்சி இன்னும் பிற்காலத்தே தோன்றிய சிறு பிரபந்தங்களில் நன்கு விளங்குகின்றன. பிற்காலத்தில் ஒரு சமயம் மற்றொன்றைப் பழிப்பதனாலேயே காலம் கழித்தது என்றுகூடச் சொல்லாம்.

காலம் செல்லச் செல்ல தமிழ் நாட்டில் பிற சமயங்கள் குடி புகுந்தன. பௌத்தம், சமணம், சைவம், வைணவம் என்ற பெருஞ் சமயங்களும், அவற்றுள் அவ்வப்போது கிளைத்த உட்சமயங்களும் இங்கே இருக்க, வெளியே இருந்து மகமதிய சமயமும், கிறிஸ்தவ சமயமும் அவற்றின் உட்பிரிவுகளும் இங்கு வந்தன. இன்று தமிழ் நாட்டில் இல்லாத சமயமில்லை. ஒவ்வொரு சமயத்திற்கும், கிறிஸ்தவ சமய மகமதிய சமயங்களுக்குக்கூட இலக்கியம் உண்டு இன்று தமிழில் எல்லாச் சமய இலக்கியங்களும் இருக்கின்றன. மனம் உருக்கும் பாடல்கள் எல்லாச் சமயங்களிலும் இன்று இருப்பதை அறிஞர் அறிவர். ஒவ்வொன்றும் தம் தம் கருத்தை வலியுறுத்துகின்றன !

உலகம் மாறும் இன்றைய வேகத்தில், இத்துணை சமய வேறுபாடுகளுக்கு இடையே சமரசம் காண முயல்கின்றனர் சில அறிஞர்கள். அந்த முயற்சியில் தமிழ் நாட்டில் முதல் முளைத்தது இராமலிங்கரது அருட்பா வாகும். இன்று பலர் சமய வேறுபாடுகளை நீக்கி ஒருவழிப் பட விழைகின்றனர். அதுவும் அரசியல் காரணமாகக் கடந்த சில ஆண்டுகளாக இந்தியாவில் நடந்த சமயப்போர்களைக் கண்டபின் அவ்விருப்பம் அதிகமாகின்றது. விரைவில் இச்சமய வேறுபாடுகள் நீங்கி—பண்டைத் தமிழன் கண்ட 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற உணர்வில்— உயரிய அன்பில் முளைத்த மெய்ச் சமயம்—ஒன்றிய சமயம்—வாழ்க்கைச் சமயம்—வளம்தரு சமயம்—எல்லாருக்கும் என்றும் இயையும் சமயம் உடன் தமிழ் நாட்டில் தழைத்து நாட்டையும் உலகையும் வாழ்விக்க வேண்டும் என்பது என் அவா ! அவ்வாசை விரைவில் நிறைவேற அனைவரும் கருத்து வேறுபாடற்றுப் பணியாற்ற வேண்டுமென்று கூறி என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

தமிழர் வாழ்க்கை

வாழ்வு என்பது உலகில் பிறந்து மொழிபயின்று பின் காதல் சிறந்து, கருத்து நிறைந்து வாழ்வதுதான் என்பது அனைவரும் அறிந்தது. உலகில் எத்தனையோ கோடி உயிர்கள் பிறந்து இருந்து வாழ்கின்றன. அவற்றுள் மனிதன், தான் வாழும் வாழ்க்கையை எண்ணி, இயங்கும் வகையில் அறிவு பெற்றிருக்கிறான். பிற உயிர்கள் ஏதோ பிறந்து இருந்து வாழ்கின்றன என்ற அளவில் நீங்கும் காலை, மனிதன் தன் பகுத்தறிவு கொண்டு, ஏன் பிறந்தோம் எப்படி வாழ வேண்டும் என்பதை யெல்லாம் சிந்திக்கத் தொடங்குகின்றான். அவன் சிந்தனைத்தேர் சேணெடுந் தூரஞ் செல்லும். அவனது அறிவின் முதிர்ச்சியிலே அவன் கண்ட உண்மைகள் பலப்பல! பிறப்பின் பயன் என்னவென்று ஆராய்ந்தான் அவன். ஆராய்ச்சிமுடிவில் அறிந்தன பல! அந்த ஆராய்ச்சித் துறையில் - அறிவுத் துறையில் தலை நின்றவன் தமிழன்.

இன்று தமிழன் வாழ்க்கை வரண்ட வாழ்க்கையாகக் காணபட்டாலும், அடிமை வாழ்க்கையில் அவன் அல்லலுற்றாலும் அன்று ஒரு நாள் அவன் உலகத்துக்கே வழிகாட்டியாக இருந்தான். உலகம் அவன் அடிசுற்றி நின்றது. இன்றும் அவன் அடிசுற்றி நிற்கின்றது. இன்னும் அவன் காட்டும் வாழ்க்கை நெறியினை உலகம் பின் பற்றுமாயின் நாட்டில் எழும் கொந்தளிப்புகள் இல்லையாகும். உலகம் உயர்வுறும். இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்த தமிழ் நாட்டை நோக்குவோமானால் தமிழன் வாழ்ந்த வாழ்க்கை கண்முன் தோன்றும்.

வாழ்க்கை கரடு முரடானது தான். என்றும் வாழ்க்கைப் படகு இன்பத் தோணியாகக் காட்சியளிக்காது. இன்பமும் துன்பமும் இணைந்து வருவதேதான் வாழ்க்கை. நலந் தீங்குகள் மாறி மாறி வருவது தான் வாழ்க்கை. ஆகவே தமிழன் சிறக்க வாழ்ந்தான் என்றால் அவன் வாழ்க்கைப் படகு முழுவழியும் இன்பத் திரையில் ஊர்ந்த தென்றோ, அவன் வாழ்வில் நலமன்றித் தீங்கு கண்டறிய முடியா தென்றோ நாம் சொல்லவில்லை. அவனிடத்திலும் சில குறை பாடிருந்திருக்கலாம். ஆனால் நடுநின்று ஆராயின், அவன் வாழ்ந்த வாழ்வின் குறை நீக்கிக் குணங் கொள்ளின், அவனது வாழ்வு மற்றவர் வாழ்வினும் சிறந்ததாக செம்மையுற்றதாக உலகம் பின்பற்ற உதவுவதாக அமையும் என்பதை மற்றவர் அறிவர். அவன் வாழ்வில் வழுக்கி வீழ்ந்த இடங்கள் சில. அவ்வழுக்கல் வாழ்க்கையிலும் ஒழுக்க நெறிநின்ற உயர்வு அவனிடம் காணல் இயல்பு!

தமிழ் நாட்டில் இருக்கும் நீதி நூல்களை ஆராயின், அந்த அளவுக்கு நீதிநூல்கள் வேறு எந்த நாட்டிலும் இல்லை என்பதைத் திட்டமாக உணர்ந்தறியலாம். 'பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் ஐயர் யாத்தனர் கரணம் என்ப' என்பது தொலகாப்பியம். இதை எண்ணும் சிலர் இத்தனை நீதி நூல்கள் உண்டாவதற்குக் காரணம் நாட்டில் மக்கள் வாழ்வு நலிவுற்றதே என்று எண்ணுவர்; கூறுவர்கூட. ஆனால் நாட்டு வரலாற்றைக் காணின் அத்தகையை எண்ணத்துக்கு இடமில்லை. சூரியன் ஒருவனே யாயினும் அவன் சிறப்பை விளக்கற்கு செஞ்ஞாயிறு என்று அடை கொடுத்துச் சிறப்பிப்பது போன்று, தமிழர்வாழ்க்கை நன்றாயினும் அதற்கு மேலும் நலம் பெற வழிகள் இவை இவை யென வகுத்தன அவை. எனவே, வாழும் வகை யறிந்து வாழ்க்கை முறையை மேலும் சீராக்க எழுந்தனவே நீதிநூல்கள். மேலே கண்ட படி முற்றும் செம்மை வாழ்வாக இல்லாது சிலசில இடங்களில் சிதறிய வாழ்விடை சிக்கிய போதிலும், தமிழன் தளரா உள்ளத்தோடு, தழைத்த வாழ்வில் தான் வாழ்ந்து வந்தான்.

தமிழ் நாட்டில் நீதிநூல்கள் தோன்றிய காலம் கி. பி. மூன்றாம் நூற்றாண்டுக்குப் பின்னரே யாகும். பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் சங்க மருவிய நூல் என்று பேசப்படினும் அவற்றுள் பெரும்பாலான மூன்றாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டன என்று கொள்ளுதல்தான் பொருத்தமானதாகக் காண்கின்றது. எனவே நீதிநூல்கள் உண்டாவதன் முன் நாட்டில் அறத்தாறு அறிவுறுத்தும் ஆசிரியர்கள் இல்லையோ என எண்ணற்க. நீதிநூல்களுள் ஒன்றாய திருக்குறள் சங்ககால இறுதியிலேயே உண்டானது. அதில் குறிப்பிட்ட அறவாழ்வு எக்காலத்துக்கும், எந்நாட்டுக்கும் ஏற்புடைத்து என்று உலக அறிஞர் ஒருமுகமாக உரைக்கின்றனர். அக்குறளில் மட்டும் அல்லாது சங்ககால நூல்கள் பலவற்றுள்ளும் வாழ்கையை விளக்க முற்படுகின்றனர் அறிஞர்.

தமிழன் இலக்கியம் வேறு வாழ்க்கை வேறு என்று வாழவில்லை. சமயம் வேறு வாழ்க்கை வேறு என்று வாழவில்லை. அறம் வேறு வாழ்க்கை வேறு என்று கருதவில்லை. ஆம்! வாழ்வோடு இயைந்தன தாம் அறமும், சமயமும், இலக்கியமும் என்பதை அவன் அந்த நாளில், இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் நன்கு அறிந்திருந்தான். சங்க இலக்கியங்களைப் பயில்வோர்க்கு அத்தமிழனது பண்டை வாழ்க்கை நன்குபுலனாகும். இன்று உலகைப் பல வகையில் பாழ்படுத்தி வரும் கொடுமைகள் நீங்க வேண்டும் என அன்றே கூறினான் தமிழன். உலக அமைதிக்கு வேண்டுவன எவை எவை என இன்று ஆராய்ச்சியாளர் ஆய்ந்து காணும் முடிபினை அன்றே வாழ்விடைக் கண்டான் தமிழன். கண்டு போற்றினான். போற்றுவதோ டல்லாது வாழ்விடை வாழ்ந்தும் காட்டினான்.

அவன் வாழ்வில் அடிப்படையாகக் கொண்டது ஒருமை மனப் பான்மையே! உலகில் மக்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் தம்மி

னும் வேறுபட்டவர் என்ற கருத்து அவன் உள்ளத்தில் அன்று தோன்றவில்லை. கருத்து வேறு பாட்டிற்கும், பிற எல்லா மாறு பாட்டிற்கும் இடையில் தமிழன் ஒருமை உணர்வை வளர்த்தான். சிறு சிறு கருத்து வேறுபாடுகளுக்காக ஒரு குடிப்பிறந்த உடன் பிறந்தவரே தம்முள் மாற்றுபட்டு நீதிமன்றம் ஏறி நெடும் பொருள் பறிகொடுத்துப் பாழ்பட்டும் நிற்கும் நாளில் அத்தமிழன் கண்ட பரந்த வாழ்க்கை நிலை சற்று விந்தையாகத் தோன்றும். ஆனால் அவன் கண்ட அந்த ஒருமை உணர்வு உலகிடை ஒன்றின் இன்று பேசும் ஐக்கிய நாடுகள் சபையெலாம் கூடப் பயனற்றுப்போகும். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற அடிப்படையில் தொடங்கு கின்றது அத்தமிழன் வாழ்வு. எல்லா ஊரும் தன் ஊராம். எல்லா மக்களும் தன் உறவினராம். என்னே அவனது பரந்த ஒருமை உணர்வு! இன்று இந்த நிலைதான் உலகுக்கு வேண்டும் என்று உதட்டளவிலாவது பலர் பேச முன் வந்துள்ளனர். ஆனால் அவர் வாய்மொழியை உள்ளத்தில் கொண்டு, உலகத் தலைவர்கள் உழைப் பார்களாயின் ஒருதலை முறையில் இருபோர் முடிந்து மூன்றாவது போக்கு வழிதேட மாட்டார்கள்.

உலகமக்கள் அனைவரையும் ஒத்து நோக்குகின்றன தமிழன் கண்கள். அனைவரும் ஒன்று என்று எண்ணுகின்றது அவன்தன் உள்ளம். 'காக்கை குருவி எங்கள் சாதி, நீள் கடலும் மலையும் எங்கள் கூட்டம்' என்ற அத்துணை அளவுக்குப் பாரதி காட்டியபடி பரந்து செல்கிறது அவன் உள்ள நிலை. உயிர் அனைத்தையும், மக்கள் இனத்தையும் தாண்டி, தம் உறவில் ஒன்றாக்குகிறான். உணர்வில் ஒன்றாக்குகிறான். சென்றவிடமெல்லாம் தம் உறவினர் உள்ளனர். காணும் ஊர் எல்லாம் தம் ஊர் என்ற உணர்வு மக்கள் உள்ளத்தில் அரும்புவது எளிதன்று. எத்துணையோ வேறுபாடுகளும் பிறவும் மலிந்துள்ள உலகத்தில் சமரச உணர்வும் அனைவரையும் நம் உற்றவர் என்று நினைக்கின்ற நெஞ்சும் இருத்தல் சாலச்சிறந்த தன்றோ! ஆகவே, இந்த உயரிய அடிப் படையில் அமைந்தது தமிழன் வாழ்வு! அமையவே தமிழனுக்கு மற்றவன் கெடத் தான் மட்டும் வாழவேண்டும் என்ற குறுகிய மனப்பான்மை உண்டாகவில்லை. வரும் இன்ப துன்பங்களுக்கு வழி காண விழைந்தான். இன்பமுற்றால் தாம் பெற்றதாகவும், துன்பம் பெற்றால் பிறர் கொடுத்ததாகவும் எண்ணவில்லை அவன். இன்ப துன்பமிரண்டையும் தானே தனக்குத் தேடிக் கொள்வதை உணர்ந் தான். ஏன் அப்படி? அப்போது தான் அந்த 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று ஒருமை உணர்வு உலகில் உண்மையில் நிலைக்கும். எனவே தான் அந்த உணர்வுக்கு அடுத்தபடி 'தீதும் நன்றும் பிறந்தர வாரா' என்ற எண்ணம் எழுந்தது. இயற்கையாக வருகின்ற தீங்குகளை மற்றவர் இழைத்தார் என்று அவர்கள் மேல் ஏற்றி, அவர்மீது வெறுப்பு கொள்ளும் வழக்கம் அங்கு காணமுடி யாது. அனைத்தும் தன்னால் என்று ஏற்றுக்கொண்டான். எனவே, மற்றவர் மேல் காழ்ப்பு கொள்ளா வழியிலே, ஒருமை உணர்வு

ஊற்றுப் பெருக்கெடுத்தோடும். 'ஒட்டும் இரண்டுளத்தின் தட்டில் அறிந்தேன்' என்ற பாரதியாரின் பாடல்வழி உள்ளம் ஒன்று படும்; உயர்நலத்தைக் காண இயலும். கண்டார்கள் அன்றைய புலவர்கள். அவருள் கணியன் பூங்குன்றனாரும் ஒருவர். அவர் சரியான முறையில் மக்கள் வாழ்வைக் கணித்துள்ளார். அவர் வாய் மொழி புறநானூற்று 192வது பாடலாக விளங்குகின்றது.

யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன
சாதலும் புதுவ தன்றே வாழ்வில்
இனிதென மகிழ்ந் தன்று மிலமேமுனிவின்
இன்னா தென்றலும் இலமே மின்னொடு
வானந் தண்துளி தலைஇ யானாது
கல்பொரு திரங்கு மல்லல் பேர்யாற்று
நீர் வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியிற் றெளிந்தனம் ஆதலின் மாட்சியில்
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே. (புறம் 192)

என்பது அவர்தம் பாடல். இப்பாடலில் புலவர் தமிழர் வாழ்வு முழுதையும் நன்கு படம் பிடித்துக் காட்டியுள்ளார். வாழ்வு நலம் உற்றதற்கு மற்றொரு காரணமும் காட்டுகின்றார் கணியனார். மெய்த்திரு வந்துற்றாலும் வெந்துயர் வந்துற்றாலும் ஒத்திருக்கும் உயரிய உள்ளம் பெறுதலே வாழ்வைச் செம்மையாக்கச் சிறந்த முறை என்பது தேற்றம். இன்பம் வரினும் துன்பம் வரினும் வேண்டுதல் வேண்டாமை இல்லாது ஏற்றுக் கொள்ளு தலே வாழ்வின் குறிக்கோள் - லட்சியம் - முடிபு. 'இடுக்கண் வருங்கால் நகுக' என்றான் வாய்மொழிப்புலவன் வள்ளுவன். ஆகவே துன்பத்தில் உளம் உடையாது, இன்பத்தில் தன்னை மறக்காது வாழும் வாழ்க்கையே தமிழன் கண்ட வாழ்க்கையாக அமைந்துள்ளது. பெருமையும் சிறுமையும் கூடப்போற்றவும் தூற் றவும் படாதன என இறுதியில் வைக்கின்றார் புலவர். போற்ற லும் தூற்றலும் தான் மக்கள் மனதில் விரோத மனப்பான்மையை வளர்ப்பன. ஒருவனைப் போற்றி மற்றவனைத் தூற்றினால் தூற்றப் படுபவன் போற்றப்படுபவனைக் கண்டு பொறாமையுறுகின்றான். பொறாமை, அளவில் பெருகின் போராகின்றது. இந்தப் பொறாமை உளத்துக்கும் இடமல்லையே ஆசிரியரது ஈற்றிரண்டடிகளை இத யத்து எண்ணுவோமாயின். மக்கள் வாழ்வில் பெருமை சிறுமைகளை வருவிக்கும் வேறுபாட்டு நிலைகள் பல நாட்டில் உள்ளன. செல்வம் பெற்றவன் பெற்ற செல்வத்தால் மற்றவர்களுக்குக் கொடுத்துப் பேரும் புகழும் அடைதல் கூடும். ஆனால் வறியனோ கொடுக்கவும்

வகையன்றி அதனால் புகழ் பெருக்கவும் வழியின்றி, தானும் மற்றவருக்கு அடக்கிப் பணியாற்றியோ, பிச்சையேற்றோ வாழ்கின்றமையால் இகழப்படுகின்றான். பொருளில்லாதது அவன் குற்றமன்றே! ஆகவே இந்தப் பொருளால் வரும் செயலுக்கும் பிறவற்றிற்கும் புகழ்தலும், அஃது இல்லாவழிநேரும் குற்றத்திற்கு இகழ்தலும் அறிவுடைமையின்பாற் பட்டதாகா! எல்லாரும் எல்லாச்செல்வமும் எய்திவாழும் சிறப்புப் பெறுவார்களாயின், அன்று வேண்டுமாயின் அவர் தம் நலந்தீங்கை எண்ண இடமுண்டு. ஆனால் தமிழன் கருத்து அதுவும் வேண்டா, வேற்றுமை உணர்ச்சியை வளர்ப்பதால் என்பது. இவற்றையெல்லாம் எண்ணின் தமிழர் வாழ்வு எவ்வளவு உயர்ந்த குறிக்கோளில்-ஒன்றிய உணர்வில் - எல்லோரும் ஓர்குலம் எல்லோரும் ஓர் இனம் என்ற பண்பாட்டில் சிறந்துள்ளது என்பது விளங்கும்.

நிற்க, இத்தகைய ஒருமை வாழ்வுக்கு ஏற்றதாக அமைய வேண்டுவது பொருளாதாரச் சீர்திருத்தமேயாகும். ஒருவன் உழைக்கவும் மற்றவன் உண்ணவும் வாழ்கின்ற இன்றைய வாழ்க்கையை அன்றைய தமிழன் வாழ்வு வற்புறுத்தவில்லை. ஒருவன் பட்டுடுத்துப் பொன்பூண்டு பவனிவர மற்றவன் கட்டக்கதையும்குடிக்கக் கூழும் இல்லாது ஏங்கும் வாழ்க்கை தமிழன் கண்டறியாதது. அவர்கள் - தமிழர்கள் ஒருமை உணர்வில் வேறுபாடற்ற வகையில் தமக்கும் உலகுக்கும் வேண்டியவகையில் உழைத்தார்கள். உழைப்பின் பயன் அனைவருக்கும் பொது என்று கண்டார்கள். உண்பது நாழி உடுப்பன இரண்டே மனிதவாழ்வுக்குத் தேவை என்பதை உணர்ந்தார்கள். அந்த இரண்டும் எல்லாருக்கும் அமையுமாயின் நாட்டில் வேற்றுமை உணர்ச்சியோ, வேறுபட்ட மனப்பான்மையோ தோன்ற வழி இல்லை என்பதை உணர்ந்தார்கள். அதைப் போன்றே மனித வாழ்வுக்குத் தேவையான பிறவற்றிலும் வேறுபாடு இல்லாது வாழ்தல் சாலச் சிறந்தது என்பது அவர்தம் முடிபொருள். பொருளாதாரச் சமத்துவம் (Economic equality) நாட்டில் பொருந்தின் பிற அனைத்து நலங்களும் பொருந்தும் என்ற இன்று பேசப்படும் கொள்கை அன்று தமிழன்வாழ்விடைக் கொண்ட கொள்கையாகும். எனவேதான்,

> ' உண்பது நாழி உடுப்பவை இரண்டே
> பிறவும் எல்லாம் ஓரொக்குமே ' (புறம் 189)

என்ற நக்கீரர்தம் வாக்கும் எழுந்தது. இச்செவ்விய கருத்தை ஒட்டியே பிற்காலத்துவந்த ஔவையாரும் தாயுமானவரும் பொருளாதாரச் சமத்துவத்தை வற்புறுத்திச் சென்றார்கள்.

> ' உண்பது நாழி உடுப்பது நான்குமுழம்
> எண்பது கோடி நினைந்து எண்ணுவன - கண்புதைந்த
> மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்
> சாந்துணையும் சஞ்சலமே தான் '

என ஔவையாரும்,

எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே

எனத் தாயுமானாரும் உலக இன்பத்திற்கும், அன்வின்பத்தை அடைதற்கு வேண்டிய உற்றவழியினையும் வற்புறுத்திச் சென்றார்கள். இத்துணை கண்டவாற்றால் தமிழர் வாழ்க்கை இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே தலை சிறந்துநின்றதென்பதும், அவ்வாழ்க்கை ஒருமை உணர்வில் உதித்த தென்பதும், மக்கள் பிறவி எடுத்தார் அனைவரினும் வேற்றுமை காணா மேன்மை வாழ்வே தமிழருடைய தென்பதும், உலக வாழ்விற்கு இன்றியமையாத பொருள்களெல்லாம் அனைவருக்கும் சமமாக்கப்பட்டதென்பதும், பொருளாதாரம் முதலிய எல்லாவற்றினும் சமத்துவமே கொள்ளப்பட்டதென்பதும் நன்கறியப்பட்டன. இனி அவ்வாறு வாழ்ந்தவர் தம் வரலாறுகள் இரண்டொன்றை அவர் தம் வாய்மொழி கொண்டே காணுதல்வேண்டும்.

ஒருமை உணர்வின் அடிப்படையில் எழுந்த தொடரே 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்' என்பது. சங்க காலத்துச் சான்றோர்கள் பலர் இக்கொள்கையைத் திட்டமாக வலியுறுத்திச் சென்றார்கள். பெற்ற செல்வத்தை மற்றவர்களுக்கும் பகிர்ந்து கொடுத்து, தாமும் இன்புற்று வாழும் வாழ்க்கையே மக்கள் வாழ்க்கை என்பது அவர் கருத்து. இந்த உணர்வு மக்கள் இனத்தைத் தாண்டி விலங்கிடத்தும், பறவையிடத்தும் புல் பூண்டுகளிடத்தும் கூடச் சென்றது. ஓரறிவுயிராகிய ஒரு கொடி, பற்றுக் கோடில்லாது பதறுவதுகண்டு தனது பொற்றேரையே விட்டு வந்த கொடை வள்ளல் பாரியின் வரலாற்றையும், தோகை விரித்தாடிய மயில் குளிரால் வருந்துகின்றதென்று கருதிப் பொன்னாடை போர்த்த பேகன் வரலாற்றையும் அறியாதார் யார்? குமணன் தான் தலை பெற்று வாழ்வதைக் காட்டிலும், அத்தலைகொண்டு மற்றொருவர் வாழ வகை இருக்குமேயானால் அதற்காகத் தலைகொடுக்கவும் துணிந்த செயல் வரலாற்றில் இடம் பெற்ற ஒன்றன்றோ! பெருந்தலைச்சாத்தனார் தம் பசிக் கொடுமையைக் காட்டிப் புலம்பிய போது, தன்னிடத்து ஒன்றும் இல்லாமையின் வாளைக் கொடுத்து, தன் தலையைக் கொய்து தம்பியிடம் காட்டினால் பொன்னும் மணியும் தருவான் என்று புலவரை வேண்டிக்கொண்டது எதைக் காட்டுகிறது. தனக்கென வாழாப் பிறர்க்குரியவனாகக் குமணன் வாழ்ந்ததையன்றோ காட்டுகிறது. நாட்டை இழந்த கொடுமையைக் காட்டிலும் கொடுமையாக வன்றோ புலவர் வறுமையை நினைத்தான் குமணன். தான் வருத்தமுற்றாலும், இறப்பினும் கவலாது மற்றவர் வாழ வேண்டும் என்ற அந்த வளமார் கொள்கையிலன்றோ அவன் உள்ளம் ஒன்றிற்று. அவன் அருஞ்செயலை அவனால் வாழ்ந்த அப் பெரு தலைச் சாத்தனார் வாக்காலேயே பார்த்தல் ஏற்புடைத்து.

" தாள் தாழ் படுமணி இரட்டும் பூநுதல்
ஆடியல் யானை பாடுநர்க் கருகாக்

கேடில் நல்லிசை வயமான் தோன்றலைப்
பாடி நின்றனெ னாகக் கொன்னே
பாடுபெறுபரிசிலன் வாடினன் பெயர்தல் என்
நாடிழந்த தனினும் நனி இன்னாதென
வாள் தந்தந்தனனே தலையெனக் கீயத்
தன்னிற் சிறந்தது பிறிதொன் றின்மையின்''

என்ற பெருந்தலைச் சாத்தனது வாய்மொழி தமிழர் தம் வாழ்வை தமிழ் மன்னர் வாழ்வை, தனக்கென வாழப் பிறர்க்குரியாளராக இயங்கும் வாழ்வை, ஒருமை உணர்வின்வழி உண்டாய வாழ்வை யன்றோ நமக்கு விளக்கிக் காட்டுகிறது. அரசர் மட்டுமின்றி அறிஞரும், பிறரும் கூட அத்தகைய அறவாழ்வினை மேற்கொண்டு வாழ்ந்தனர் என்பதற்குச் சான்றுகள் பல. விரிப்பிற் பெருகும். எனினும் ஒன்று காணல் இன்றியமையாதது.

குமணன் தொடர்பு கொண்ட மற்றொரு புலவர் பெருஞ் சித்திரனார். அவர் குமணனைப் பாடினார். பாடிப் பெற்ற பரிசில்கள் பல. பெற்ற பரிசிலைப் பெருயானைகள் மேலேற்றிக் கொண்டு தன் ஊர் சென்று மனைவியின் கையில் அனைத்தையும் ஒப்படைக்கிறார். இதுவரையில் அத்துணைப் பெருஞ் செல்வத்தைக் கண்டறியாத இல்லாள் வியக்கின்றாள். இப்பெருஞ் செல்வம் எதற்கு? என்ன செய்வது? என்ற பல வினாக்கள் எழுகின்றன அவள் உள்ளத்தில். வாய் திறந்து கணவனையும் கேட்டுவிடுகின்றாள். புதிதாக வந்த கேள்வி புலவரைத் திடுக்கிடச் செய்கின்றது. அவர் 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராக' வாழ்கின்ற பெரியார். பெற்ற செல்வம் எல்லார்க்கும் உரித்து என்று எண்ணுகின்ற பான்மையாளர் அவர். அவர் உள்ளம் வாக்கிடை வருகின்றது. வெள்ளத்தின் பெருக்கைப் போல் பெருக்கெடுக்கும் அவர் கவிப் பெருக்கம் அவர் உள்ளத்தை உலகுக்குக் காட்டுகிறது. 'பெற்ற செல்வம் ஒருவருக்கு உரியதன்று. ஒரு இனத்தார்க்கோ, குலத்தார்க்கோ உரியதன்று. ஆகவே பெற்றவற்றை அனைவருக்கும் யாதொரு வேறுபாடும் கருதாது வாரி வழங்குவாயாக' என மனைவியிடம் சொல்லுகிறார். இதோ அவர் வாக்கு!

'நின்னயந் துறைநர்க்கும் நீநயந் துறைநர்க்கும்
பன்மாண் கற்பின்நின் கிளைமுத லோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழ நின்
நெடுங்குறி யெதிர்ப்பை நல்கி யோர்க்கும்
இன்னோர்க் கென்னாது என்னொடுஞ் சூழாது
வல்லாங்கு வாழ்து மென்னாது நீயும்
எல்லோர்க்கும் கொடுமதி மனைக்கிழவோயே
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருவேற் குமணன் நல்கிய வளனே

இத்தகைய அறவாழ்வில் - செங்நெறியில் அன்றைய தமிழன் வாழ்வு சென்றது. இடையருது சென்றது. இன்ப நிலையில் சென்றது. இன்னும் அவன் வாழ்ந்த வளனை யெல்லாம் அளப்பதற்கு ஒரு பெரு நூல் தேவை. இந்தப் பொதுவாழ்வை, அறவாழ்வை உலகம் விட்டது. அதனுல் தான் நாட்டில்பல கொடுமைகள் தலைவிரித்தாடுகின்றன. என்று உலகம் தமிழர் வாழ்வைத் தன் வாழ்வாகக் கொள்ளுகிறதோ அன்று தான் உலகில் அமைதிநிலவும். என்று மக்கள் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராக உள்ளார்களோ அன்று தான் உலகம் உய்யும். என்று உலகோர் தேவையான உணவும் உடையும் அனைவருக்கும் உரித்தாகக் வேண்டும் என்று எண்ணுகிருர்களோ அன்று தான் உலகம் சிறக்கும்! என்று எல்லோரும் எல்லாச் செல்வமும் எய்தி, பொருளாதார வேறுபாடு நீங்கி, ஒன்றிய உணர்வில் ஒன்று படுகின்ருர்களோ அன்றுதான் உலகம் முன்னேறும். என்று உழைப்பவன் ஒருவன், உண்பவன் ஒருவன் என்ற வேறுபாடு இல்லாது எல்லோரும் ஒன்ருகக் கூடி, பெற்றதை அனைவரும் சமமாகப் பங்கிட்டு உண்டு வாழ்கிருர்களோ அன்றே உலகம் நலம் பெறும். என்று எல்லாம் நம் நாடு, எல்லோரும் நம் உறவினர் என்ற ஒருமை உணர்வில் உலக மக்கள் ஒன்று கூடுகின்ருர்களோ அன்றுதான் நாடும் நாமும் நானிலமும் நலமுறும்! அந்நாள் விரைந்து வருவதாக! அருமைத் தமிழர் தம் அறவாழ்வு உலகமுழுவதும் வழக்கிடை வந்து வளஞ் சுரப்பதாக! வளர்க தமிழர் அறவாழ்க்கை! வாழ்க இவ்வையகம்!

அறிவும் அறமும்

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ்கொண்ட தமிழ்நாடு' என்று தமிழ் நாட்டின் ஏற்றத்தைப் பாடினர் பாரதியார். வள்ளுவன் பிறந்ததனாலே தமிழ் நாடு ஏற்றமுற்றது. தமிழர் நலம் பெற்றனர்; தமிழ் தலை நிமிர்ந்தது. அவ் வள்ளுவன் வாய்மொழி, பொய்யா மொழியாக என்றும் புவியில் நிலைத்து நிற்கும் நிலை பெற்றது. சாதி, சமய, மொழி, நாட்டு வேற்றுமைகளைக் களைந்து அவனது அருஞ் சொல் வாழ்கின்றது. உலகெங்கணும் வள்ளுவனை அறியா அறிஞர் இருக்க முடியாது என்பது உறுதியாகிவிட்டது. அவ் வள்ளுவனைத் தமிழ்மக்கள் இதுவரையில் போற்றாது விட்டிருந்த போதிலும் இன்றாவது போற்றத் தலைப்பட்டனர். தமிழ் நாட்டில் வாழும் தமிழர் மட்டுமின்றி உலகிடை எங்கும் வாழ் தமிழ் மக்கள் வள்ளுவனை உள்ளிப் போற்றும் ஒரு நிலை எய்தியது கண்டு உண்மைத் தமிழன் உளமகிழ்வான்.

கடல் கடந்த மலேயாநாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் வள்ளுவன் விழா கொண்டாடப்படுகிறது. இந்த வள்ளுவன் விழாவின் நான் கூற நிற்பதெல்லாம் வள்ளுவன் அறிவையும் அறத்தையும் எவ்வாறு உலகுக்குக் காட்டினான் என்பதேயாகும். அறமும் அறிவும் தமிழர் தம் பண்டைய வாழ்வுதொட்டு உலகிடைப் பயின்றுள்ளனவாகும். அறவாழ்வுவாழ அறிவு நலம்பெற்ற தமிழன் அன்று தொண்டு வழி கண்டு கொண்டுதான் இருக்கின்றான். அந்த அறவழி - அறிவுநலன் மற்றெல்லா நூல்களைக் காட்டிலும் வள்ளுவன் திருக்குறளில் நன்கு விளக்கப் பட்டுள்ளது. பிற தமிழ் நூலகளிலும் அறிவும் அறமும் போற்றப்படுவதை அறிஞர் அறிவர். தமிழ் நூல்கள் மட்டுமன்றிப் பிற எல்லா மொழிகளிலும் கூட, அவ்வவற்றின் நூல்களிலும்கூட அறிவும் அறமும் விளக்கப் பட்டுள்ளன. இன்றைய உலகில் கூட இந்த இரண்டையும் பற்றிப் பேசாத நாடே கிடையாது. ஆயினும் வள்ளுவன் இந்த இரண்டுக்கும் தந்த விளக்கம் வேறுயாரும் இதுவரைத் தரவில்லை. உண்மையிலே இந்த இரண்டு சொற்களுக்கும் - அறிவுக்கும் அறத்துக்கும் - வள்ளுவன் கண்ட பொருளை இன்று உலகம் காணுமாயின் பயன் உண்டு! அன்றேல்.........

உலகில் மக்களாய்ப் பிறந்தவர்களுக்கு அறிவு இன்றியமையாதது. மக்களைப் பிற விலங்கினின்று வேறாகப்பிரித்துச் சிறந்தவனாக்குவதே இந்த அறிவுதான். அறிவைப் பகுத்தறிவு என்று கூறுவர். நல்லது தீயது நாடி, செய்யவேண்டியவற்றைக் கொள்ளலும் தள்ளவேண்டியவற்றை நீக்கலும் இந்த அறிவினாலேயே மேற்

கொள்ளப்பெறும். எனவே உலகில் மனிதனுய் வாழ அறிவு இன்றி யமையாதது. ஆனுல் அந்த அறிவு யாது? விலை கொடுத்து வாங்கும் ஒரு விற்பனைப் பொருளா? படித்துப்பெறுகின்ற ஒரு பண்பா? என்று எண்ணத்தோன்றும். படிக்கப்படிக்க அறிவு வளரும் என்பது உண்மை.

> 'தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
> கற்றனைத் தூறும் அறிவு'

என்றுன் வள்ளுவன். பயிலப் பயில அறிவு வளரும் என்பதை நல்ல உவமையினுல் விளக்குகிறுன். மணலில் தோண்டத் தோண்ட நீர் சுரக்கும். அது போன்று படிக்கப் படிக்கப் அறிவு வளரும். ஆனுல் படிப்பது எதை? எதைப் படித்தாலும் அறிவு வளருமா? அப்படியானுல் இன்று உலகில் நடக்கின்ற தீச் செயல்கள் அனைத்துக்கும் படித்தவரும் காரணமாகின்றனரே. கல்லாத பேர்களே நல்லவர்கள் என்று உலகம்பழிக்கும் அவுளக்குக் கல்வி பயன்படுகிறதே எனப் பலர் வினவலாம். அறிவு தீங்குசெய் யத்தான்பயன்படுமா என எண்ணலாம். ஆனுல் படிக்க வேண்டிய தையும் வள்ளுவன் வரையறுக்கின்றுன்.

> 'கற்க கசடறக் கற்பவை கற்றபின்
> நிற்க அதற்குத் தக'

என்பது அவன்மொழி. எனவே படிக்கத்தொடங்குமுன்பே அறிவு வளர்க்கும் அருங் கலைகள் எவை எவை என்பதை ஆராய்ந்து பயிலல் வேண்டும். அத்தகைய நலஞ்சான்ற நல் இலக்கியங்கள் உண்மையில் அறிவை வளர்க்கும் என்பது உறுதி!

'இனி, அறிவு என்பது யாது என ஆராய்வாம் அறிவு மனிதனை வாழவைப்பது. அறிவு அல்லலை நீக்க அருமருந்தாவது. அறிவு அஞ்சி அரண் அமைக்கவில்லை. அறிவு இருந்தால் அனைத் தும் இருக்கும், அறிவு இன்றேல்பிற அனைத்துச் செல்வங்கள் பெறினும் பயனில்லை. இக்கருத்தைத்தான் வள்ளுவர்,

> 'அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
> என்னுடைய ரேனும் இலர்'

என்று அறுதியிட்டுக் கூறிப்போந்தார். எனவே உலகில் மனிதன் மனிதனுக நிலைபெறவேண்டுமாயின் அறிவு இன்றியமையாதது. அவ் வறிவு கல்வியினுலே வளர்க்கப் பெறுவது என்பது பெற்ரும். ஆனுல் வெறும் புத்தகப் படிப்பால் மட்டும் அறிவு வளர்ச்சியுருது. இன்னு நம் நாட்டில் கல்வித்துறையில் அறிவு—நூலறிவு—தேர்வு அறிவு ஒன்றே காண வேண்டுமே ஒழியப் பிறவற்றைப் பார்க்கலாகா தெனப் பலர் பேசுவதைக் கேட்கின்ரும். ஆனுல் உண்மையில் அப்படிப் பேசுவார்கள் அறிவைச் சரியாக விளங்கிக்கொள்ளாதவர் களென்று திட்டமாகச் சொல்லலாம். அறிவு வெறும் நூலால் மட்டும் ஆவதாயின் நாம் முன் காட்டியபடி இன்று நாட்டிலும்

உலகிலும் உண்டாகும் அல்லல் அனைத்துக்கும் அப்புத்தகம் பயின்ற அறிவுடையார் காரணமாக ஏன் நிற்கவேண்டும், வெறும் புத்தக அளவிலே நின்று நூற்றுக்கு நூறு தேர்வெண் பெறுகின்ற வன் அறிவாளனாயின் அவன் பிறகு அவ்வறிவை மேலும் வளர்க்கப் பயன்படுத்தாமலும் மற்றவர்களுக்கு விலை கூறும் முறையில் வேலை தேடித்திரியக் காரணம் என்ன? அறிவு, நூலறிவுக்கு அப்பாற் பட்டது. கற்றனைத் தூறும் அறிவு என்றாலும், அக் கற்பது நூலோடு அமையவில்லை.

உலகம் பரந்து கிடக்கின்றது. உலகம் நாள்தோறும் மாறிக் கொண்டே வருகின்றது. உலகில் பல அறிஞர்கள் நூற்றாண்டு தோறும் தோன்றி வளர்ந்து அறிவுரை பல பகர்ந்து வழிகாட்டிச் செல்கின்றார்கள். கடைசியாக வாழ்ந்த காந்தியடிகள் நம் நாட்டு அறிவை—உலக அறிவைத் துலக்கினார். ஆகவே உலகம் அத்தகைய அறிவுடையோரையே நாடுகிறது. இன்றைய அநாகரிகப் போர்புரி உலகம் ஒரு வேளை வெறுக்கினும், முடிவு அங்குவர வேண்டுவதே! ‘உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே’ என்றார் தொல்காப்பிய னார். எனவே உலகம் உயர்ந்தாரைச் சார்ந்து உருவாகின்றது. அந்த உலகத்தோடு ஒட்ட ஒழுகக் கற்றலும் கல்வியாகும். ஏதோ கற்றுத் தேர்தலில் வெற்றிபெற்றவர்கள் தாம் அறிவாளிகள் என்றும், அவர்களுக்கே உலகில் முதல் இடம் வேண்டும் என்றும் கூறுவது வள்ளுவனார் விருப்பன்று.

‘உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்’

என்றும்,

‘எவ்வ துறைவ துலகம் உலகத்தோ
டவ்வ துறைவ தறிவு’

என்றும் உலகத்தொடு ஒட்ட ஒழுகுதலே அறிவென்பதை நன்கு விளக்கிக் காட்டிவிட்டார். ஆகவே வெறும்படிப்பினை மட்டும் அறிவென்று போற்றாது, உலகம் செல்லும் நெறிகண்டு, அதன் வழியே தாமும் இயங்கி வாழ்தலே அறிவு என்பது பெற்றாம்.

இனி, அவ்வாறு உலகத்தை நோக்கி வாழ்தலே அறிவு என்று வள்ளுவர் ஏன் கூறினார் என எண்ணத் தோன்றும். உலகில் பல கோடிமக்கள் வாழ்கின்றார்கள். அவர்களுள் வாழ்வின் தேவை யைப் பெற்று வாழ்கின்றவர் மிகச் சிலரே யாவர். வாழ்வுக்கு இன்றியமையாத உணவும், உடையும், உறையுளும்கூடப் பெறாத மக்கள் கூட்டம் பெரும்பான்மையாக நம் நாட்டில் உண்டு. அவர்கள் இடையிலே உல்லாச வாழ்வில் ஓய்யாரம் பாடும் ஒரு சிலரும் உண்டு. மக்களாகப்பிறந்தவர்களுள் ஏன் இந்த வேறுபாடு? இதை எந்தக் கற்ற உள்ளமாவது சிந்தித்ததா? சிந்தித்த புத்தர், தம் வாழ்வை விட்டு வழிகாணக் காடடைந்தார். சிந்தித்த

இயேசு சிலுவையில் மாண்டார். ஆம்! இன்று நம் கண்ணெதிரிலே சிந்தித்த காந்தியார் நம்மவனாலேயே சுட்டுக் கொல்லப்பட்டார். உலக வாழ்வுக்குச் சிந்தை செய்வார் பெறும்பயன் இவ்வளவுதான். இது வரலாறு காட்டுகின்றது. ஆனால் அதற்காக உளமுடையாது உலகம்எப்படியும் அன்பில்வாழவேண்டும் என்று எண்ணி அதற்கு வேண்டும் ஆக்கப் பணிகளை ஆற்றுவதே அறிவுடமையாகும். அறிவு அறிவு என்று தேர்தலிலே வெற்றி பெற்றுச் சிறப்பதிலும், அறிவு அறிவு என்று விஞ்ஞான வளர்ச்சியை ஆக்கப் பணிக்குப் பயன் படுத்தாது அணுகுண்டு முதலிய அழிவுக்குப் பயன்படு கருவிகள் செய்வதிலும் காலம் கழிக்கும் உலகுக்கு ஒருவேளை இந்த அறிவு - எல்லாரும் இன்புற்றிருக்க நினைக்கும் அறிவு'-கேலிக் கூத்தாக இருக்கலாம். ஆனால் வள்ளுவன்-அன்றைய தமிழன்-அறிவை அங்கேதான் கண்டான். தான் எவ்வாறு எல்லா நலன்களும் பெற்று வாழ விரும்புகின்றானோ அவ்வாறே எல்லா மக்களும் - ஏன் உயிர்களும் கூடப் பெற்று வாழவேண்டும் என்பதில்தான் உண்மை அறிவு தோன்றும்.

'எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியா'

அறிவுநிலை வேண்டினார் தாயுமான அடிகளார் - அறிவைப்பற்றி நல்விளக்கம் கூறும் வள்ளுவனார்,

'அறிவினால் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை'

என்றும்,

'அறிவினுள் எல்லாம் தலையென்ப தீய
செறுவார்க்கும் செய்யா விடல்'

என்றும்,

'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை'

என்றும் பலவாறு அறிவை விளக்குகின்றார். நாம் மேலே காட்டிய படி நூல்வழிபெறும் அறிவும் இந்தச் சீரியகொள்கையை வலியுறுத்துவது என்பதை 'நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை, படுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்' என்று கூறிச் செல்கின்றார். எனவே அறிவு என்பது தன்னைப்போல் மற்றவரை ஒத்து நோக்குதலே என்பது தேற்றம்.

'நாடெங்கும் வாழக் கேடொன்றும் இல்லை' என்பது யாவரும் அறிந்த ஒரு மொழி. அறிவுபெற்றவர் ஒரு சாரார் வாழ மற்றவர் வாட வேண்டும் என்று எண்ணுவார்களேயாயின் அவர் அறிவு பெற்றதால் பயன் இல்லை. தன் வாழ்க்கைமட்டும் சிறந்தால் போதும், மற்றவர் வாழினும் வீழினும்என் என்று எண்ணுபவர் எவ்வளவு நூலறிவு பெற்று நுண்மான் நுழைபுலம் பெற்றவராயினும் அவரால் உலகுக்கு என்ன பயன்? உலகம் ஒருவரை ஒருவர்

பற்றி வாழ வழிகாட்டி யுள்ளது. எவன் ஒருவனும் தான் தனியாக மற்றவர் உதவி இன்றி உலகில் வாழமுடியாது என்பது அனைவரும் காண்கின்ற உண்மை. இத்தகைய உலகத்தில் சுயநலத்தோடு - தன்வாழ்வை மட்டும் கருதும் கருத்தோடு வாழும் ஒருவன் அறிவுடையவனாகத் திட்டமாக இருக்கமுடியாது.

செல்வம் பெறுவதும் அஃதில்லாதிருப்பதும் அவரவர் முயற்சியையும் சுற்றுச்சார்பினையும் பொறுத்தது. பெற்ற செல்வத்தை என்ன செய்யவேண்டும் என்பதே அறிவு காட்டவேண்டுவது. செல்வம்பெற்றார் பலர் செய்யத்தகாத கொடுஞ்செயல்களெல்லாம் செய்து சீக்கிரமே மண்ணாவதைக் காண்கிறோம். செல்வம் பெற்றார் சிலர் தாமும் துவ்வாது பிறர்க்கும் பயன் தாராது அச் செல்வத்தை வைத்து வறிதே கழிகின்றனர். அவர்கள் அச் செல்வத்தால் ஆக்க வேண்டுவதை அறியாதவர்கள். ஆக்கவேண்டுவது யாது? 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதலே' ஆகும். இந்த ஆக்கப்பணியை அறியாதவர்கள் அறிவற்றவர்கள். எத்துணைச் செல்வம் பெறினும் நல்லாறு அறியாது செம்மாக்கும் செல்வர்கள் அறிவற்றவர்களேயாவர்.

'அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்
அஃதறி கல்லா தவர்'

என்றான் வள்ளுவன். எனவே பெற்ற செல்வத்தாலோ பிறவகையாலோ தமக்கும் பிறர்க்கும் ஆவனவற்றை அறிந்து அவற்றைப் பயன் படுத்தலே அறிவுடைமையாகும். அன்றி மற்றவர் வாட வாட அவர் பயன்கொண்டு தான் மட்டும் வாழ வாழ வழிவகுப்பானாயின் அவன் 'என்னுடைய னேனும் இலன்' என்ற இலக்கணத்துக்கு இலக்கியமாகவே நிற்பன்.

அறிவின் நிலை சற்று மேலே செல்லுகின்றது. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் அறிவென்ற வள்ளுவனார் அதற்கு மேலும் செல்கின்றார். தீங்கிழைக்கும் மாற்றானுக்கும் பதிலுக்குத் தீமை செய்யாதிருத்தலே அறிவு என்கின்றார். 'சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாம அவரை, ஆந்துணையும் காப்பர் அறிவுடையோர்' என்றார் ஔவையார். ஆம். அறிவுடமை என்பது தீமை செய்தவர்களுக்கும் நன்மை செய்தலிலேயே சிறக்கும். 'உன் ஒருகன்னத்தில் அறைந்தால் மறுகன்னத்தைக் காட்டு' என்பது உயர்ந்த அறிவுடைமை யன்றோ! கொல்லவந்தவனையும் - குண்டிட்டவனையும் ஊறு செய்யலாகாது என்று ஓதுக்கிய நலம் அறிவின்பாற் பட்டதன்றோ? அத் தகைய அறிவு, அனைத்தினும் மேலானது. தமக்கு எத்துணை இடர்வரினும், யார் இடர் இழைப்பினும் அதற்கு மாறாக அவர்களுக்கு இடர் இழைக்க எண்ணுவது அறிவுடமை யாகாது சாந்துணையும் தீங்கிழைத்தவராயினும், அவர்க்குத் தம்மாலான வரையில் உதவுவதே அறிவுடைமையாகும். அதனாலன்று,

'அறிவினுள் எல்லாம் தலையென்ப தீய
செறுவார்க்கும் செய்யா விடல்'

என்றார் வன்மையான முறையில். வள்ளுவன் தலை என்று சிறந்த ஒன்

றினைக்கொள்ளுவதெல்லாம் மற்றஉயிருக்கு எவ்வகையினும் தீங்கு செய்யா திருத்தலேயாம். இக்கருத்துப் பற்றி அவன் வாழ்க்கையில் பலகதைகள் ஏற்றிச் சொல்வார் பலர் உளர். கதைகள் உண் மையோ அல்லவோ; அவன் கருத்து உயர்ந்தது. ஆம். அறிவு பலவகை யாகப் பிரிக்கப் படலாம். நூலறிவும், நுண்ணறியும், பிற அறிவும் என்று இன்று பலரால் பேசப்படுவன போன்று அறிவு பலவகை யாகலாம். அப்படி ஆனாலும் கூட அவற்றின் உச்சியில் தலையாய அறிவாக விளங்குவது தீங்குசெய்தவர்க்கும் நன்மை செய்தலாகும். தீமையை, மறந்தும் மாற்றானுக்குச் செய்யாதிருப்பதாகும்.

> 'எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானும்
> மாணா செய்யாமை தலை'

என்ற குறளும் இதுபற்றி எழுந்ததேயாகும்.

> 'இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
> என்ன பயத்ததோ சால்பு'

என்ற குறளும் இதற்கு எடுத்துக் காட்டாகும்.

எனவே இத்தகைய நல்லறிவோடு, எல்லோரையும் ஒத்து நோக்கி, எல்லா உயிரும் வாழவேண்டும் என்ற சிறந்த கருத்தோடு வாழ எண்ணுபவனே மனிதனாவான் என்பது வள்ளுவர் கருத் தாகும். வெறும் நூலறிவோ பிற அறிவுகளோ அறிவென்று பேசுதற்கும்கூடத் தேவையற்றன என்பதும், இன்றைய உலகில் இவ் வள்ளுவன் கருத்து எவ்வாறு போற்றப்பட வேண்டும் என் பதும் தெற்றென விளங்குகின்றன.

புத்தக அறிவே போதுமான அறிவாயின், நம் நாட்டினும் நன்குபயின்ற மேனாட்டில் - புத்தக அறிவு அதிகமாகப் பொருந்தி யுள்ள மேனாட்டில் ஏன் அவதியும் அல்லலும் மிஞ்சியிருக்கக் காண் கின்றோம். போர் அமைப்பவர்களெல்லாம் கல்லாதவர்களா? அணு குண்டை ஆக்கியவர்கள் அறிவற்றவர்களா? மறுபோருக்குவழியோ என்று வாதிடுபவர்களெல்லாம் படியாதவர்களா? இல்லை. படித்த வர்கள்தாம்: பல்கலைக் கழகப்பட்டம் பெற்றவர்கள்தாம். ஆனாலும் அறிவின் அடிப்படை அவர்களுக்கு வெகுதூரத்தில் அமைக்கப் பட்டுள்ளது. ஒவ்வொருவர் உள்ளத்தும் தாம், தம் நாடு, தம் இனம் என்ற பற்று உண்டாகிறது. அழித்தோ, அடக்கியோ பிறரைத் தம்கீழ்க் கொண்டுவரவேண்டும் என்ற கொந்தளிப்பு உள்ளத்தில் உரம் பெறுகின்றது. எல்லாரும் இன்புறறிருக்க வேண்டும் என்ற அறிவின் அடிப்படை அங்குச் சுட்டெரிக்கப்படு கின்றது. படித்தவன் அறிவாளி என்ற பகட்டு தலைவிரித்தாடு கிறது. இந்த நிலை ஒழிய வேண்டும். அறிவு என்பது வள்ளுவர் காட்டியபடி மாற்றார்க்கும் தீங்கெண்ணா வகையிலே முகிழ்க்க வேண்டும். பிறிதின் நோய் தன் நோய் போல் போற்றிப்புரக்கும் பொய்யல்லா மெய்ந் நெறியிலே பூக்க வேண்டும். உலகத்தோடு ஒட்ட ஒழுகி, உலகம் என்பதும் தாமும் தம்மைச் சேர்ந்த சில

செல்வர்களும் தான் என்ற அளவில் நினையாது, அனைவரும் உலக மக்கள் என்ற உணர்வில் அவர்கள் எல்லாரிடத்தும் இரங்கி, பெற்றது கொண்டு மற்றவரையும் சுற்றத்தையும் அருத்தி வாழும் வழியில் சிறக்கவேண்டும். அந்த உண்மை அறிவில் அறம் விளங்கும். அறம் விளங்க அவதி குன்றும். இன்று உலகிடைக் காணும் எல்லா வேறுபாடுகளும் இல்லையாக முடியும். உலகமக்கள் அனைவரும் ஒன்றே என்ற உணர்வில் எல்லாரும் எல்லாச்செல்வமும் பெற வழி வகுக்கத் தோன்றும். என்று அந்த வழி வகுக்கப்படுகிறதோ அன்றுதான் உலகம் உண்மையில் அறிவு வழியில் செல்வதாக அறிஞர் கூறுவர். அதுவரையில் உலகம் வேறு எங்கோ சென்றுகொண்டிருக்கிறது என்பதுதான் பொருள்.

இனி, அறிவு வழியில் அறம் பெருகும் என்றோம். இத்துணை விரிந்த அளவில் அறிவினைக் கண்டபின் அறத்தைப் பற்றி விளக்கத் தேவையில்லை. அறம் அறிவின் வழி அமையின் அதன் அடிப்படையில் செல்வர் வறியர் என்றவேறுபாடு இல்லை. ஏன்? எல்லோரும் அறத்தாற்றில் வாழ்வார்கள். அறன் என்பதும் அறிவு என்பதும் பொருளில் ஒன்றுகவே சென்று முடியும் அறிவு எப்படி மற்றவர்களுக்கு உதவ வழிகாட்டுகிறதோ அது போன்று அறமும் அதையே வலியுறுத்துகிறது. இல்லறமா துறவறமா சிறந்தது என எண்ணுகின்ற வள்ளுவனுர், தனக்கென வாழும் துறவறத்திலும் பிறர்க்கென வாழும் இல்லறமே பெரிது எனக் காண்கின்றுர். எனவே 'அறன் எனப்பட்டதே இல் வாழ்க்கை' என்றுர். அவ்வறத்தின் சிறப்பைஅடுத்துக் காண்போம்.

வள்ளுவர் அறத்தை இருவகையாகப் பிரித்தார் எனவும் அவற்றுள் இல்லறமே துறவறத்தின் ஏற்றம் வாய்த்ததெனக் கூறினுர் எனவும் கண்டோம். ஏன் அவ்வாறு இல்லறத்தை வள்ளுவர் சிறப்பிக்கின்றுர். நாட்டிலே உலவும் பல இலக்கியங்கள் - இல்லை பாடல்கள் உலகம் மாயை என்றும், பெண் பிசாசு என்றும் எழுதி விளக்கிவரும் ஒரு நாட்டிலே - நாடகமே உலகம் என்று கொண்டாடும் ஒரு நிலையிலே இப்படி இல்லறத்தைச் சிறப்பித்துப் பாடும் புலவனும் உண்டோ என்று எண்ணத் தோன்றும் சிலருக்கு. நாட்டில் துறவு மனப்பான்மை அந்த நாளில் இல்லை. பின் வந்த சமண பௌத்தத் துறவியரும் பின் வந்த வைதீக சமயத்தாரும் இந்த நிலையாமையை வற்புறுத்தி அனைத்தும் பொய், பித்தை என்று கூறிப் போயினுர். வள்ளுவர் குறளினும் நிலையாமை என்ற ஒரு அதிகாரம் இருக்கின்றதே என்ற எண்ணம் பலர் உள்ளத்தில் எழலாம். அவர் அந்தப் பத்து அதிகாரத்தே உலகம் நிலையற்றது. பெண்டுபிள்ளை சதமல்ல. ஆகவே அனைத்தையும் விட்டுக் காடு சென்று தாழ்சடை வைத்தோ மொட்டையடித்தோ காலம் கழிக்கவேண்டும் என்று கூறவில்லை. அதுதான் மேல் உலகிற்கு வழிகாட்டி என்று வரையறுக்கவில்லை. ஆனுல் உலகில் பல பொருள்கள் அழிவன. பல நிலைப்பன. அழியும் பொருளை அழியாப் பொருளாகக் கருதி அவற்றுல் சுயநலம் பெருக்கி வாழ

லாகாது என்பதே அவர் குறிக்கோள். எப்படியாவது மனிதனுக வாழும் ஒருவர், உலகம்பழிப்பதைச் செய்யாது வாழ்ந்தால் அதுவே போதுமானது என்பது அவ்வள்ளுவர் உள்ளக்கிடக்கை. அவ்வுள்ளக்கிடக்கை வாக்கிடை வருகிறது.

'மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழிந்து விடின்'

என்ற குறளே அது. மற்றும் துறவறத்தினும் இல்லறம் மேம்பட்டதென்றும், அதுவும் உலகம் பழித்தது ஒழித்தால்தான் பயன்தருவதாகும் என்றும் கூறுகின்றார்.

'அறன்எனப் பட்டதே இல்வாழ்க்கை; அஃதும்
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று'

என்பது அக் குறளாகும். இக்குறளுக்கு உரை எழுதவந்த பரிமேலழகர் சற்று வழுக்கி வீழ்கின்றார் என்னலாம். துறவறத்தை இல்லறத்தோடு ஒப்பவாவது வைக்கவேண்டும் என்பது அவர் ஆசை. எனவே அஃதும்என்ற சொல்லுக்கு 'மற்றைத் துறவறமோ எனின்' என்று வலிந்து பொருள் கொள்கின்றார். நேர்முகமாக, வள்ளுவர் கூறியபடியே பொருள் காணின் அறம் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவதே இல்லறத்தான் என்றும், அவ்வில்லறமும் பிறர் பழிக்காத வழியான் நடப்பதாயின்தான் சிறந்ததென்றும் விளங்குகின்றது. எனவே துறவறம் எப்படி அமையினும் அது இல்லறத்தோடு வைத்து எண்ணப்படாத ஒன்று என்பதே வள்ளுவர் துணிபு.

அப்படித் துறவறத்தை ஒதுக்குவராயின் வள்ளுவனுர் தவம் முதலிய அதிகாரங்களை வைக்கக் காரணம் இல்லையே எனப் பலர் நினைக்கலாம். ஆனால் அவர் தவத்தைப் பற்றிக் கூறும் விளக்கத்தைத் தம் அறிவுக் கண் கொண்டு பார்ப்பாராயின் அவர் கொண்ட தவம் 'கர்மயோகம்' என்று கூறப்படும் கடமை நெறியாக முடியுமேயன்றி-வருகின்ற துன்பத்தை விரும்பி ஏற்று, மாற்றார்க்கும் ஊறு செய்யா நெறியாக நிற்குமேயன்றி - வேறு வகையில் உடல் வருத்தி உயிர் வருத்தி நிற்கும் தவம் அன்று என்பது நன்கு விளங்கும்.

'தவஞ்செய்வார் தம்கருமம் செய்வார் மற்றல்லார்
அவஞ்செய்வார் ஆசையுள் பட்டு'

'உற்றநோய் நோன்றல் உயிர்க்குஉறுகண் செய்யாமை
அற்றே தவத்துக்கு உரு.'

என்ற குறள்கள் தவத்தைப் பற்றி வள்ளுவர் கொண்ட கருத்தை விளக்குவன. பரிமேலழகர் இவற்றிற்கும் தாம்கொண்ட கருத்துக்கேற்பப் பொருள் உரைக்கின்றார். 'தவம்செய்பவர்களே தம்முடைய கருமத்தைச் செய்வார்களென்றும், மற்றல்லாதார் ஆசையுட்பட்டு பயனற்ற காரியங்களைச் செய்கிறார்கள் என்றும்' பரிமேலழகர்

முதற் குறளுக்கு உரைகாண்கின்றார். ஆனால் வள்ளுவர் கருத்து அதுவன்று. கருத்து அதுவாயின் இல்லறம் துறவறத்தின் இனிது என்று கூறவேண்டா. 'மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்' என்று எழுதவேண்டா. பின் அவர் கருத்துத்தான் என்னை !

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்'

என்ற குறளை இங்கு ஒப்புநோக்கின் வேண்டிய உண்மைபுலப்படும். உலகில் மனிதன் வாழவேண்டிய வகை உண்டு. அதையும் அவரே வற்புறுத்துகின்றார். நாம் முன்னே காட்டியபடி அறன் அறிவு அனைத்தும், அவற்றின் வழி வாழ்கின்ற வாழ்வனைத்தும் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனாக அமைவதுதான் அவர் கருத்து. இன்றைய தமிழ்ப் புலவர் தம் கருத்தும் இவ்வாறே அமைகின்றது.

'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை'

என்ற முறையிலே பெற்ற பொருளால் சுற்றம் அருத்தி, மற்றவர்க்களித்து, தாமும் உண்டு உலகிடை சிறக்க வாழவேண்டுவதே வாழ்வின் குறிக்கோள். அவ்வாறு வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவரே வானுறையும் தெய்வத்துள் ஒருவராகப் போற்றப்படுவர். அந்த வாழ்வே தவ வாழ்வாம். பெரியபுராணத்தில் பேசப்படுகின்ற பலர் இத்தகைய தவ வாழ்வு வாழ்ந்தே தெய்வத்துள் வைக்கப்பட்டனர்.

தவஞ் செய்வார் - தவம் செய்வார் என்று போற்றப்படுவர், தங்கருமம் செய்வார் - அவரவர்க்கு உரிய கருமங்களைத் தவராது செய்து (பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பி) உலகிடை நல் நெறியில் வாழ்பவராவர். மற்றல்லார் - மற்றல்லாது பேச்சில் தவம் செய்கின்றோம் என்று காடுதிரிபவரும் பிறரும், ஆசையுள்பட்டு - தாம் தாம் வாழவேண்டும் என்ற பேராசையுள் பட்டு, அவம் செய்யார் - அல்லாத ஒன்றைச் செய்பவரேயாவர்.

இக்குறளுக்கு இவ்வுரை பொருந்தி நேர்முகமாக விளங்கி இருக்க, பரிமேலழகர் இதிலும் தவறு இழைத்துள்ளார். மற்றைய குறளுக்குப் பொருள் விளக்கமாக உள்ளது. எனவே வள்ளுவர் தம் குறிக்கோளில் இல்லறம் சிறந்தது என்பது விளக்கும். ஏன் வள்ளுவனார் அவ்வாறு இல்லறம் சிறந்ததென்று சொல்லவேண்டும் என்பதையும் எண்ணல் நலம் பயப்பதாகும். துறவறத்தான் தன்னைத் தவிர மற்றவர் யாரைப்பற்றியும் கவலைப்படாதவன். தன் உயிர் மட்டும் நன்னிலை எய்தவேண்டும் என்று எண்ணுபவன். தன்னைத் தவிர மற்றவை அனைத்தும் பொய் - அழியக்கூடியன என எண்ணுபவன். ஆகவே, அனைத்தையும் விட்டு ஓடிக் காட்டுக்குள் தனியாகக் காலம் கழிக்க நினைப்பவன். கண்ணால் காணுகின்ற உலகை வெறுத்து, காணா ஒன்றுகாகக் கானல்நீர் பெற ஓடும் மான்போல் ஓடுபவன். ஆகவே, அவன் நூற்றுக்கு நூறு சுயநலவாதியாகின்றான். வள்ளுவர் தம் அறவழியோ - அல்லது தமிழ்நாட்டு அற

நெறியோ, இப்படித் தனக்கென வாழவேண்டும் என வரையறுக்க வில்லை. அறமே மற்றவரை ஆக்கப் பயன்படுவது. அதனுல் தான் இல்லறத்தானை மற்றவனுக்கு உதவுபவன் என்று பலவிடங்களில் வற்புறுத்துகின்ருர். மற்றவர் பழிக்கும் செயலால் அவன் வாழக் கூடாது. மற்றவர் தழைக்கத் தானும் வாழவேண்டுவது அவன் கடன் என விளக்குகின்ருர் அவர்.

'தென்புலத்தார் தெய்வம் விருந்துஒக்கல் தான்என்ருங்கு
ஐம்புலத்தன் ஓம்பல் தலை'

என்றும்,

'துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை'

என்றும் எடுத்துக்காட்டுகிருர்.

இன்னும் இல்லறத்தான் உலகை ஓம்பும் தாயாம் நெறியில் நின்று, உலகம் என்றும் நல்ல நிலையில் இருக்கத்தக்க வழிகளை வரையறுக்கின்ருர். அவன் இன்றேல் உலகை உண்மையிலேயே ஓம்பு வார் இல்லை எனலாம். அதனுல்தான் வள்ளுவர் அன்புடைமையை இல்லறத்தானுக்குத் தேவை என வற்புறுத்தினுர். அன்பின்றேல் வாழ்வில்லை. இல்லறமின்றேல் அன்பில்லை. ஆகவே இல்லற மன் றேல் வாழ்வில்லை! வளமில்லை!

இனி, அறனை வள்ளுவனுர் எவ்வாறு விளக்குகின்ருர் என்ப தைக் காணல்வேண்டும். அறம் என்ருல் உலகிலே மற்றவர்களுக் குக் கொடுத்தல் என்ற அளவில்தான் இன்று பொருள் இருந்து வருகின்றது. அப்படிக் கொடுப்பவர்களும் ஏதோ பட்டம், பதவி, பின்னிலை ஆகிய பலவற்றைக் கருத்துக்கொண்டே கொடுப்பவர்க ளாகக் காண்கின்ருர்கள். ஈயாத லோபி என்று ஏழைகளால் பேசப்படுபவர்களெல்லாம், ஆயிரக்கணக்கா, அரசாங்க விருந்து களுக்கோ அல்லாத பெருமைகளுக்கோ செலவிடுவதை நாட்டில் காண்கின்றேம். வெறும் பகட்டுக்கும் படாடோபத்திற்கும் பணத்தை வாரி இறைக்கும் பொருளாளர்கள் அவசியமான - நாட்டுக்குத் தேவையான - ஏழைகளுக்கு இன்றியமையாத வகை யில் ஒரு காசும் செலவிடத் தயங்குவது நமது அன்ருட வாழ்வில் காணும் காட்சியாக உள்ளது. திருவள்ளுவனுர் இத்தகைய அறத்தை வேண்டவில்லை. உண்மையிலேயே உடன் பிறந்த மக்க ளும், பிற உயிர்களும் வருந்தும் வருத்தை மனத்தால் உணர்ந்து உதவி செய்தலே அறமாகும். அத்தகைய நல் உணர்விற்கும் உளம் தூயதாக இருக்கவேண்டும். தூய உள்ளத்தே பிறர் துயரம் காணும் வழி, அன்பு ஊற்றெடுக்கும். அந்த அன்பின் வழி அறம் தழைக்கும். ஆகவே அறத்துக்கு அடிப்படை மனத்தூய்மை.

'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்துஅறன்
ஆகுல நீர பிற'

என்ற வள்ளுவர் வாக்கைச் சற்றுச் சிந்தித்துப் பார்க்கும்போது

இதன் உண்மை புலப்படாமல் போகாது. மனம் தூய்மை அறத்திற்குஅடிப்படை. இது எந்நாட்டவரும் காணாத ஒன்று. அறன் என்றால் கொடுத்தல் என்ற அளவிலேதான் அமைந்தது. அறனும் அன்பும் ஒன்றை ஒன்று பற்றி நிற்பன. உள்ளத்து அன்பு அமையில், தூய்மை உள்ளம் மற்றவர் குறைகாண நேரின் பள்ளத்துட் பாயும் வெள்ளம்போல் விரைந்து சென்று வேண்டிய வகையில் உதவும். அந்த அறத்தின் வழியே மற்ற அனைத்தும் அமையும். எனவேதான் வள்ளுவனார் அறத்தை மாசற்ற வகையில் காட்டுகின்றார்.

சங்ககாலப் புலவர் பலரும் அறத்தின் திறனை அறுதி இட்டுக் கூறுகின்றார்கள். அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றும் நல்நெறி அறிந்த பெரியோர்கள் அவ்வறமே பிற பொருள் இன்பம் பெறுதற்கு ஏற்றது என்று காட்டத் தவறவில்லை.

> ' சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்
> அறத்து வழிப்படும் தோற்றம் போல் ' (புறம் 31)

என்ற அடிகள் எதை விளக்குகின்றன. உலகிடை மக்கள் பெற்று வாழ விரும்பும் பொருளும் இன்பமும் அறத்தாறு அமைவன என்பதை விளக்கவில்லையா! அறம், பொருள், இன்பம் என்ற மூன்றும் உலகிடை இன்றியமையாதன வாழ்வுக்கு. ஆனால் பின்னவை இரண்டும் - பொருளும் இன்பமும் அறத்தின் வழியாக வந்து அமைவனவாகும். எனவே அறத்தைச் செம்மையான வழியில் போற்றிப் புரக்கவேண்டும். சங்ககாலப் புலவர்கள் அறத்தை எவ்வாறு போற்றி வந்தார்கள் என்பதற்கு எண்ணற்ற சான்றுகள் கிடக்கின்றன. அவற்றை விரிப்பிற் பெருகும்.

அறத்தின் அடிப்படை தன்னைப்போல் பிறரை நோக்கல், பிறர்க்கு வரும் துன்பத்தைத் தமக்கு வருவதாக எண்ணி உற்றுழி உதவல். அப்படி உதவுபவர்களே உயர்ந்தோர். அவர்தம் உள்ளமே மாசற்ற உள்ளம். இக் கருத்தைக் கலித்தொகையில்

> ' பிறநோயும் தன்னோய்போல் போற்றி அறனறிதல்
> சான்றோர்க் கெல்லாம் கடனானால் ' என்கின்றார் ஆசிரியர்.

அறன் அறிதல் வேண்டுமாயின் பிறநோயெல்லாம் தன்னோய் போல் போற்றவேண்டும் என்று காட்டுகின்றார். அங்கேதான் உண்மையில் அறன் அறியப்படும். நாட்டுத் தலைவரோ, அன்றி கோட்டத்தலைவரோ தம்பேரால் ஒரு நிதி திரட்ட முற்பட, அதற்காக அவர் கீழ் உள்ளவரோ - ஒத்தவரோ தம் பேரும் புகழும் சிறக்க வேண்டு மென்றோ, பெறவேண்டிய சலுகைகள் பெறப்பட முடியாது எனறு அஞ்சியோ ஆயிரக்கணக்கில் வாரிக்கொடுப்பது அறனறிதல் ஆகாது. ஒரு ஏழை விடுதிக்கு ஒரு ஊர் மேயர் பொருள் திரட்டுகின்றாரென வைத்துக்கொள்வோம். அல்லது ஒரு கலைக்களஞ்சியம் ஆக்க ஒரு அமைச்சர் பொருள் திரட்டுகின்றார் என்று எடுத்துக்கொள்வோம். அதற்குப் பல செல்வர்கள் பல ஆயிரக்கணக்கில் பொருள் கொடுப்பதை அறிகின்றோம். காண்கி

ரோம். அவையெல்லாம் வரவேற்கத் தக்கவைதான். மகிழ்கின்றோம். ஆனால், அதே மேயரோ அன்றி அமைச்சரோ தம் பதவியும் செல்வாக்கும் இல்லாத நாளிலே இதே முறையில் நிதி திரட்ட முற்படுவார்களானால் அத்துணை பெருந்தொகை பெற முடியுமா என்று எண்ணிப் பார்க்கவேண்டும். நிச்சயமாக முடியாது என்று கூறுவோம். காரணம் பொருள் கொடுத்தவர்களெல்லாம் தம்மைப் போல் மற்றவர் வாழவேண்டுமென்றோ, மக்கள் நல்லறிவு பெற வேண்டுமென்றோ கொடுத்தவர்கள் அல்லர். அவர்கள் அறன் அறியாதவர்கள். அவ்வாறு கொடுப்பதால் தங்களுக்கு ஏதாவது பதில் நன்மை ஏற்படும் என்ற உள்ளத்தோடே கொடுத்திருப்பார்கள். ஆனால் பிறர் துயரம் கண்டு உண்மையில் உளம் நைந்து அவர்கள் இருக்கும் இடம் தேடி - காந்தி அடிகளார் போன்று - துயரிடை நின்று தொண்டாற்றியவர்களே அறமறிந்தவர்கள். அவர்தம் உள்ளமே மாசற்ற உள்ளம். உலகம் போற்றிடும் உயரிய உள்ளம்.

இனி அறன் அறிந்த உள்ளம் எப்படி அமையும் என்பதைப் பதிற்றுப்பத்தின் அடிகொண்டு காண்போம். விருந்து புறத்ததாத் தான் உண்டல் சாவா மருந்தாயினும் வேண்டற்பாலதன்று என்றார் வள்ளுவர். ஆம்! அறனறிந்த உள்ளம் அவ்வாறு வாழ ஒருப்படாது. எது பெற்றாலும், பெற்றதுகொண்டு சுற்றத்தையும் மற்றவரையும் அருத்தித் தாமும் உடன் உண்ணுதலே அறவோர் கண்ட வாழ்க்கை. இனியவை பெற்றால் தனித்தனி நுகராது பகுத்துண்டு வாழ்தலே ஆண்மையாகும். அறமாகும். ஆண்மை என்பது போரிடுவது மட்டுமன்று. வாழ்வாங்கு வாழ்தலேயாகும். வாழும் நெறியில் வழுக்கி விழாது தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனாக இருத்தலே ஏற்புடைத்தாம்.

> ‘இனியவை பெறினே தனித்தனி நுகர்கேம்
> தருகென விழையாத் தாவில் நெஞ்சத்து
> பகுத்தூண் தொடுத்த ஆண்மை
> பிறர்க்கென வாழ்தி நீயாகன் மாறே’

என்ற பதிற்றுப்பத்தின் அடிகள் இவ்வுண்மைகளை உணர்த்துகின்றன. எனவே அறன் என்பதும் வெளிப்படை. அது செயலால் மட்டும் அமைவது அன்று எனவும் உள்ளம் தூய்மையாதலே எனவும், அவ்வுள்ளத் தூய்மையிலே அன்பு முகிழ்க்கும் எனவும், அவ்வன்பின் வழி வாழ்வோர் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராக விளங்குவர் எனவும், அந்த அறநெறியே நாட்டில் வேண்டுவதன்றி, பிற ஆரவாரச் செயல்கள் தேவை இல்லை எனவும் அதுவே அறவாழ்வு - அன்பு வாழ்வு - இன்பம் நிறைந்த வாழ்வு எனவும், அந்த அறவாழ்விலேதான் பொருளும் இன்பமும் பூக்கும் எனவும், அந்த நன்னெறி பற்றி வாழின் உலகில் உயர்வு உண்டு எனவும் வள்ளுவனார் வரையறுத்துக் காட்டியுள்ளனர். வள்ளுவனார் மட்டுமின்றி வள்ளுவர் காலத்து வாழ்ந்த தமிழ்ப் புலவரும், பிற காலத்தவரும் அவ்வாறே வற்புறுத்தலைக் காண்கின்றோம்.

அறம் ஆற்றுதற்குக் காலமும் இடமும் ஆளும் கணிக்க வேண்டுவதில்லை. இன்னார்க்குத்தான் அறம் புரிய வேண்டும் என்ற நிலை நாட்டில் பின்னால் உண்டாயிற்று. ஒரே இனம் என்ற உணர்விலே வாழ்ந்த அந்த நாளில் அறத்துக்குப் பாத்திரம் காணும் கருத்து இல்லை. ஜாதி வெறியும் பிற வெறிகளும் நாட்டில் தலைவிரித்தாடத் தொடங்கிய நாளிலிருந்துதான் 'பாத்திரமறிந்து பிச்சையிடு' என்ற பழமொழியும் கிளைத்தது. 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று அறுதியிட்ட வள்ளுவன் வாழ்ந்த நாட்டிலே, பிற்காலத்திலே எப்படியோ உலகில் இல்லா வேறுபாடுகள் அனைத்தும் புகுந்துவிட்டன. அதனால் அறத்தினது நிலை கெட்டது. இன்று அறமும் அறிவும் வள்ளுவன் கண்ட அந்தப் பொருளிலே நாட்டில் - உலகில் வழங்கவில்லை. அறக்காப்பும் அறிவுக்காப்பும் அல்லாக் காப்பாகவே அமைகின்றன. வள்ளுவன் புகழ் பரப்பும் ஒவ்வொருவரும் அறத்தையும் அறிவையும் அவன் கூறியாங்கு அறிந்து மற்றவர்களுக்கும் விளக்கி வாழ்வை அறிவுத் துறையில் அறநெறியில் செலுத்தவேண்டும் என்பதை அறிய வேண்டும். அப்படி அறியும் நாளே உண்மையில் உலகம் வள்ளுவனை அறிந்த நாளாகும். அன்றே உலகம் உயரும். தமிழன் தலை நிமிர்வான். அந்நாள் விரைந்து வருவதாக!

தீதொழிய நன்மைசெயல்

உலகில் தோன்றி வாழ்கின்ற உயிர்கள் அத்தனையும் தாம் தாம் இன்பத்தோடு வாழவேண்டும் என்ற குறிக்கோளிலேயே கருத்திருத்துகின்றன. மனிதன் மட்டுமன்றி விலங்கினங்களும், பறப்பனவும், பிற உயிர்வாழ் இனங்களும் தம் தம் நல்வாழ்வையே நாடி நிற்கின்றன. தன் வாழ்வு ஒன்றையே நினைத்து மற்ற உயிர்களினது வாட்டத்தையோ, வருத்தத்தையோ கருதாது வாழும் உயிரினங்கள் தான் உலகில் காணும் அனைத்தும். ஒன்றை ஒன்று விழுங்கியும், கொலைசெய்து உண்டும், பிறவகையில் மற்ற வற்றிற்கு ஊறு செய்து மகிழ்ந்தும் வாழ்கின்ற உயிரினத்தின் உச்சியிலே மனிதன் வாழ்கின்றான். பாம்பு மனிதனைப் பார்த்து அஞ்சி ஓடுவதும், மனிதன் பாம்பைக் கண்டு பயந்து நடுங்குவதும் ஒன்று, மற்றொருவனையோ ஒருவன் மற்றொன்றையோ கண்டு, ஊறு உண்டாகும் என உணர்ந்து அத்துன்பிலே இருந்து நீங்க வேண்டும் என்ற அவாவினால் உண்டாவதேயாகும். தாழ்ந்த உயிரினங்கள் தம் தம் குழந்தைகளையே உண்டு வாழ்வதைக் கண்ணில் காண்கின்றோம். அன்பென்ற உயிருணர்ச்சி அனைத்துக் கும் பொதுவேனும், அவ்வெல்லையைக் கடந்து சில உயிரினங்கள் அன்புக்குரிய குட்டிகளை, குஞ்சுகளை தம் உணவாகவே கொண்டு வாழ்வது உலகியற்கையன்றோ! கடலிலே பெரு மீன்கள் சிறு மீன்களை உண்பதும் அறிந்ததொன்று. இப்படி வாழும் உயிரினங் கள் அனைத்தும் தம் தம் இன்பத்தையே குறிக்கோளாகக் கொள்ளுகின்றன. மனிதன் அந்த உயிரினத்தின் உச்சியில் இருப் பினும் அவன் பகுத்தறிவு பெற்றவனாகின்றான். அப்பகுத்தறிவின் முளையிலே தோன்றுவது அவனை உயர்வுடையவனாக்குகின்றது. அப்பகுத்தறிவால் அவன் நன்மை தீமையைக் கண்டறிகின்றான். பிற உயிர்களைப்போல அனைத்தும் தன் நன்மைக்கென்று அவன் அறிவு சொல்லவில்லை. அறிவின் வழியும், அறிவு விளக்கம் தரும் கல்வி வழியும், அவனைப் பிற உயிரிலிருந்து வேறுபடுத்துகின்றன. அந்த வேற்றுமையில் அவன் தன்னை மட்டுமன்றித் தன்னைச் சுற்றி யிருக்கும் உலகையும் காணும் உணர்வு பெறுகிறான். அந்தப் பேருணர்விலே அரும் உண்மை வெளியாகிறது. உலகில் பிறந்தது இன்பத்தோடு வாழ்வதற்கு வகை தேடுவதற்குத் தான் என்றாலும் அவ்வின்ப வாழ்வு - இன்பபுரிப் பயணம் மற்றவர்களுக்கோ, பிற உயிர்களுக்கோ ஊறு உண்டாக்கா வகையில் அமையவேண்டும் என்று அவன் கல்வி, அறிவு அவனுக்கு நினைவூட்டுகின்றன. அந்த அறிவின் முடிந்த முடிபிலே, தான்பெற்ற இன்பம் உலகம் பெறுக என்ற பரந்த மனப்பான்மை - எண்ணம் - உணர்ச்சி

O-,5 NPS,
N50

உண்டாகிறது. அந்த உணர்ச்சியின் வழி அவன் நடக்கும் நாளிலே தான் அவன் கற்றவனுகக் கருதப்படுகின்ருர்.

‘ தாமின் புறுவதுல கின்புறக் கண்டு
காமுறுவர் கற்றறிந் தார் ‘

என்று வள்ளுவர் அவர்தம் கல்வித் திறன் பயன்படும் வகையில் நன்கு விளக்கிச் சென்ருர். அந்தக் கல்வியின் பயன் - அறிவின் அடையாளம் - உணர்ச்சியின் மெய்ம்மை மனிதனை உண்மையில் மனிதனுகவே ஆக்குகிறது.

அந்த உணர்ச்சி நிலையில் உலகிலே பல நல்லவர்கள் காலந் தோறும் தோன்கின்ருர்கள். பல நாடுகளிலே - பல மொழிபேசும் மக்களிலே - பல கலைகள் பல்கும் பாகங்களிலே அடியவர் - அறிஞர் - நல்லவர் தோன்றுகின்றனர். அவர்தம் ‘ எல்லாரும் இன்புற்றிருக்க நினைக்கும் ’ எண்ண அலைகள் எழும் இதயத்தில் பல கொள்கைகள் - குறிக்கோள்கள் முகிழ்க்கின்றன. உலகத்தில் நாம் பிறந்தது நமக்காக மட்டுமன்று; உலகம் வாழ - உலக மக்கள் வாழ - உயிரினங்கள் உய்வு பெற்ற - உற்ற நலன் செழித்தோங்க - வழி வகுக்க வேண்டியவர்கள் என்று எண்ணுகின்றனர். அவ் வெண்ணத்தின் அடிப்படையில் எல்லாரும் - எல்லா உயிருக்கும் நன்மைசெய்ய வேண்டுமே ஒழிய, தீமை எள்ளளவும் நினைக்க லாகாது என்ற முடிவு தீட்டப்படுகிறது. இந்த முடிபின் பேரிலேயே பல சமயங்கள் உலகில் பல பாகங்களில் அவ்வப்போது தோன்றி வளர்ந்து வாழ்ந்து வருகின்றன. ஆகவே ஒவ்வொரு சமயத்தின் அடிப்படையும் ‘ பிறருக்கு நன்மை செய், தீமை எண்ணுதே ’ என்ற சுவரால் எழுப்பப்பட்டதாகின்றது. அந்த உணர்ச்சிக்குக் காரணம் காட்டுமுகத்தால் சமயங்கள் பிற் காலத்துப் பல நிகழ்ச்சிகளைக் கொண்டு சான்றுகளை அமைத்துக் கொண்டன. ஒருவன் செய்கின்ற நன்மை அவனுக்குத் திருப்பித் தரப்படும், அதைப்போன்றே தீமையும் அவனுக்குப் திருப்பிப் பலன் தரும் என்று விளக்கிக்காட்டி மற்றவருக்கு என்றும் தீமை செய்யற்க-நன்மை புரிக என்று கூறினுர்கள். அதுவே அனைத்தினும் தலையாய அறம் என்று வள்ளுவனுர் வரையறுத்துச் சென்ருர்.

‘ எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானும்
மாணு செய்யாமை தலை ’

என்ற குறள் கருத்து உலகில் மற்றவர்க்குத் துன்பம் செய்யா மாபெரும் அறத்தை வற்புறுத்துகின்றது. இந்தக் குறள் ஒன்றின் அடிப்படையிலேயே எல்லாச் சமயங்களும் முகிழ்த்தன. அவற்றின் கொள்கையெல்லாம் தாம்வாழப் பிறரை வருத்தாதனவாய தீ தொழிய நன்மைசெய்ய வேண்டும் என்ற உயரிய ஒன்றிலேயே சென்று முடியும். இப் பேருண்மையைக் கண்டறிந்தார் தமிழ் மூதாட்டியார். கண்ட உண்மையை உலகம் காண்க என வாரி வழங்குகின்ருர். அது இது.

10448l

புண்ணியமாம் பாவம்போம் போனநாள் செய்தஅவை
மண்ணில் பிறந்தார்க்கு வைத்தபொருள் - எண்ணுங்கால்
ஈதொழிய வேறில்லை எச்சமயத்தோர் சொல்லும்
'தீதொழிய நன்மை செயல்.'

இந்தப்பாடல் தமிழ் நாட்டில் மிகச் சாதாரணமாக வழங்கும் ஒரு பாடலாகும். ஐந்தாம் வகுப்புப் பயிலும் ஒரு மாணவன் மனப் பாடமாக மட மட வென்று ஒப்புவிக்கும பாடல் இது. ஆசிரியர் பதவுரை ஒருவேளை சொல்லி இருந்தால் அதையும் சேர்த்து மனப் பாடம் செய்வான். அவ்வளவுதான் அது பற்றி அவன் அறிந்தது. இன்னும் சற்று அதிகமாகச் சொல்லவேண்டுமானால் அந்தப் பாடலைப் படித்தால்தான் ஐந்தாம் வகுப்பிலிருந்து ஆறும் வகுப்புச் செல்லமுடியும் என்ற உண்மை மட்டும் அவனுக்குத் தெரியும். ஆனால் இந்தப் பாட்டின் கடைசி இரண்டு அடிகள்தான் உலக சமயம் அனைத்தையும் உண்டாக்கின என்றோ, உலக வாழ்வுக்கு இவைதாம் அரண் செய்வன என்றோ, இந்த உண்மை என்று இல்லையோ அன்று உலகில் அமைதியும் இல்லை என்றோ அவன் அறியமாட்டான். ஏன் அதைப் பயிற்றும் ஆசிரியர் கூட அந்த அளவுக்குக் கற்றுக் கொடுத்திருக்கமாட்டார். ஆனால் இந்த ஈற்று அடி - தீதொழிய நன்மை செயல் என்ற தெய்வமொழி - மெய்ம்மறை - உலகை உய்விக்கும் - உலகை வாழ்விக்கும் - போரை நீக்கும் - வாழ்வை வளர்க்கும், எல்லாரும் இன்புற்றிருக்க வழி கோலும் என்ற உண்மை எல்லோரும் சாதாரணமாக அறிந்தது தான். அறிந்தும் பயன்?

சமயங்கள் என்று சொன்னோம். இன்று நாட்டில் பல சமயங் கள் வாழ்கின்றன. அவற்றுள் மிகச் சில இன்று தலை தூக்கி வாழ்கின்றன. சைவம், வைணவம், பௌத்தம், சமணம், கிறித் தவம் மகமதியம் என்ற ஆறும் இன்று நம் தமிழ்நாட்டில் வாழ் கின்றன. எச்சமயத்தோர் சொல்லும் இது என்றால் மேலே கூறிய சமயங்கள் இக்கொள்கையை வலியுறுத்துகின்றனவா என்று முதலில் கண்டறிந்து, பிறகு முடிபினைக் காணல் ஏற்புடைத்து.

முதலில் கூறியபடி சமயங்கள் நல்லவர்களால்-அறவோரால் - அறிஞர்களால் ஏற்படுத்தப்பட்டன. அவற்றின் கொள்கைகளெல் லாம் சிறந்தனவாக வாழ்வை வளமாக்குவனவாக அமைந்துள்ளன. முதலாவதாகச் சைவம் இக் கொள்கைக்கு எவ்வளவு அரண் செய்கின்றது என்று காணலாம். சைவம் தனிச் சமயம். சைவத் தின்மேற் சமயம் வேறில்லை என்று பேசப்படுவது. சைவ சமயத்தை விளக்கவந்த நூல்கள் பல. இன்றும் சைவம் விழாவிலே- வேடிக்கை மத்தியிலே - ஆடம்பரத்தின் நடுவிலே தன் கொள் கையை மறைய வொட்டாது காத்துக்கொண்டுதான் வருகிறது.

நாட்டிலே சாதாரண மக்களும் அறிந்த வழக்கத்திலே உள்ள சைவ சமய இலக்கியம் தேவாரமாகும். தேவாரம் அறியாதவன் சைவனல்லன் என்றும் கூட முடிபு கட்டுவார்கள். அத்தகைய

உயர்ந்த தேவாரத்தைப் படிப்போர் பலர். திங்கள் ஒன்றுக்கு ஒரு திருமுறையாகப் பன்னிரண்டு திங்களுக்கும் பன்னிரு திருமுறையைப் பாடமாக ஓதுவாரும் பலர் உளர். ஆனால் ஓதியதன் பயன் என்ன என்று கேட்டால் அவர்கள் அறியார்? ஏன் ஓதினீர்கள் என்று கேட்டால் இது எங்கள் அப்பன் பொன்னார்மேனியன் புகழ்பாடும் நூல் என்று பதில் சொல்வார்கள். அதில் கூறியது என்ன? கூறியபடி நடக்க விருப்பமோ என்று கேட்டால் பதில் கூடப் பிறக்காது. அதில் உயிர்களைத் தன்னைப்போல் நோக்க வேண்டுமென்று கூறியுள்ளதே நோக்குகிறாயா என்றால் வாய் ஊமையராவர். இத்தகையோர்க்குத் தேவாரம் வேண்டாம் என்கிறார் ஒரு பெரியார். பாட்டு அனைவருக்கும் தெரிந்தது:

'தாவாரமில்லை தனக்கொரு வீடில்லை
தேவாரம் ஏதுக்கடி—குதம்பா
தேவாரம் ஏதுக்கடி'

என்ற பாடலே அது. இது சித்தர் பாட்டு என்று சொல்வார்கள். இது சித்தத்தை விளக்கும் பாட்டு என்று சொல்லுகிறேன். இதன் பொருள் வேடிக்கை என்று விளக்கமுடியாது நிற்பார்கள் பலர். ஆனால் இதில் நன்றாகத் தேவாரம் எதற்காகப் படிக்க வேண்டும் என்பதை விளக்குகிறார் ஆசிரியர். இதன் கருத்துத் தான் என்ன என்று எண்ண வேண்டும். தாவாரமும் வீடும்தான் இதில் கூறப்பட்டனவா? ஆம் என்பார் சிலர். தாவாரமும் வீடும் இல்லாத பரதேசிக்குத் தேவாரம் எதற்கு என்பதுதான் இதன் பொருள் என்று கேலிகூடச் செய்வார்கள். ஏன்? அதுதான் உண்மைப் பொருள் என்று கூட அவர்கள் சொல்வார்கள். ஆனால் உயிர்களது வருத்தத்தை - பிறரை வருத்தும் வருத்தத்தை - தமக்கும் பங்கு உண்டு என்று பகிர்ந்து கொள்ளும் வகையில் பிறர் துன்பம் தாங்கி, அத்துன்பத்தை நோக்காதவர்களுக்கு உய்தியில்லை - விடுதலை இல்லை. ஆகவே அத்தகையோர் தேவரத்தைப் படித்தாலும் பயனில்லை என்று திட்டமாகக் கூறுகின்றார். எனவே தேவாரம் படிப்பதன் முன் பிறர் துன்பைப் பகிர்ந்து அவர்க்கு உதவிசெய்யும் உளம் பெறவேண்டும் என்றும், அப்படிப் பெறாதார் எத்துணைத் தேவாரம் பயின்றாலும் வீடில்லை என்றும் முடிவு கட்டலாம். இனி சொல் பிரித்துப் பொருள் காணலாம்.

தா + வாரம் + இல்லை
தா = வருத்தம் - பிறர் பெறும் துன்பத்தை
வாரம் - பங்கு - பங்கிட்டுக் கொண்டு அத்துன்பத்தை நீங்க
இல்லை - வகையில்லாதவர்களாகிய
தமக்கு - அவர்களுக்கு
ஓர்வீடில்லை - ஓர் உய்தில்லை (மோட்சமும் இல்லை) எனவே அவர்களுக்கு
தேவாரம் ஏதுக்கு - தேவாரம் என்ன பயனைச் செய்யும் (தேவாரம் படிப்பதால் பயனில்லை) என்பதாகும்

தா என்ற சொல் வருத்தத்தைக் குறிப்பதென்பதைத் தொல்காப்பியம் நன்கு விளக்கும்.

'தாவே வலியும் வருத்தமுமாகும் (தொல்-பொரு 344). சிந்தாமணியின் ஆசிரியரும் 'தாவிடுமின்' (747) என்றார். இனி வாரம் என்பதற்குப் பங்கு என்பதை, தொல் பொருளதிகார 464 - 462 சூத்திரங்களும் உரைகளும் விளக்குகின்றன. 'வல்லோன் புணரா வராம் போன்றே, என்பதும் இலக்கியம். எனவே இந்த முறையில் தேவாரத்தின் உட்கிடக்கை தீதொழிய நன்மை செய்வதோடு, மற்றவர் தம் தீமையையும் தாம் பங்கிட்டுக் கொண்டு அவர்களுக்கு உற்றுழி உதவவேண்டும் என்பது தெற்றென விளங்குகின்றது. ஆனால் தேவாரம் படிப்பவர்கள் இந்தக் கருத்தைச் செயலில் காட்டுவார்களா? எங்கே இருக்கிறது என்று கேட்டாலும் கேட்கலாம். அதைக் கருதிச் சில கண்டு மேலே செல்லலாம்.

'புண்ணியம் ஆம் பாவம் போம்' என்று பாடினார் ஔவையார். வாழ்வளிப்பது புண்ணியம் என்றும், வகை கெடுப்பது பாவம் என்றும் சொன்னார்கள். புண்ணியம் நன்மை செய்யும் வழியும், பாவம் தீமை செய்யும் வழியும் பற்றுவன என்பது சமய உண்மை. ஆகவே அவரவர் நன்மை தீமைகளுக்கு ஏற்ப அவரவர் நலக்கேடுகள் பெருகும் என்பது உண்மை. இந்த உண்மை உணரப் பிறவிகள் பல எடுக்கவேண்டுவதில்லை. இந்தப் பிறவில் செய்த நன்மை தீமைகள் அடுத்த பிறவியிலே வந்து கூடும் என்று சொன்னாலும், சுந்தரர் இதற்கெல்லாம் பிறவிகளைக் கணக்கெடுக்க வேண்டாம் என்று சொல்கின்றார். இம்மைச் செய்தது இங்கேயே பயன் தரும் என்கின்றார்.

> 'செற்றொருவரைச் செய்த தீமைகள்
> இம்மையே வரும் திண்ணமே'

என்பது தேவாரம். (திருப்புறம்பயம் - 99). இவ்வாறு தீமை திரும்பவும் நமக்கே பயன் நல்குகின்ற காரணத்தால் நாம் மற்றவர்க்குத் தீங்கு செய்யலாகாது என்று வற்புறுத்துகின்றார். தீதொழிய நன்மை செயல் என்ற உயர்வை உணர்த்துகிறார்.

தீமை இவை நன்மை இவை என்று விளக்கவேண்டிய அவசியம் இல்லை. உலகிலே நன்மை தீமைகளைத் தம் அளவில் ஒவ்வொருவரும் அறிந்துதான் இருக்கின்றார்கள். அதை எண்ணத் தான் திருவள்ளுவர்,

> 'இன்சொல் இனிதுஈன்றல் காண்பான் எவன்கொலோ
> வன்சொல் வழங்கு வது'

என்று கேட்கின்றார். தன்னை நோக்கி ஒருவன் கூறும் இன்சொல் நலம் பயப்பதை அறிந்து, மற்றவனுக்கு அந்த இன் சொல்லை வழங்காது, வன்சொல்லை வழங்கல் எதற்கு என்று கேட்கின்றார். இந்த அடிப்படையிலே தனக்கு நலம் பயப்பன எதுவோ அதையே பிறரும் விரும்புவர் என உணர்ந்து மற்றவர்க்கு உதவ வேண்டும் என்ற உறுதி பிறக்கவேண்டும். அந்த உறுதியுளத்தே வஞ்சகம்

முதலிய தீமைகள் இடம் பெறு, இறைவனை வழிபட வஞ்ச நெஞ்சம் பயன் படாது. திறந்த உள்ளத்தோடு அனைவரையும் சேரவாரும் என்றழைத்துத் தான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் என்று வாழ்வார் உள்ளங்கள் எப்படி அமையும் என்று தேவார ஆசிரியர்கள் காட்டத் தயங்கவில்லை.

பொய் முதலிய கொடுமைகள் அகல வேண்டும் என்கிறார்கள். இல்லை என்னாது ஈந்துவக்க வேண்டும் என்கிறார்கள். நமக்கு என்று அனைத்தையும் தேடி வைத்துக் கொள்ள வேண்டாம் என்று கூறுகிறார்கள். மனம் தூய்மையுற வேண்டும், தூய்மையில்லாது செய்யும் பிற சமய ஆடம்பரங்கள் பயனற்றன என்கிறார்கள். பிறந்தது பிறருக்கு அறமாற்றுதற்கே என்கிறார்கள். இறைவன் அருளும் அந்த அறமாற்றுவோருக்கே அமையும் என்கிறார்கள். வஞ்சனை, உள்ளத்திருந்து ஓட்டப்பட வேண்டும் என்கிறார்கள். சாதியும் குலமும் தகர்க்கப்பட வேண்டும் என்கிறார்கள். புறம் பேசல், வீண்பொழுது போக்கல் முதலிய தீமைகள் ஒழிக்கப்பட வேண்டும் என்கிறார்கள். மக்களாய்ப் பிறந்தவர்தம் கடன் மற்றவர்களுக்குப் பணி செய்தலே என்பதைத் திட்டமாக வற் புறுத்துகிறார்கள். இன்னும் பல அவர்கள் தீதொழிந்து நன்மை செய்யக் காட்டும் வழிகள். அவற்றுள் சிலவற்றை அவரவர் தம் வாக்குகளிலேயே காண்போம் :

‘ பொய்யா நாவதனால் புகழ்வார்கள் மனத்துள்ளே
மெய்யே நின்றெரியும் விளக்கொத்த தேவர் பிரான் ’

என்று சுந்தரரும்

‘ பொய்யனைத்தையும் விட்டவர் புந்தியுள் மெய்யனை ’

என்றும்

‘ பொய்யர் காலங்கள் போக்கிடு வார்களே ’

என்றும் அப்பரும் கூறிச் சென்றார்கள்.

‘ இன்மையால் சென்றிரந்தார்க்கு இல்லை என்னாது
ஈத்துவக்கும் தன்மையார் ’

‘ விலங்கலமர் புயன்மறந்து மீன்சனிபுக்கு
ஊன்சலிக்கும் காலம் தானும்,
கலங்கலிலா மனப்பெருவண் கையுடைய
மெய்யர் வாழ் கழுமலமே ’

என்றும்

‘ வையம் விலைமாறிடினும் ஏறுபுகழ் மிக்கிழிவிலாத வகையார்
வெய்ய மொழி தண்புலவருக் குரை செய்யாதவர் ’

என்றும் சம்பந்தரும்

‘ இரப்பவர்க் கீயவைத்தார், ஈபவர்க் கருளும் வைத்தார்
கரப்பவர் தங்கட் கெல்லாம், கடு நரகங்கள் வைத்தார் ’

என்று அப்பரும் ஈதல் தன்மையைச் சிறப்பித்துள்ளார்கள்.

'நெஞ்சம் என்பதோர் நீள்கயம் தன்னுளே
வஞ்சம் என்பதோர் வான்சுழிப்பட்டு நான்
துஞ்சம் போது'

என்றும்

'வஞ்சமின்றி வணங்குமின் வைகலும்
வெஞ்சொலின்றி விலகுமின் வீடுற'

என்றும் அப்பரும்

'தன்னில் ஆசறுசித்தமு மின்றித்
தவமுயன்று அவமாயினபேசிப்
'பின்னல் ஆர்சடைக் கட்டிஎன் பணிந்தால்
பெரிதும் நீந்துவதரிது

என்று சுந்தரரும் தூய உளம் தேவை என்பதை விளக்கியுள்ளார்கள்.

'உள்ளதே அமையு மென்றிருந்தேன்'

என்று சுந்தரரும்

'வைத்த பொருள் நமக்கு ஆம் என்று சொல்லி மனத்தடைத்துச்
சித்தம் ஒருக்கிச் சிவாய நமவென்றிரு'

என்று அப்பரும்

'போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து'

என்ற உண்மையை விளக்கியுள்ளார்கள்.

'பண்ணிய சாத்திரப் பேய்கன்'

என்றும்

'சாத்திரம் பலபேசும் சழக்கர்காள்
கோத்திரமும் குலமும் கொண்டு என்செய்வீர்'

என்றும் அப்பரும்

'மறையிடைத் துணிந்தவர் மனையிடைஇருப்ப
வஞ்சனை செய்பவர் பொய்கையு மாயத்
துறையுறக் குளித்துளதாக வைத்துய்த்த
உண்மையெனும் தகவின்மையை ஓரேன்'

என்று சுந்தரரும், சாதி, சாத்திரம், பொய் வழிபாடு முதலியவற்றைக் கண்டிக்கிறார்கள். இப்படி இன்னும் எத்தனையோ வகையில் தீதொழிந்து நன்மை செய்யவேண்டும் என்ற உண்மையை விளக்குகிறார்கள். எனவே சைவ சமயத்தின் முடிந்த முடிபு, வெறும் பூசையிலும், ஆடம்பர ஆரவாரத்திலும் வேடிக்கை விழாவிலும் உண்மை நலம் காண முடியாது என்பதும், உள்ளம் திறந்து மற்றவர்க்கு மனத்தாலும் தீங்கிழைக்காது வாழ்தலே என்பதும், அந்த வாழ்வில் எந்த வேறுபாடும் தலைகாட்டாது என்பதும் ஆகும். ஒரு அடியார் மிக உயர்ந்த நிலையினை எண்ணி ஆண்டவனுக்கு அபிடேகம் விழா முதலியன கூடச் செய்யவேண்டா. கோயிலுக்கும் கூடப் போகவேண்டா. தம்மை ஒத்த மக்களுக்கு உதவி செய்யுங்கள். தீ தொழிய நன்மை புரியுங்கள் என்கிறார்.

‘நடமாடும் கோயில் நம்பர்க் கொன்றீயில்
படமாடும் கோயில் பரமர்க் கங்காகும்’

என்ற சிறந்த மொழி எண்ணத்தக்க தொன்றாகும். தாயுமான அடிகளார் ‘சைவ சமயமே சமயம்’ என்று வாயாரப்பாடிய பெரியார், உன் சமயத்தின் முடிந்த முடிபாக நீ நினைப்பது யாது என்றுகேட்ட கேள்விக்கு விடையளிக்கின்றார் எல்லாரும் இன்பில் வாழ்வதுவே என் உள்ளம் விரும்புவது, அதுவே சமயமுடிபுஎன்று.

‘எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே’

என்பது அவர் மொழி.

இனி, வைணவத்தே இந்தத் ‘தீதொழிய நன்மைசெயும்’ கொள்கைக்கு இடமுண்டா என்று காணலாம். எச்சமயத்தோர் சொல்லும் அதுவாதலினாலே. உண்மை வைணவர் யார் என்ற கேள்விக்கு மக்களினத்தே வேறுபாடு காட்டாத வகையிலே எல்லா உயிர்களையும் ஒத்து நோக்கி வாழ்க்கை நடத்துபவனே உண்மை வைணவன் என்ற விடை பெறலாம் வைணவர் வாக்கி லிருந்து. ஆண்டாள் வைணவத்தே தலை சிறந்த செல்வியார். தாம் ஆண்டவனை மணாளனாக அடைந்து இன்புறவேண்டும் என்று விரும்பி அவனையே நினைந்து உருகி, நைந்து, பாட்டிசைத்துப் பரவச முற்றவர். மார்கழித் திருப்பாவை அவர்தம் காதல் விருப்பை வெளியிடு முகத்தான் வந்ததேயாகும். அவர் அரங்கனை அடைந் தார் அந்தப் பாவை நோன்பாலே என்று கூறுவார். அத்தகைய இன்பம் பெற்ற ஆண்டாள் பாவை பாடும்போது, தன் தனி இன்பம் தலை சிறப்பதற்குக் காரணமாக அமையவேண்டுவது உலகின்பம் என்று கண்டார். நாடு செழிக்கவேண்டும் என்று உணர்ந்தார். தீங்கு அகல வேண்டும் என்று செப்பினார்.

‘தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து
ஓங்குபெருஞ் செந்நெல் ஊடு கயல்உகள’

என்ற அவர்தம் அடிகள் நாட்டை வாழ்விப்பன.

குலசேகரர் மற்றொரு வைணவ அடியார். நெக்கு நெக்குப் பாடும் நெஞ்சுடையவர். அவர் தம்முடன் கலந்து வாழும் நல்லவர் யார் என்று ஆராய்கிறார்

‘தீதில் நன்னெறி நிற்க, அல்லாது செய்
நீதியாரோடும் கூடுவ தில்லை யான்’

என்று தீதொழிய நன்மை செய்யும் நல்லவர் உறவே நாடத்தக்கது என்று திட்டமிட்டுக் கூறுகின்றார்கள். மற்றும்

வன்பெரு வானகம்உய்ய அமரர் உய்ய
மண் உய்ய மண்ணுலகில் மனிசர் உய்ய
துன்பமிடு துயரகல அயர்வொன் றில்லாச்
சுகம்வளர அகமகிழும் தொண்டர் வாழ
அன்பொடுதென் திசைநோக்கிப் பள்ளி கொள்ளும்
அணியரங்கன் திருமுன்றத்து அடியார் தங்கள்
இன்பமிகு பெருங்குழுவு கண்டு யானும்
இசைந்துடனே என்றுகொலோ இருக்கும் நாளே

என்ற அவர்தம் அரும்பாடல் ஆண்டவன் எதிரிலே அடியவர் கூட்டத்தே நின்று, கலந்து வாழ்கின்ற வாழ்க்கை, எல்லாம் உலகும் துன்பத்திலிருந்து நீங்க - இன்பத்துறையில் இயங்குதற்கே என்று விளக்கிக் காட்டுகின்றது. இறைவன் முன் அடியவர் நிற்கும் போது யான் எனது என்ற செருக்கன்று, மண்ணுலகம் வாழ - மனிதர் வாழ - துன்பம் நீங்க - அயர்வு அகல - நன்மை பெருக - உளம் மகிழ உலகம் அந்த உயர்ந்த இன்பத்திலே வாழவேண்டும் என்ற முடிபினை வைணவம் நன்கு விளக்கிக் காட்டுகிறது.

இனி, சைன சமயம் தீதொழிய நன்மை செய்யும் திறத்தில் எவ்வாறு உதவுகின்றது என்பதையும் காணல் நலம். எவ்விடத்தே மற்றவர்க்கு இன்பம் செய்கின்ற உணர்ச்சி தோன்றும் - ஊறு செய்கின்ற எண்ணம் மாயும் என்று காண முயல்கின்றார் திருத்தக்க தேவர். கண்டார். பிற உயிரைத் தன்னுயிராய்ப் பேணி வளர்க்கும் பெரியோர்கள் உலகிலே உயர்ந்தவர்கள் எனக் காட்டுகின்றார்.

> 'தன் உயிர்தான் பரிந்தோம்பு மாறுபோல்
> மன்னுயிர் வைகலும் ஓம்பி வாழுமேல்
> இன்னுயிர்க் கிறைவனாய் இன்ப மூர்த்தியாய்
> பொன்னுயிராய்ப் பிறந்து உயர்ந்து போகுமே' (சீவ 310)

என்பது சீவக சிந்தாமணி. இந்தப் பாட்டில் ஆசிரியர் மற்றவர்க்கு உதவிசெய்து அவர்களை ஓம்பிப் பாதுகாத்து அவர்க்குத் தீதொழிய நன்மை செய்வார்களானால் அவர்களே இறைவனெனப் போற்றத் தக்கவர்கள் என்ற உண்மையை நன்கு விளக்குகின்றார் அன்றோ! அந்த, பிறர் வாழத்தான் வாழும் உயர் நெறிக்கு உரிய விளக்கமென மற்றொரு பாட்டு தருகின்றார் ஆசிரியர். ஈத்துவக்கும் இன்பம் அறியின் அந்த உண்மை செயலில் வரும் என்கின்றார்.

> 'குடித்துண்ணும் கூற்றம் குடில்பிரியா முன்னே
> கொடுத்துண்மின் கண்டீர் குணம் புரிமின் கண்டீர்'

என்பது அவர் வாக்கு. மற்வவர்களுக்குக் கொடுத்துத் தாமும் உண்டு அதனால் உலகம் வாழும் வழிசெய்து நற்குணத்தே வாழ்வு நடத்துங்கள் என்கிறார். இன்னும்

> 'ஒளிறுதேர் ஞானம் பாய்மா
> இன்னுயிர் ஓம்பல் ஓடைக்
> களிறுநற் சிந்தை காலாள்
> கருணையாம் கவசம் சீலம்
> வெளிறுஇல் வாள் விளங்கும் செம்பொன்
> வட்டமெய்ப் பொருள்களாக
> பிறிறு செய் கருமத்தெவ்வர்
> பெருமதில் மற்றனே'

என்ற அவரது சமண சமய உண்மையை உருவக முகத்தால் விளக்கும் பாட்டும் நமது கருத்துக்கு அரண் செய்வதாகும். விரிப்பில் பெருகும்.

மணிமேகலை சிறந்த பௌத்த நூல். புத்தபிரான் கொள்கைகளைத் தெள்ளத் தெளியக் காட்டும் சிறந்த நூல். புத்தர் உலகம் வாழவேண்டும் என்று வழிகாண முற்பட்டவர். அதனால் தம் அரச வாழ்வையும் துறந்து, மனைவி மக்களையும் விட்டுக் காடு நடந்து, கடுந்தவம் புரிந்து தமக்கென வாழாது - உலகம் வாழ வழி என்ன என்று ஆராய்ந்தவர். அவருடைய அன்புளத்தே தோன்றிய அருங் கருத்துக்கள் சாத்தனார் வாக்கினால் நன்கு விளக்கப்படுகின்றன. உயிர் கொடுத்து மக்களை வாழ்விக்கின்றவர் யார் என்று கூறுகின்றார். பட்டினியாய்க் கிடக்கப் 'பாரீர் வாரீர்' என்று ஒன்றிரண்டு நாட்களுக்குக் கோயிலுக்கு அழைத்துச் செல்வதென்று அவர் கூறவில்லை. நாடு நலிய உப்பரிகை - உல்லாச வாழ்வு வேண்டும் என்று அவர் கூறவில்லை.

'மண்டினி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'

என்று கூறுகிறார் அவர். தீதொழிந்து நன்மை செய்யும் நிலையில் நிற்பது இது. உலகில் மக்கள் வாடா வகையில் உணவளிக்க வேண்டும் என்கிறார். அவர்களே உண்மையில் உயிரளித்த இறைவனுக்கு ஒப்பானவர்கள். தோன்றிய உயிர்கள் உணவின்மையால் மடிகின்றன என்று கூறிக்கொண்டே, அத்தகைய நாகரிக உலகில் நாம் வாழ்கின்றோம் என்று வீரம் பேசும் வாழ்க்கையை அவர் விரும்பவில்லை. பட்டினியால் இறந்தார் என்று கேட்டும் பாராளும் விருப்பம் குன்றாது வாழும் கொடிய வாழ்க்கையை அவர் வற்புறுத்தவில்லை. 'தனி ஒருவனுக்கு உணவிலை எனில் சகத்தினை அழித்திடுவோம்' என்று பாரதி பதைத்துக்கூறிய கொள்கைக்கு யுத்த முறைக்கு ஏற்ற, சாந்த நிலையில் உயிர் காக்க உணவளிக்க என்று உறுதிபடுத்திக் கூறுகின்றார். ஆம் அது தீதொழிந்த நன்மை செய்யும் நிலையிலேதான் நிற்கும்.

இந்த மற்றவர்க்கு உதவி செய்து உணவளிக்கும் நிலை தேவலோக வாழ்வினும் சிறந்தது என்கிறார் பௌத்தராகிய சாத்தனார். ஆபுத்திரன் வந்தார்க்கு வரையாது சோறிட்டு வருந்திவந்த அவர் முகம் மகிழ்ச்சியால் மலர்வதைக் காண்கின்றான். அந்த இன்பம் - ஈத்துவக்கும் இன்பம் - அவன் உளத்தை மகிழ்விக்கின்றது. தேவேந்திரன் நேரில் வந்து, 'வருக அமரர் வாழ்க்கை உனக்கு அளிக்கின்றோம்' என்று அழைத்தாலும்கூட 'அட பயித்தியமே, உங்கள் நாட்டிலே இப்படிப் பசி என்று வருவாருக்குச் சோறிட்டு அவர் முகம் மலர - என் மனம் மகிழும் செயல் உண்டா? உன் நாடு தேவை இல்லை போ' எனத் திருப்புகின்றான் ஆபுத்திரன்.

'வருந்தி வந்தோர் அரும்பசி களைந்து
திருந்துமுகம் காட்டும் என்தெய் வக்கடிஞை'

என்று ஏற்ற உணவளிக்கும் தன் அட்சய பாத்திரத்தைக் கண்டு கண்டு - சொல்லிச் சொல்லி பெருமை அடைகின்றான்.

தீதொழிய வேண்டும் என்று பௌத்தம் கட்டளை இடுகின்றது. அந்தத் தீமைதான் யாது என்ற கேள்வியும் எழுமன்றே? அவற்றை இன்னின்ன என்று - குற்றத்தின்பாற் படுத்திச் சாத்தனூர் வகையாகக் காட்டியுள்ளார். குற்றங்கள் - உளத்தால் - வாக்கால் - செயலால் வருவன என்பது உலகறிந்தது. இம்மூன்று வழியாலுமே மனிதன் தன் வாழ்வை விரும்பி மற்ற உயிர்களுக்கு ஊறு செய்கின்றான் என்று அறிகின்றோம். அக்குற்றங்கள் யாவை? இதோ சாத்தனூர் மொழி :—

'கொலையே களவே காமத் தீவிழை
உலையா உடம்பில் தோன்றுவ மூன்றும்
பொய்யே குறளை கடுஞ்சொல் பயனில்
சொல்லெனச் சொல்லில் தோன்றுவ நான்கும்
வெஃகல் வெகுளல் பொல்லாக் காட்சிஎன்று
உள்ளம் தன்னில் உதிப்பன மூன்றும்
பத்துய் குற்றம்'

என்பன. இதற்கு விளக்கம் வேறு தேவை இல்லை. இக்குற்றங்களாகிய தீமைகளை நீக்கி - உயிர் வாழும் நன்மைகளைச் செய்ய வேண்டும் என்பதுதான் பௌத்தத்தின் முடிந்த முடிபு.

இனி, இயேசு பெருமான் இவ்வுண்மையை எவ்வாறு உலகுக்கு எடுத்துக் காட்டினார் என்பதும் காணத்தக்கது. 'துயரப் படுகிறவர் பாக்கியவான்கள்' என்றார். துன்பம் உறுகின்ற மக்களை நோக்கி. ஆனால் அவர்தம் துன்பத்துக்குக் காரணமாகிய மற்றவர்களை நோக்கி அவர் கூறும் அறிவுரைகள் பல. 'உன்னைப்போல் பிறரை நேசி' என்ற உயர்ந்த நோக்கிலே கட்டப்பட்டதே கிறிஸ்தவ சமயம். 'பல்லுக்குப் பல் கண்ணுக்குக் கண்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. நான் சொல்லுகிறேன் உன் வலது கன்னத்தில் அடித்தால் இடது கன்னத்தைத் திருப்பிக் காட்டு' என்று கூறுவதில், வருகின்ற துன்பத்தைத் தாம் ஏற்கும் நிலையிலும் கூட மற்றவர்க்குத் துன்பிழைத்தலாகாது என்ற உண்மையன்றே விளங்குகின்றது. உன் அயலான் யார் என்ற உவமைக் கதையில் உண்மையில் உனக்கு உதவி செய்பவன் எவனோ அவனே உன் அண்டை வீட்டுக்காரன் உன்னோடு மனிதனாய் - மனிதப் பண்போடு வாழத் தக்கவன் என்று விளக்குகின்றார. மக்களைக் கொள்ளை அடித்துப் பெரும் பொருள் சம்பாதித்து ஆண்டவன் பேரால் - ஆரவார விழாக்கள் செய்யும் கொடியனைக் காட்டிலும் உண்மை வாழ்வு வாழ்ந்து - தீதொழிய நன்மை செய்யும் திறமறிந்து நிற்கும் ஏழைவழங்கும் காசுக்காணிக்கையே இறைவனுக்கு ஏற்றது என்கிறார். கிறித்தவ சமயத்தை விளக்க வருகின்ற 'ஆபூபன் ஆடம்' என்ற கதை,

'நடமாடும் கோயில் நம்பர்க் கொன்றீயில்
படமாடும் கோயில் பரமர்க் கங்காகும்'

என்ற உண்மையை விளக்கவில்லையா? எனவே கிறிஸ்து சமயமும் தீ தொழிந்து நன்மை செய்யும் உண்மையை உலகுக்குக் காட்ட

எழுந்த சமயமாகும். கிறிஸ்து இவ்வுண்மையை வாக்காலல்ல - செயலால் காட்டினுர். கண்ட அறிஞர் - அன்பர் பலர் அதை வாய்விட்டுக் கூறுகின்றனர். ஒன்றிரண்டு கண்டு மேலே செல்லலாம்.

'வன்கணன் படிறன் பொல்லா வஞ்சனென் றிகழ்ந் திடாதென்
புன்கணுக் கிரங்கி ஓர் பூம்பொழிலிடைப் புனித மூர்த்தி
நின்கணீர் சொரியச் செந்நீர் நிலத்துக வியர்த்தல் கண்டும்
என்கணீர் சொரியக் காணேன் என்செய்வான் தோன்றினேனே'

என்பதும்,

பெருந்தகை குருதி சிந்தி
வதைபடு திருக்கோ லத்தை
மனக் கணுல் தரிசித் தேத்தி
இதய நெருக்குருகு கில்லேன்
என் செய்வான் தோன்றினேனே.

என்பதும்,

உலகத்தார் உய்வதற்காகச் சிலுவை ஏறி
உயிர்த்தெழுந்து உற்றதொரு மூன்ரும் நாளில்
பலகற்ருர் எந்நாளும் போற்றும் மாறு
பாரிடத்து உதித்தெழுந்த பரமன் மைந்தா

என்பதும், இயேசு உலகின் பொருட்டு - மக்களுக்காக, தீதொழித்து நன்மை தேடுவதற்காகப் பிறந்து இருந்து வாழ்ந்து துன்பத்தை ஏற்று வென்றவர் என்பதை விளக்குகின்றன வன்ருே !

இனி, முகமதிய சமயம் இச்செம்மைக் கருத்தை எவ்வாறு வலியுறுத்துகின்றது என்பதையும் காணல் பொருந்தும். இயேசுவின் வாழ்க்கையைப் போன்று மகமதுவின் வாழ்வும் மக்கள் பொருட்டு வாடிய வாழ்வாகவே முடிகிறது. உலகம் உய்ய வேண்டும் என்ற உண்மைக்கு உழைத்த மகமது - தீதொழிய நன்மை செய்ய வேண்டும் என்று வற்புறுத்திய மகமது நாடு விட்டு நடந்தார் - ஊர் விட்டு ஊர் ஓடினுர் - தமக்காக அல்ல - உலகம் உய்வதற்காக. அதுவே மகமது வாழ்வை - இவ்வுண்மை உணர்வை வலியுறுத்துவதாக அமைந்தது.

மற்றும் மகமதிய வேதமாகிய கோரான் இந்த உண்மையைத் திட்டமாக வற்புறுத்துகிறது. கடவுளை வேண்டும் ஒரு மகமதியன் தான் மட்டும் வாழ வேண்டும் என்று வேண்டவில்லை. உலகம் வாழ வேண்டும் - உற்ருரும் மற்ருரும் வாழ வேண்டும் - அவர்கள் இடையில் தானும் வாழவேண்டும் என்று அவன் வேண்டுகிருன்.

Oh God, for give our living and dead and those who are present, and those who are absent and our children and our full grown persons our men and our women ' (Faith

Islam - 209) என்பது அவர் முறையீடு. மக்களுக்கு உணவிடுவது கடவுளுக்கு உணவிடுவதாகும் என்கிறார் அவர்.

Give food unto the poor and the orphen and the blind man, for his sake, saying we feed you for God's sake only. We desire no recompense from you, nor any thanks verily we dread, from our Lord - a dismal and calamitous day (Kuran - ch. 76.)

இந்த அரிய கருத்தை எண்ணின் உண்மை புலனாகும். கைமாறு கருதாது மக்களுக்கு ஆற்றும் நலன்களே - செயல்களே உண்மையில் ஆண்டவனுக்கு உகந்ததென்றும், அவர்களுக்கே ஆண்டவன் இன்ப வாழ்நாளையும் எழிலார் நலனையும் அளிப்பான் என்பதும், அம்முறை கொண்டு வாழ்பவனே மகமதியன் என்பதும் அந்தத் தீதொழிந்த நன்மையை விளக்குவதே முகமதிய மதம் என்பதும் தேற்றம்.

இந்த உயர்ந்த குறிக்கோளை உடைய சமயங்கள் இன்று நாட்டில் இல்லையா? இருந்தால் இப்படி ஊர்தோறும், நாடு தோறும் கொலையும் போரும் நடப்பானேன்? என்ற கேள்விகள் மக்கள் மனதில் இன்று உண்டாகலாம். எந்த மதம் அன்பால் அனைவரையும் ஒன்றுக்கும் என்று உபதேசம் செய்ததோ, அதே மதத்தின் பேரால் நாட்டிலே லட்சக் கணக்கில் கொலை. இப்படி ஒன்றுக் கொன்று மாறுபட்டுப் போராற்றுவது இறைவனுக்கு ஏற்றதா?

சமயங்கள் இன்று நாட்டில் உள்ளன. பெயரளவில், கொள்கை அளவிலல்ல. சமயக் கொள்கைகளெல்லாம் இன்று ஏட்டிலேயே உள்ளன. நாட்டில் அல்ல. உண்மையாகச் சமயத்தைப் பின்பற்றுபவர்கள் நாட்டில் இல்லை. ஆங்கிலப் பேரறிஞர் பெர்னாட்ஷா சொன்னார்: 'உலகில் பிறந்து வாழ்ந்த கிறிஸ்தவன் ஒருவனே. அவன்தான் சிலுவையில் மாண்ட ஏசு' என்று. அந்த உண்மை எல்லாருக்கும் பொருந்தும். எல்லாச் சமயங்களுக்கும் பொருந்தும். இன்று சின்னங்களும், சிறப்புக்களும், சடங்குகளும் சமயமாகிவிட்டனவேயன்றிக் கொள்கைகள் சமயத்தில் இல்லா வகை ஏற்பட்டுவிட்டது.

இன்று சைவன் அவன் கொள்கையைக் காற்றில் பறக்க விட்டான். நாடு வாழத் தான்வாழ வேண்டும் என்ற சைவ சமயம் நாடுவருந்தத் தான் மட்டும் வாழவேண்டும் என்ற மக்களால் ஆளப்படுகிறது. நாட்டில் சைவம் மெய்ச்சமயமாக விளங்கிய காலம் இருந்தது. 'எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே' என்று தாயுமானவர் காட்டிய சைவ சமயம் இன்று எங்கே? எங்கே? எங்கே? இன்று சைவர்கள் கோடிக் கணக்கில் உள்ளனர். ஆனால் அவர்தம் உள்ளங்கள் அன்பு வழியை அற மறந்தன. நடமாடும் கோயில்கள் நடுத்

தெருவில் விடப்பட்டன. நூற்றுக்கு நூறு - பழுத்த சுய நலத்தில் வாழ்கிறன்றது இன்றைய சைவம். பிறர் எவ்வளவு வருந்தினாலும் பரவாயில்லை. நாம் எந்தக் கொடுமை வேண்டுமானாலும் செய்து பொருள் சம்பாதிக்கலாம். அதற்குக் கழுவாய் வேண்டுமானால் ஆண்டவனுக்கு ஒரு அபிஷேகம் - அர்ச்சனை - ததியாராதனை. அவ்வளவுதான் இன்றைய சைவன் வாழ்க்கை. வாணவேடிக்கைக்கும், பொன், வெள்ளி வாகனங்களுக்கும் பொருளை வாரிவிடும் சைவன் சைவத்தின் அடிப்படைக் கொள்கையை மறந்தான். 'எவ்வுயிரும் தம் உயிர் போல் எண்ணி, வாழும் வாழ்க்கை அவனுக்கு வெகு தூரத்தில் சென்று விட்டது. வேண்டுமானால் 'காயமே இது பொய்யடா, காற்றடைந்த பையடா' என்று வேதாந்தம் பேசும் அளவுக்கு அவன் முன்னேறி விட்டான் என்று சொல்லலாம். அவ்வாறு பேசும் சைவரும், மடத்துறவியரும் தம் தம் வாழ்வில் வேறு விதமாக நடப்பார்கள். உலகம் அநித்தியம் என்று எழுதுவார்கள்; பேசுவார்கள். ஆனால் அவர்கள் கருப்பு மார்க்கெட் வழியாகவோ, வேறு விதத்தாலோ பொருளைச் சம்பாதிப்பார்கள். பங்களா கட்டிக் கொள்வார்கள் பட்டும் பொன்னும் அணிந்து பகட்டாக மேடை மேல் பேச வருவார்கள். உலகம் மாயை - பெண் பேய் என்று பிரசாரம் செய்வார்கள். ஆனால் அவர்கள் வீட்டில் அவருக்குக் குறைந்தது ஆறு குழைந்தைகளாவது இருக்கும். இப்படிப் பேச்சொன்று பேசிச் செயலொன்று கொண்டு வாழும் சைவர்கள் இருப்பதால் தான் சைவம் நலிகின்றது. அதைப் போக்குவது உண்மைச் சைவர் தம் கடன்.

இடைக் காலத்தில் நாட்டிலே தல புராணங்கள் தோன்றின. அக்காலத்தே சில சமயத் தலைவர் என்று நின்றவர்கள் பாவங்கள் செய்வதற்கு வழிகோலிவிட்டார்கள். பாவமே செய்யாதே, மற்றவனை வருத்தாதே. நீ உலகுக்குவாழ். 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்று எண்ணத்தோன்றிய சமயத்தே மாசு விளைத்தனர். 'நீ எவ்வளவு கொடுமை வேண்டுமானாலும் அஞ்சாது செய், கொல் - திருடு - மற்றவரைக் கெடு அனைத்தையும் செய்து விட்ட பிறகு அதோ அந்தத் தீர்த்தத்தில் தலைமுழுகினாயால் - அந்தத் தலத்தைத் தரிசித்தாயானால் உன் பாவம் எல்லாம் நீங்கும். நீ பரிசுத்த ஆன்மா ஆவாய் - உனக்கு முத்தி நிச்சயம்' என்று எழுதி வைத்து விட்டார்கள். இவைகள் தான் தல புராணங்கள் ஆயின. இவற்றைச் சமயத்திடை வளர்க்க அரும்பாடு பட்டார்கள். இத்தகைய செயல்தான் இன்று நாட்டில் அல்லலலை உண்டாக்கிச் சமயத்தைப் பாழ்படுத்துகின்றது. அவர்களுக்கு ஒவ்வொரு ஊரின் மேல் உண்டான தணியாக் காதல்வழி எழுந்த நூல்கள் நாட்டில் நற்பணி ஆற்றவில்லை என்று சொல்லலாம். மற்றவருக்குத் தீங்கு இழைக்காதே-பிறர்க்காக நீவாழ் என்ற உயர்ந்த அடிப்படையிலே வாழ்ந்த சமயம், எத்தனை கொடுமை வேண்டுமானாலும் அஞ்சாது செய்யலாம். முடிவில் தீர்த்த முழுக்கு அவற்றைத் தீர்த்து விடும் என்ற கொடிய பாதாளத்திற்குத் தள்ளப்பட்டது. இந்நிலையில்

சைவர்கள் தங்கள் சமயத்தைப்பற்றிப் பெருமை பேசிக் கொள்ளு கின்றனர். இன்று நான் கேட்கின்றேன். துறவை வற்புறுத்திப் பேசுபவருள் எத்தனை பேர் உண்மையில் உளத்துறவியாகி—காய் கனி கந்த மூலாதி அருந்திக் கண்மூடி மௌனியாகிக் காலம் கழிக்கின்றனர். அப்படிச் செயலில் காட்டாது, பிறர்க்கு மட்டும் உபதேசம் செய்யும் இந்த நிலை நாட்டில் இருப்பதால்தான் கொலை முதலியன உண்டாகின்றன. தூயதுறவு என்று பாராட்டிக் கொண்டு பாலும்சோறும் உண்டு பஞ்சணையில் பாவையரோடு துயிலும் மக்கள் சமயத்துக்கு நன்மை செய்ய முடியாது. துறவு வேண்டுபவர்கள் வேண்டுமானால் காட்டுக்குச்சென்று கந்தமூலாதி உண்டு காலம் கழிக்கட்டும். மற்றவர்கள் நாட்டிடை இருந்து நாடுவாழ—நாம்வாழ—சைவம் வாழ—தமிழ் வாழப் பாடுபடட்டும். அந்த நிலை என்று வருமோ அன்றுதான் உண்மையில் சைவம் வாழும்; அதுவரை சைவம் தன் சவக் குழியைத் தானே தேடிக்கொண்டதாகவே முடியும். சமயங்களும் அவ்வாறே.

அடிப்படையான அன்பு மதம் வேரற்று வீழ்ந்து விட்டது. சைவமரத்தைச் அச்சமயத்தவனே வெந்நீர்விட்டு வேரறுத்தான். நன்மை செய்வதே சமயத்தின் அடிப்படை என்பதை மறந்தான். ஆகவே நாடு சுடுகாடாக மாறுகிறது. இந்த நிலை ஒருசமயத்தில் மாத்திரமல்ல—எல்லாச் சமயங்களிலும் ஏற்பட்டு இருக்கிறது, வைணவன் — பௌத்தன் — சைவன் — கிறிஸ்தவன் —மகமதியன் அனைவரும் தம் தம் அன்புக் கொள்கையை மறந்தனர். வம்புக் கொள்கையை வளர்த்தனர். அந்த வளர்ச்சிதான் இன்று நாட்டில் கொலை—உலகில்போர் என வளர்ந்து விட்டது.

வைணவர்களுக்குள்ளேயே வட கலை தென்கலை வேறுபாடு. இவர்கள் பிணக்கை நீக்கச் சமயம் இன்னதென்றறியாத ஆங்கிலேயனது நியாயத்தீர்ப்பு. இப்படி ஒரே சமயத்தில் தம் குறிகளுக்காகப் போரிடும் அறிவற்ற கூட்டம் இருக்குமானால் அச்சமயம் வாழினும் வீழினும் என்? பௌத்த சமணங்களும் அவ்வாறே தம் நிலையிலிருந்து வழுக்கி விழுந்தன. எந்தத் துன்பத்தைக்கண்டு புத்தர் காடு நடந்தாரோ, எந்த வருத்தம் மக்களுக்கு வராதிருக்க வழி யுண்டோ என்று வருந்தித் தீர்த்தங்கரர்கள் அரும்பாடுபட்டார்களோ, அத்துன்பத்தை இன்று மக்களுக்கு வலிய வழங்குகிறார்கள் சைனரும், பௌத்தரும். ஒரு பூசனிக்காயை அறுத்தால் பாவம் என்பார்கள். ஆனால் நடமாடும் தெய்வமாம் மக்களை 5-10 என்று பெரும் வட்டிவாங்கும் முதலாளிகளாக—வியாபாரத்தில் ஒன்றுக்குப் பத்தாக விற்கும் வியாபாரிகளாக இருந்துவதைக்கிறார்கள். இந்த நிலையில் அடிப்படையான அன்புக் கொள்கை காற்றில் விடப்படுகிறது. இதைப் போன்று கிறிஸ்துவமதத்திலும், மகமதிய மதத்திலும் பலர் அன்பு வாழ்க்கையை மறந்தார்கள். ஆதலால் தான் இடைக்காலத்தே சமயப் போர்கள் (Wars of Crusade) பல நடந்தன. இன்றும் நோவாகாளியும், பிகாரும் நடப்பதைக் காண்கின்றோம். இவற்றை எல்லாம் நீக்கவழி இல்லையா! உண்டு! அறிந்து

ஆவன ஆற்றமுற்படவேண்டும். ஒவ்வொரு சமயமும் தனது அடிப் படைத் தத்துவத்தை ஆராய வேண்டும். உலகம் ஒன்று என்றும், சமயங்கள் பலவாயினும் அவற்றின் முடிபெல்லாம் ஒன்றே என்றும் அதுவே அன்புநெறி என்றும் அவ் வன்பு நெறியில்வாழ வகையற்ற வர்களெல்லாம் சமயத்துரோகிகள் என்றும் உணர வேண்டும். உணர்ந்த அவ்வுணர்ச்சி அனைவரையும் ஒன்றுபடுத்தும். யார் உன் அயலவன் என்று கேட்கச் செய்யாது அச்சமயம். யார் உன் உற வினர் என்று எண்ணச் செய்யாது அச்சமயம். யார் உனது மதத் தான் என்று மதிக்கச் செய்யாது அச்சமயம். யார் உனக்கு உதவி செய்கின்றார், என்று எண்ணச் செய்யாது அச்சமயம். உலகுக்கு என்ன உதவி செய்யவேண்டும் என்று அறிந்து, அவரொடு கலந்து, உலகை உய்விக்கச் சொல்லும் அச்சமயம். நாயன்மார்கள், ஆழ்வார்கள், தீர்க்கதரிசிகள், தீர்த்தங்கரர்கள் இந்த நெறியிலே வாழ்ந்தார்கள். அப்படி அவர்கள் வாழ்ந்ததனால் தான் அன்று அவரவர் சமயங்கள் வளர்ந்தன.

இன்று நாட்டிலே சமயமாநாடுகள் பல நடைபெறுகின்றன. அவை எல்லாம் தம் தம் சமய அடிப்படையை நன்கு எண்ணிப் பார்க்க வேண்டும். சமயத்தால் உலகம் வாழ வேண்டும் என்ற எண்ணம் முகிழ்க்க வேண்டும். 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற கொள்கை ஏட்டிலல்லாது வீட்டில் - நாட்டில் விளக்கமுற வேண்டும். 'உன்னைப்போல் பிறரை நேசி' என்ற அன்பு நெறி வாழ்க்கையில் விளக்கபட வேண்டும். வார்த்தைகள் தந்த விளக்கம் போதும் என்ற நிலை ஏற்படவேண்டும். உலகம் ஒரு பூஞ்சோலை. இதில் தோன்றிய உயிரினங்கள் அனைவரும் உடன் பிறந்தவர்கள். அவர்களுக்குள் சாதியால் வேறுபாடு, சமயத்தால் வேறுபாடு, நீதியால் வேறுபாடு, நிறத்தால் வேறுபாடு என்று பல வேறுபாடு களைக் கற்பித்துக் கொண்டு ஒருவரை ஒருவரும் ஒரு நாட்டை மற் றொரு நாடும் வருத்த-தாழ்த்தப் பார்த்துக் கொண்டிருப்பது மாற வேண்டும். 'எல்லோரும் ஒரு குலம், எல்லோரும் ஓர் நிறை' என்ற கொள்கை செயலில் வரவேண்டும். 'காக்கைக் குருவி எங்கள் சாதி நீள்கடலும் மலையும் எங்கள் கூட்டம்' என்று பாடினான் பாரதி, உயிரினங்களை ஒத்து நோக்கி. அந்த அளவில் தான் போகிறது சமய உண்மை. மெய்ச் சமயிகள் அந்த அளவிற்குப் போக மன மற்றவர்களானாலும் கூட மக்கள் எல்லாம் ஓரினம் என்ற உணர்ச் சியுள்ளவர்களாக எல்லாரும் இன்புற்றிருக்க மனம் வைத்து, பேராசையை ஓரளவு குறைத்து, எல்லோரும் மக்கள், அனைவரும் வாழவேண்டும் என்று கருதி, ஒன்று சேர்ந்து உழைக்க வேண்டும். சமயங்களில் உள்ள சிறு சிறு மாறுபாடுகள் - நாட்டு நிலைக்கேற்ற சிறு சிறு வேறுபாடுகள். அவற்றையெல்லாம் எண்ணாது எல்லோ ரும் மக்கள் தாம். அவரவர்க்கும் உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும் தேடித்தருதல் நம் கடன் என்ற உணர்ச்சி அரும்பல் வேண்டும். இந்த அடிப்படைத் தத்துவம் உணரப்படுமாயின் - தீது ஒழிய நன்மை செய்ய வேண்டிய செயல்

சிறக்குமாயின் அன்று உலகில் போர் இருக்காது. நாட்டின்மேல் நாடு பொருமை கொள்ளாது. ஒருவன் மற்றவனைக் கண்டு கோபம் கொள்ளமாட்டான். அனைவரும் ஒரு தாய் வயிற்றுச் சேய்கள் போன்று அன்பால் பிணிக்கப்பட்டவராவார்கள். அந்த அன்பு உலகிலே - இன்ப நிலையிலே உலகிலேயே வீட்டைக் காண்பார்கள் மக்கள். அன்று நாடு நாடாகும். நாம் மக்களாவோம். அந்நாள் விரைந்து வருக! விளக்க முறுக!

சமய வாழ்க்கை

உலகம் தோன்றி அளவில்லாத ஆண்டுகள் ஆகின்றன. உயிரினம் இவ்வுலகில் நின்று நிலவாத காலம் ஒன்று கழிந்தது. உயிர் தோற்றம் பெற்ற பிறகு, அது வளரப் பல ஆண்டுகள் கழிந்திருக்கவேண்டும். முதன் முதல் உயிர் தோன்றிய காலத்திருந்த உலகம் இன்றைய உலகத்தினும் முற்றிலும் மாறு பட்டதாக இருந்திருத்தல் வேண்டும். சிறுகச் சிறுக உயிர் நிலை வளர்ந்தது. ஓரறிவுயிர் தொடங்கி, வளர வளரப் பிற அறிவுகளும் பெற்று, கடைசியில் ஆறறிவுயிருடைய மனிதன் வந்திருக்கிருன். இதற்கிடையில் எத்தனையோ கணக்கிலடங்காக் காலங்கள் !

மனிதன் தோன்றிய காலத்தே இன்றைய நாகரிகமும் வாழ்க்கையும் அவனிடம் தோன்றவில்லை என்பது உறுதி. உயிர், அறிவு வளர்ச்சியில் சிறுகச் சிறுக வளர்ந்தது போன்றே, மனித வளர்ச்சியும் வளம் பெற்றிருக்கவேண்டும். கண்டதைத் தின்று காட்டுக்கும் நாட்டுக்கும் வேறுபாடு காணுவகையில், நன்மை தீமையின் நலமறியா வகையில் மனிதன் பல ஆண்டுகள் கழித்திருக்கவேண்டும். சுற்றுச் சார்புகளும், இயற்கையில் உள்ள அறிவும் திருந்தும் நிலை ஏற்பட்ட காலத்து மனிதன் தன்னைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினுன். அந்தச் சிந்தனையின் தொடக்க நாளே மனிதனை மனிதனுக்கும் நாளாக மாறிற்று.

தான் பிற உயிர்களினும் உயர்ந்தவன் என்றும் தனக்கு நன்மையின் நலனும், தீயதன் தீமையும், பகுத்தறியும் பான்மை உண்டு என்றும் கண்ட மனிதனின் அறிவு, மேன்மேலும் தனக்கு வேண்டியவற்றை ஆராயத் தொடங்கிற்று. அவன் சுற்றித்திரிந்த வாழ்க்கையைத் நீக்கித் தனக்கென வீடு அமைத்தான். உற்ருர் உறவினர் முதலியவரைக் காணக் கற்ருன். மனைவி மக்களோடு வாழவிழைந்தான். இத்தனையும் பெற்றும் நல்வாழ்க்கை வாழ்ந்தும், அவன் மனம் அவனை அந்த அளவோடு நிற்க என்று கட்டளையிடவில்லை. ‘உண்டதே உண்டும் உடுத்ததே உடுத்தும் அடுத்தடுத்து உரைத்ததே உரைத்ததும், கண்டதே கண்டும், கேட்டதே கேட்டும்’ அவன் காலம் எல்லாம் கழிவதை நன்கு அறிந்தான். அறிந்ததும் அவன் அறிவு, மேலும் ஒன்று தனக்கு வேண்டும் என்பதை வற்புறுத்தியது. அந்த வற்புறுத்தலுக்கு உள்ளானுன், ஆழ்ந்தான், சிந்தித்தான், திகைத்தான், திளைத்தான். அதில்

முடிந்த முடிவே - அந்த அறிவின் விளைவே - சமயமாக உலகில் தோன்றலாயிற்று.

மனிதன் தனது வாழ்க்கைக்கும் தனக்கும் வேண்டிய பொருள் களைத் தேட முயன்றான். சில முயற்சிகள் கைகூடின. முயற்சியிற் சில முட்டுப்பட்டன. காரணம் என்னவெனக் காண முற்பட்டான். அவன் அறிவு ஒரு முடிவுக்கு வந்தது. மனிதன் ஆற்றலுக்கு மேற் பட்டுள்ள ஒன்று இருக்கிறது என்பதே அம்முடிவு. அம்முடிவின் உச்சியில் முளைத்தது சமயம்.

மனிதன் அறிவு விளக்கம் பெற்ற காலத்து, மனித அறிவுக்கு அப்பால் ஒன்று உளது என உணர்ந்த காலத்து, அவன் உள்ளம் உயரிய பொருளினைப் பற்ற வேண்டும் என்று விரும்பிற்று. அவ் விருப்பத்தின் வழியே மனிதன் சிந்தனைத் தேரேறிச் சேணெடுந் தூரம் சென்றான் ; அதைக் காண்பது அவ்வளவு எளிதல்ல என்று உணர்ந்தான். எனினும் வாழ்வெனும் மையலினும், அந்த அமர வாழ்வு, இறை உலக வின்பம் ஏற்றமுடையது என்பது மாத்திரம் விளங்கிற்று. அந்த அமைதி உலகிற்குச் செல்ல விழைந்தான். துருவித் துருவி வழி வகுத்தான். இன்று வாழ்கின்ற வாழ்க்கையில் இருந்தே, சாதாரண நிலையிலேயே அந்த அமைதி உலகை உடனே அடைய முடியுமா என ஆராய்ந்தான். இந்த உலக வாழ்வை விட்டு அப்படியே அந்த இன்ப உலகை ஆள முடியுமா என்று வழி கண்டான். இரண்டிற்கும் வழி காணாது கடைசியில் நிலைத்த முடி பிறகு வந்தான். இருக்கும் உலகிலேயே தன்னை - தன் உண்மை உணர்ச்சியை-முழு நம்பிக்கையை, இறை என்ற தன்னினும் உயர்ந்த இன்ப ஊற்றுக்கு உரிமையாக்கி, ஆற்றுவ ஆற்றி, போற்றுவ போற்றி, புரப்பன புரந்து வரின் அப்புத்தொளியில், அமைதி உலகில், இறை வாழ்வில் பெறுகின்ற இன்பத்தைக் காணமுடியும் என உணர்ந்தான். அந்த உணர்ச்சியின் முடிவே சமயங்கள் ; சமய ஒழுக்கங்கள்.

உணர்ச்சியின் வேகம் பல்வேறு வகையாய்ப் பரிணமித் தெழுந்தது. சமயங்கள் ஒன்றல்ல, பல தோன்றலாயின. அனைத்துக் கும் அடிப்படை ஒன்றே. தம் ஆற்றலைக் கடந்து நின்ற தனிப் பொருள் ஒன்று உண்டு என அறிந்ததும் அதன் வழி ஒழுகினா லல்லது உய்வில்லை என்று உணர்ந்தான் மனிதன். அதற்கு அடிப் படையாக வேண்டுவது யாது என ஆராய்ந்தான். இதுவரையில் அவன் வாழ்ந்த வாழ்க்கையை வரையறுத்துப் பார்த்தான். தன் வயிறு வளர்க்கும் நிலையை உறுதியென நம்பி, காட்டில் கண்டதைத் தின்று காலங்கழித்த நாள் முதல், நாட்டில் நல்லாருடன் வாழ்கின்ற அன்றை வரையில் அவன் கொண்டதெல்லாம் 'யான்' 'எனது' என்கின்ற தன்மையில் இயங்குவன என அறிந்தான். ஆனால் அவற்றில் மன அமைதியைக் கண்டானில்லை. மன அமைதியைப் பெற இறை உணர்வை ஏற்றான். அது முதல் அவன் வாழ்க்கை வழி முற்றிலும் மாறாக இருக்கவேண்டும் என எண்ணினான். அவ்வழியே அன்பு வழி எனக் கண்டான். அந்த அன்பின் அடிப்

படையிலே எழுந்தன சமயக் கொள்கைகள். அனைத்தும் இறைவனை அன்பு மயமாகக் கண்டு வழிபட்ட வரலாறு இவ்வாறு வளர்கின்றது. அந்த அன்பு 'உன்னைப் போல் பிறரை நேசி' என்ற வகையில் அனைத்திடத்தும் பரவுகின்றது. இப் பரந்த நோக்கத்திலே தான் சமயம் உச்ச நிலையை எய்துகின்றது.

அன்பு முகிழ்க்கும் இடம் எது? தன்னை மற்றவர்க்கு உரிமையாக்கும் இடமன்றோ! எவ்வகையில் உரிமையாக்குவது? நாம் இன்று உலகில் நமக்கு உரிமையான பொருள்களைக் காண்கிறோம், கேட்கிறோம், ஆள அவாவுகிறோம். அவை நமது உரிமைப் பொருளென உணர்கிறோம். அதே நிலையில் இறைவன் அடியார், தாம், தம்மினும் உயர்ந்த தலைவனுக்கு உரியவர் என்பதை உணர்ந்திருக்கின்றார்கள். வாழ்வில் கொள்வன இரண்டு. ஒன்று உரிமை. மற்றொன்று கடமை. அரசர் முதல் ஆண்டிவரையிலுள்ள ஒவ்வொருவரும் உரிமையினால் பிறரை நலிவுறுத்தாது கடமையினால் பிறரை வாழ்விக்க வேண்டும். பழந்தமிழ் நாட்டு அரசர்கள் கடமை வயப் பட்டவர்களாகி 'மன்னன் உயிர்த்தே மலர் தலை உலகம்' என்று போற்றிச் சிறப்புற்றார்கள். ஆனால் இன்றைய அரசுகள் நிலை முற்றிலும் மாறுபட்டது. கடமையை மறந்தன. உரிமையைப் பற்றி ஊசலாடுகின்றன. இக்காரணத்தினாலே தான் உலகிலே போர்; பிணக் குவியல்; பஞ்சம் எல்லாம்.

நிற்க, மக்களை உரிமையாக உடையவன் இறைவன் என்றும், அம் மக்கள்தம் கடமை இறைவழி நின்று பணியாற்றலே என்றும் ஆன்றோர் அறிந்துள்ளனர்.

"தன் கடன் அடியேனையுந் தாங்குதல்
என் கடன் பணிசெய்து கிடப்பதே"

என்ற அப்பரது அடிகள் அடியவரது உயர்ந்த கடமையை உணர்த்துகின்றன. இவர் தம் மொழிப்படி கடமையில் கருத்திருத்திப் பணிசெய்யின் மக்கள் வாழ்க்கை அன்பு வாழ்க்கையாக மலரும். உலகம் உய்வு பெறும். கடமை, பணி இவற்றில் தன்னை மறக்க வேண்டும். அவற்றிற்குத் தன்னை உரிமையாக்கிக் கொள்ளல் வேண்டும். தனக்குப் பிற உரியன என்று பேசலாகாது.

கடன், பணி இவைகள் மேற்கொள்ள நிலைகள் உள்ளனவா? இடம் உண்டா? நாடு உண்டா? அன்றிக் காலந்தான் உண்டா? அனைத்தும் அற்ற நிலையில் உணர்ச்சி அலை உயர்ந்து நின்ற நிலையில் முகிழ்ப்பது பணி. பணியும், கடமையும் கடவுள் நிலையை ஒத்தன. சாதி, சமய, கால, நாட்டு வேற்றுமைகளைக் கடந்த நிலையில் அமைவன. ஆகவே, கடமையை இயற்றுவதற்குக் காலம் பார்க்க வேண்டாம். 'மற்றறிவாம் நல் வினையை யாமிளையம் என்னாது, கைத்துண்டாம் போழ்தே கரவாது அறஞ் செய்மின்' என்பது கடமைக்கும் பணிக்கும் பொருந்துவதே. அந்தக் கடமையில், பணியில், அவற்றைச் செய்பவன், தான் வேறு, அந்தப் பணி வேறு என்று இருக்கமுடியாது. தன்னை மறந்தான், தனது உரிமை

மறந்தான். கடமையைக் கொண்டான். தான் வேறு, செயல் வேறு என்று கருதவில்லை. அந்தக் கடமையில், பணியில், செயலில் இரண்டறக்கலந்து நிற்கும் நிலையில் தான் இறை எதிர்ப்படும். அச்செயலெலாம் இறைவனதாகத் தோன்றும். இத்தோற்றத் தைத்தான் அன்பர்கள் உறுதியுடன் எதிர் நோக்கினர். 'நீயும் நீன் செய லொன்றின்றி நிற்றலே தரிசனம் தான்' என்பது உண்மை நெறி விளக்கமாகும்.

இக் கடமையை ஆற்றச் சாதி, சமயம், காலம் அனைத்தும் வேண்டாம் என்று கண்டோம். நமது சமயத் தலைவர்கள் இதற்கு நல் வழி காட்டியாக உள்ளனர். கடமை உலகத்தே-அன்பு உல கத்தே அவர்கள் வேறுபாடு கண்டார்களில்லை. சமயவழி நின்ற அனைவரையும் 'எக்குடிப்பிறப்பினும் யாவரேயாயினும் வருக' என்று வரவேற்றார்கள். அங்கே அந்தணர்க்கும் ஆதித் திராவிட ருக்கும் வேறுபாடில்லை. வேளாளர்க்கும் வேதியர்க்கும் வேற் றுமை இல்லை. குலப்பணி ஆற்றிய நிலையிலேயும் தம்மை மறந்த அடியவர் பலர். ஆகவே இவ்வன்புச் சமயத்திற்கு-கடமைச் சம யத்திற்கு யாதொரு வேறுபாடுமில்லை. நாவரசர் அப்பூதியாரது அருந் தலைவராகப் போற்றப்பட்டார். திருநீலகண்ட யாழ்ப் பாணர் ஞானசம்பந்தரை வீணையும் நாதமும் போல விடாது நின்றார். நந்தனார் அந்தணர் போற்ற ஆண்டவனைக்கண்டார். மெய்ச் சமய நிலையில் வேறுபாடுகள் விலகி ஓடின.

அன்புச் சமயத்தின் முன் அனைத்து வேறுபாடுகளும் அக லும். இவ்வன்பைப் பெறுதற்குக் காட்டிற்கு ஓடவேண்டா, கந்த மூலாதிகள் உண்ண வேண்டா, வீட்டிடையிருந்தும் வினையிடை யிருந்தும், நாட்டிடையிருந்தும், நலிவிடையிருந்தும் இவ்வன்புச்சம யத்தை வளர்க்கலாம். அடிமையாகலாம். சமய வேடங்கள் மட்டும் இறைவனை அடைவிக்க வல்லன அல்ல. அவை இடையிலே உள்ள படிகள் தாம். வேடங்கள் உண்மை அடியவரை வாழ்விக்கவும் வரும், வீழ்விக்கவும் வரும் 'எல்லாம் சிவன் செயலே' என்றிருந்த மெய்ப் பொருளார் சிவவேடங்கண்டு சிரம் வணங்கி வீரவாழ் வெய்தினார். அச்சிவ வேடத்தே உள்ளத்தில் நெருப்பு, முகத்தில் நீறு; மனத் தில் மாசு, மார்பில் கண்டிகை. இந்தவேடம் மெய்ப்பொருள் வாழ்விற்கு இறுதி தேடிற்று. இந்த நிலை மெய்யடியாரை மயக்கு விக்கும், மெய்யடியார் தம்மை மறந்தவர்; அனைத்தையும் அவனாகக் காண்கின்றவர். ஆதலின் அவன் வடிவுகாட்டி அவரை ஆளவும் முடியும்; அழிக்கவும் முடியும். நீறும் கண்டிகையும் கொண்டு அன்புச் சமயத்தை உளமார ஆளவைப்பார் யாரோ அவர் நம்மவர். அவர் வாழ்க! மற்றையவர் அத்தகைய தோற்றத்தோடு கூடியவ ராயினும் அவர் யாரோ, ஆழ்க!

வீட்டிடை யிருந்தும், வினையிடை யிருந்தும் இறை அருள் பெறுவது கூடும் என்று தொடங்கினோம். இறைபணிக்கு வேண் டியது அன்புள்ளம், கடமையுள்ளம், உணர்ச்சி வெள்ளம். சுந்தரர் இன்ப அன்பில் திளைத்தார். காடு சென்றாரில்லை; கால்

கடுக்கத் தவஞ் செய்தாரில்லை; பட்டினி கிடந்தாரில்லை. பாற் சோறுண்டார்; பாவையரோடாடினார். ஆயினும் அவர் ஆண்டவனின் தோழராயினார். ஞானசம்பந்தர் இளங்குழந்தையாகத் தந்தையார் தோளில் அமர்ந்து இறைவனைப் பாடினார். உலகை விட்டு ஓடவில்லை, ஒன்றிவாழ்ந்து, மணமுங்கொள்ள மனமிசைந்தார். இறைவன் அவர்க்கு வேண்டியதைக் கொடுத்தார். இளையான் குடிமாறர் போன்ற இல்லறத்தார் எத்துணையோ பேர் இறையடி உற்றனர். ஆகவே உளப் பண்பு ஒன்றே, அன்பு, கடமை, உணர்ச்சி கலந்த நிலை ஒன்றே சமயத்தை வாழ்விப்பது. ஈறிலா இன்பந் தருவது.

இன்று உலகில் எத்தனையோ சமயங்கள் இருக்கின்றன. அனைத்தும் மக்களை வாழ்விப்பனவே. அவற்றின் அடிப்படையும் ஒன்றே. அனைத்துக்கும் அன்பே அடிப்படை, தென்னாட்டுச் சிவன் எந்நாட்டுக்கும் இறையானவன் என்றார் மணிமொழியார். அன்பின் அடிப்படையில் கட்டப்பட்ட சமயக் கோயில்கள் நிலை குலைகின்றன. சைவ சமயங்களில் அன்பு நிலை மறைந்தது. கடமை நிலை கழிந்தது. சமய ஒழுக்கங்களுந் தடுமாறின. இன்றைய தமிழ் நாட்டுக் கோயில் வணக்கத்துக்கும் பிற நாட்டு வணக்கத்துக்கும் எத்துணையோ வேறு பாடுகள். நாவரசர் வழிபட்ட முறையினை நம் வழிபாடு சென்று பற்றுமோ? ஏன் இவ் வேறுபாடுகள்? மூந்திநாதன் போல் சிலர் மூளைத்ததனால் என்று முட்டின்றிக் கூறலாம்.

பிறசமயக் கோயில்களின் வழிபாட்டில் வேறுபாடில்லை. ஆனால் நம் திருக்கோயில்களிலோ! நந்தனாரை வழிபடும் நாம், கண்ணப்பரைக் கனிந்து பாடிக் கசிகின்ற நாம் அவர் குலத்தை வேண்டாம் என்று வெறுத்து ஒதுக்குகிறோம். அங்கே முனைப்பு, உரிமை, பிற அனைத்தும் தாண்டவமாடுகின்றன. இறைவன் கோயிலின் முன் எல்லாம் ஒன்றே. அனைவரையும் 'சேர வாரும் செகத்தீரே' என்று உடனழைத்துச் செல்ல வேண்டும். காலத்தின் வேகம் அதி விரைவிலே அதைச்செய்து முடிக்கும்.

கோயிலில் நுழைந்த பிறகு, கும்பிடும் நிலையை எண்ணினும் சிந்தை திகைக்கிறது. கோயிலுக்குள் செல்லுவது, தொழுவது, தூமலர் தூவுவது, அழுது காமுற்று அரற்றுவது என்ற அழகிய வழிபாடு அப்பர் காலத்தியது. வீட்டுப் பூசையைப் பற்றி அவர் இதைக்கூறினாரில்லை, இன்னம்பர் இறைவர் எதிர் நின்று இதைப் பாடுகிறார். அத்தகைய உயரிய வழிபாடு எங்கே? இன்றைய வழிபாடு எங்கே?

'பண்ணொன்ற இசை பாடும் அடியார்கள் இடனாக' இறைவன் உள்ளனன் என்று பாவாணர் பாட்டிசைக்கின்றனர். நாம் தலையாட்டுகின்றோம். மனம் நெகிழ்கின்றோம். உள்ளம் உருகுகின்றோம். ஆனால் கோயிலுக்குச் சென்றதும் காண்பது என்ன? சம்பந்தர் காலத்துப் பண்ணொன்றப் பாட்டிசைத்துப் பரமனைப்

பாடிய நிலை எங்கே? இன்று கோயில்களில் காணும் காட்சி எங்கே? 'எவரேனும் தாமாக விலாடத் திட்டத் திரு நீறும் சாதனமுங்கண்டு' வழிபட்டதும், 'ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் - யாம் வணங்குங் கடவுளாரே' என்று வணங்கினதும் ஆகிய அப்பர் காலத்து அன்பு நிலை எங்கே! இன்று ஆணவத்தால் அகங் குழையவைக்கும் ஏழ்மை நிலை எங்கே!

வாழ்க்கை தாம் வாழ்வதற்கே என்று இன்றைய உலகம் கருதுகின்றது. பிறரை வாழ்விப்பதற்கு என்று அன்றைய உலகம் கருதி வந்தது. கடமை நமதே என்று அன்றைய உலகம் கருதிற்று. உரிமை நமதே என்று இன்றைய உலகம் கருதுகிறது. இந்த வேறுபாடுதான் இன்றைய சமயநிலைக்குக் காரணம்.

நமது கடமையை உணர்ந்தோம். சைவ சமயத்தின் மாட்டு இத்தகைய கடமையைச் செய்வதற்கு முன், ஏன் இச் சமயத்திற்குக் கடமைப் பட்டுள்ளோம் என்ற ஆராய்ச்சியுஞ் செல்லும். எல்லாச் சமயங்களும் அன்பால் கட்டப் பட்டன என்று கண்டோம். அவற்றுள் இது மட்டும் 'சைவத்தின் மேற் சமயம் வேறில்லை' என்று பேசப்படுவதின் காரணம் என்ன? வழிபாட்டு முறை, உருவம், அருவம், அரு உருவம் என்ற மூவகையில் அமைகின்றது. பிற சமயங்களெல்லாம் உருவம் அல்லது அருவம் என்ற ஏதேனும் ஒன்றை அறிவுறுத்த சைவம் மட்டும் இரண்டையும் உள்ளடக்கி அவற்றிற்கு மேலான அருவுருவ வழிபாட்டிற்கும் அடிகோலுகிறது. மற்றும் பிற சமயங்களை யெல்லாம் தன்னகத்து அடக்கித் தாய் போல் தழைத்துள்ள சமயம் சைவ மாகும்.

'விரிவிலா அறிவினர்கள் வேறொரு சமயம் செய்தே, எரிவினால் சொன்னாரேனும் எம்பிராற்கு ஏற்றதாகும்' — என்று சொன்ன சமயம் இது. 'யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே மாதொரு பாகனார் தாம் வருவர்' என்று பறை சாற்றியது இது.

இத்தகைய ஒரு சமயம் வாழ்க்கைக்கு அவசியமா என்ற ஆராய்ச்சியும் இற்றை நாளில் எழுகிறது. ஆராய்ச்சிக்கண் கொண்ட உலகம் சமயத்தை ஆராயப் புகுந்துள்ளது. நன்றுதான்! இந்த ஆராய்ச்சியின் முடிவிலேதான் சமயத்தின் உண்மை நிலையும் தோன்றும். வாழ்க்கையும் சமயமும் ஒன்றை விட்டு ஒன்று பிரியாதன. சமய மின்றேல் வாழ்வில்லை. தமிழ் நாட்டில் சமயம் வாழ்வோடு இணைக்கப்பட்டுள்ளது. தமிழர்கள் அனைத்திடத்தும் சமயங் கண்டவர்கள். ஆகவே அவர்கள் நூல்களனைத்திலும் சமய வாடை வீசக் காணலாம்.

தொடக்கத்தில் சமயம் அன்பால் ஆயது என்று கண்டோம் அன்புச் சமயம் வாழ்க்கையில் இல்லாவிடில் என்னாகும். துன்பக் கேணியில் மூழ்கி நிற்கும் ஒருவன் தன் துன்ப நீக்கத்தை விழைகின்றான், வழிதேடுகின்றான். வழி ஒன்றும் கிடைக்கவில்லை என்றால் அழுது விடுகிறான். அந்த அழுகை இறைவனைப் பற்றி

நிற்பதே சமயம். 'அழுதாலுன்னைப் பெறலாமே' என்ற உறுதி வாக்கு அதனால் எழுந்தது. இறைவனை வழிபடும் அடியவர் தமக்கென ஒன்றை வைத்துக் கொள்வதில்லை. தம்மை அவனுக்கு உரிமையாக்கித் தமது கடமையைச் செய்கின்றனர். இந்தக்கடமை நிலை ஒருவனுக்கு வாழ்க்கையில் அமையுமானால் அவனுக்குத் துயர் எங்கே? அவன் துன்பத்தில் ஆழ வேண்டிய காலம் ஏது? அந்நிறைந்த இன்ப காலத்தே, சிறந்தவகையில் பணியாற்ற அவன் முற்படுவானன்றோ? மெய்ம்மையில்வாழ நினைக்கின்றவன் மனிதன். இனிமையில் வாழ அவன் மனம் துடிக்கின்றது. இந்த விழைவு, துடிப்பு அனைத்தும் சமய வாழ்க்கையில் முறறுப் பெறும். சமய வாழ்க்கையில் பஞ்சம், பிணி, உயர்வு, தாழ்வு, செல்வர், வறியர் என்ற வேறுபாடு அனைத்தும் அகலும். இன்றைய உலகில் காண்பது என்ன? ஒரு புறம் மாடியில் அமர்ந்து, உல்லாச வாழ்கை வாழ்ந்து உண்ட உணவு அருவகையில் திகைப்பதும், மற்றொரு புறம் அற்றைக் கூழுக்கு அலமறுவதுமாக அன்றோ விருக்கிறது. இது எதனால் வந்தது? சமயத்தைப் போற்றாததனால் அல்லவா? செல்வர் அனைவரும் இளையான்குடி மாறர் போன்று அப்பூதியார் போன்று உலக முய்ய உணவளிக்க முற்படுவார்களானால் நாட்டில் நலிவு ஏது? பிணி ஏது? பிற தீமை தான் ஏது?

'நடமாடுங் கோயில் நம்பர்க் கொன்றீயில், படமாடுங் கோயில் பரமர்க் கங்காகும்' என்ற மறைமொழி எழுந்த நம் நாட்டில் 'நடமாடுங் கோயில்களாகிய' மக்கள் வாட்டப்படுகின்றனர். அவர் தம் வாட்டத்தில் பெற்ற பொருளைக் கொண்டு மகிழ்கின்றனர். மற்றொரு சாரர். இவர் செயல், கண்ணை மறைத்த கடிய தொழிலாணவத்தால் எண்ணும் செயலாக, இருக்கின்றது. இவர்கள் திருமூலர் மறை நோக்கின் வாழ்க்கைக்குச் சமயம் எவ்வளவு பயன் படுகிறது என்பது வெளியன்றோ?

இன்றைய உலகம் ஆராய்ச்சியில் - அறிவியலில் - விஞ்ஞானத்தில் வீறிட்டு நிற்கின்றது. அணுக்குண்டைப்பற்றிய ஆராய்ச்சியே எங்கும். ஆனால் 'அணுவுக்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்' அமைந்த இறைவன் தன்மை அறிய மறந்தனர். மக்கள் அணுவை ஆராயலாம். அணுவாலாயகுண்டை ஆராயலாம். ஆனால் அணுவுக்கு அணுவாகவும் அப்பாலுக்கு அப்பாலாகவும், எப்பாலும் பரந்துள்ள ஒரு பொருளை ஆராய்வது எளிதன்று. அல்லும் பகலும் அனவரதமும் ஆராய்ச்சியாளர் பலர் முயன்று பெற்றெடுத்த அணுக்குண்டு இது. அதன் தன்மையையே அமெரிக்கரும் ரஷ்யருமன்றி மற்றோர் அறியாது அல்லற் படுகின்றனரே எனின், அணுக்கள் அனைத்தினையும் தம்முள் அணுவாக் கொண்ட இறையின் தன்மை விரைந்து ஆராய முடியாததொன்று.

'பூதங்களல்ல பொறியல்ல வேறு புலனல்ல உள்ள மதியின் பேதங்களல்ல இவையன்றி நின்ற பிரிதல்ல' என்று பெருநூல் வேதங்கிடந்து தடுமாறும் வஞ்சவெளி' என இறையின் தன்மையைப் பரஞ்சோதியார் பறைசாற்றுகின்றார். இத்தகைய அப்

பாலுக்கப்பாலாய பொருளை வாழ்விடைப்பெற முடியுமா எனின் முடியும் என்று விடை யிருக்கலாம். முதலில் காட்டிய அன்பு வாழ்க்கையே - கடமை வாழ்க்கையே அவ்வழிக்குச் சிறந்த ஊன்று கோலாகும். ஒரு சிறு அணுக்குண்டு பெரும் போரை நிறுத்திற்று. எனினும், அதுவே மற்றொரு போருக்கு முதற் காரணமாக அமை யினும் அமையும். ஆனால் அணுவுக்கு அணுவாய் இருக்கும் இறை வன் தன்மை ஆராயப்படின், இன்றையப் போர் மட்டுமல்ல, என் றையபோரும் இல்லாதொழியும். வருங்காலம் வளமானதாகும். உளமெலாம் ஓடவிட்டு உடலாலே ஒன்றுகூடி ஆராயும் மேனாட்டு மக்கள், மக்களின் தலைவர்கள் இந்த உண்மையை உணர்வார்க ளாயின், அன்றுதான் போர் நீங்கிப் புவி செழிக்கும். வாழ்க்கை வளமுறும். உயர்வு தாழ்வு ஓடும். நிறவேற்றுமை நீங்கும். இவ் வுண்மையை உணரும் நாள் எந்நாளோ? உண்மை. ஆம் அது எந்த வேறுபாடும் இல்லாத அன்புளத்தால் அனைவரையும் ஒன்றுக்கும் உண்மை.

இவ்வளவு வளமும் நலமும் வாரி வழங்கும் சமயநிலை தற் போது தாழ்வடைவானேன்? காரணம் இரண்டு. ஒன்று நாட்டில் போதிய கல்வி இல்லாமை. மற்றொன்று அடியவர் வாழ்வெல்லாம் அல்லலில் கழிவது. கல்வி என்றவுடன் தற்காலக் கல்வி என்று கருதவேண்டாம். ஆனால், வயிற்றுப் பிழைப்புக்கு ஆகிய இக் கல்வியிலும் நம் நாடு முன்னேற்ற மடையவில்லை. கடைசியாக எடுத்த அரசாங்கத்தார் கணக்கு வருமாறு :—

	கல்வி நிலையங்கள்		படிப்பவர் தொகை	
	ஆண்	பெண்	ஆண்	பெண்
கல்லூரி	339,	46	1,40,088.	4,816
பள்ளிகள்	184,173.	30,475	12,669,618.	18,89,774
அரசாங்க அங்கி காரம் பெருதன	15,793.	4,259	479,742.	112,363
	2,00,305.	34,780	1,32 89,448.	20,06,953

இக்கணக்கு பிறநாட்டுக் கணக்குகளோடு ஒத்துப் பார்க்குங் காலத்து மிகக் குறைவாகும். நாற்பதுகோடி மக்களுள் ஒன்றரைக் கோடி பள்ளிக்குச், செல்கின்றாரென்றால் இது வருந்தத்தக்க தொன்றாகும். தற்காலக் கல்வி இவ்வாறிருப்பின் இறைவனை அறியுங் கல்விநிலை சொல்லவும் வேண்டுமோ ?

> "கற்றதனாலாய பயனென் கொல் வாலறிவன்
> நற்றாள் தொழாரெனின்"

என வள்ளுவரும்,

"கல்லாதார் மனத்தணுகாக் கடவுள் தன்னைக்
கற்றூர்கள் உற்றேரும் காதலானை''

என வாகீசரும் வரையறுத்த கல்விநிலை இன்று நாட்டில் அருகி விட்டது. அக் கல்வி, உயிரை அன்பு வாழ்க்கையில் ஓம்புவது. முற் காலத்தே அக்கல்வி அறிந்தார் பலர், கல்வி கற்றதனால் வாலறிவன் நற்றாள் தொழ நயந்தார்கள். ஊர் தோறும் ஓடினார்கள். இறைவனை வழிபட்டார்கள். 'கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்றார்கள். அது அன்றைய நிலை. இன்றைய நிலையில் கல்வி குறைந் தது. கடவுளை அறியும் அறிவு மறைந்தது. அன்றைய கோவில்கள் இன்றும் அழகுடன் விளங்குகின்றன. ஆனால் அன்பு வழியில் இறைவனைப் போற்ற வழி வகுக்கும் கல்வி நாட்டில் இல்லை. அக் கல்வியின் அவசியத்தை இன்றைய அறிஞர்கள் உணர வேண்டும். உணர்ந்தவர் பாரதியார். "தேடு கல்வியிலாத தோர் ஊரைத் தீயினுக்கு இரையாக மடுத்தல் நலம்" என நவின்றார். ஆகவே கலைக் கழகங்கள் காண மக்கள் முற்பட வேண்டும்.

அடியவர் வாழ்வெல்லாம் அல்லலில் ஆழ்வதுகண்டு சமயத்தை வெறுப்பவரும் சிலர் உளர். அடியவர் அல்லலை இவர் ஆராயாதவர் என்றே சொல்லலாம். எல்லாச் சமயங்களும் அன்பை அடிப் படையாகக் கொண்டது போலவே. துன்பப் பீடத்தையுங் கொண் டுள்ளன. 'துயரப்படுகின்றவர்கள் பாக்கியவான்கள், பரலோக ராஜ்யம் அவர்களுடையது' என்ற ஏசுவின் பொன்மொழியும், 'நண்ணாதார் முறுவலிப்ப நல்லுற்றார் கரைந்தேங்க - எண்ணாருத் துயர் விளைக்கும் இவை என்ன உலகியற்கை' என்ற நம்மாழ்வார் நன்மொழியும், 'நினைந்துருகும் அடியாரை நைய வைத்தாய்' என்ற வாகீசர் வாக்கும், அடியவர் படும் அல்லல், சிறந்த உரை கல்லாக அமைவது என்பதைக் காட்டவில்லையா ? ஆம் ; நண்ணாதார் முறு வலிக்கின்றனர் ; அடியவர் அல்லலுறுகின்றனர். அவர் தம் முறு வலிப்பும், இவர் தம் அல்லலும் எத்துணைநாள் நிற்பன என்று எண்ண வேண்டும். அரசர் முதல் ஆண்டிவரை அனைவரும் இவ் விதிக்கு உட்பட்டவர்களே. உலகைப் பல பங்குகளாகப் பகுத்து வாழ விரும்பும் இன்றைய வல்லரசுகளெல்லாம் எத்தனை காலம் வாழமுடியும்? அவர்தம் முறுவலிப்பு எத்தனை நாளுக்கு? ஒருகாலத் தில் அனைத்தும் ஆழ வேண்டுவனவே. 'நாங்கள் ஆளப் பிறந்தோம்; பிறர் அடங்கப் பிறந்தார்' என்று வீறு பேசிய ஹிட்லர் அடைந்த முடிவு தறுக்குவார்க்குத் தக்க பாடமாகும். ஆணவம் அழிந்தொழி வது போலவே அடியவர் தம் அல்லலும் அழிந்தொழியும். அடியவர் வீரர் ; வீறுகொண்டவர். அவர் வீறு கொள்வதற்குக் காரணம் அவர்கள் உலகில் யாருக்கும் அடங்காமையே. அவர்கள் இன்னல் கள் இடையிலும் இன்பம் கண்டவர். அதனால் அவர்கள் அல்லல் உறுவதில்லை. இன்பமும் துன்பமும் அவன் அளந்தன என எண்ணி இன்பமடைகின்றவர். 'எதுவரினும் வருக அல்லது எது போயினும் போக, நின் இணையடிகள் மறவாத பேறொன்று மாத்திரம் எனக் கடைதல் வேண்டும்' என்று வேண்டுகின்றவர். அவாகள் உடலை

உலகுக்கு - மண்ணுக்காக்கி உணர்வை இறையிடம் ஒன்ற வைக்கின்றவர்கள். அந்த உள்ளத்திலிருந்துதான்

'கற்றுணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சிவாயவே'

என்ற எண்ணம் எழுந்தது. அவர்கள் 'நாமார்க்குங் குடியல்லோம்' என்று நிமிர்ந்து நிற்பவர்கள். உச்சிமீது வானிடிந்து வீழ்ந்து விட்டபோதும், மண் பாதலம் புக்கு, மா கடல் மூடினும் 'அஞ்சுவது யாதொன்றுமில்லை' என்று வீறு பேசி நிற்பவர்கள். அத்தகைய அடியவர் முன் முறுவலிக்கும் மூர்க்கர்தம் செயல் அழியும். அழிந்தன கண்டோம்; காண்கின்றோம்; காண இருக்கின்றோம்!

இனி, மக்களாக 'வாழ்வாங்கு வாழ' வழி வகுத்த சைவப் பெரியார்கள் அறிவுறுத்திய வகையினைச் சிறிது காண்போம். தாம் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறுக என்ற குறிக்கோளுடைய பெரியார் கூறியதில் இரண்டு ஒன்று ஈண்டுக்காண்டல் ஏற்புடைத்து என எண்ணுகின்றேன்.

உலகிலே இன்று மக்கள் சிறுதெய்வங்களையும், செல்வரையும் அணுகி வாழ்த்தி வணங்குவதைக் காண்கின்றோம். இச்செயலெல்லாம் இம்மை வாழ்வுக்கு இழுக்கம் தருவதோடு மறுமை இன்பத்தையும் மாய்க்கும் என்று கண்டனர் ஆன்றோர். சுந்தரர் உலகமக்களைப்பாடி அலுத்த ஊமர்களை நோக்கிப் 'பொய்மையாளரைப் பாடாதே எந்தை புகலூர் பாடுமின்' என்று நம் உரைக்கின்றார். அவர்தம் அறவுரைவழி உலகம் இயங்கின் நன்று. சிறுதெய்வ வழிபாடு நம்நாட்டில் மிகுதியாக உள்ளது. மக்கள் மனம் ஒன்றை உறுதியாகப் பற்றாததே இத்தகைய இடற்பாட்டிற்குக் காரணம். எல்லாம் வல்ல இறைவன் என ஒருவனை ஏத்தி அவனை வணங்கி, பின் நாளுக்கும், கோளுக்கும் சாந்தி செய்வார் பலரைக் காண்கின்றோம். தமிழ் நாட்டுப் பழங்கோயில்களில் நவக்கிரகத்திற்கு இடமொதுக்கப்படவில்லை. உளப்பண்பும் உறுதிப்பாடும் குறைந்த காலத்தே 'அச்சமே கீழ்மகனது ஆசாரம்' என்னும் மறைமொழிக்கேற்ப அஞ்சாததற்கு அஞ்சிப் பிறசமயத்தார் யாவரும் மேற்கொள்ளாத நவக்கிரகவழிபாட்டைச் சைவ சமயத்தில் சிலர் நுழைத்தனர். வருகின்ற சிறுசிறு ஊறுகளை எல்லாம் இவை போக்கும் என எண்ணி, மக்கள் மனதை ஒருவழிப்படுத்தும் உயர்நிலையை விடுத்து, பணத்தைச் செலவு செய்து பலதெய்வ வழிபாட்டைக் கொண்டனர். 'வேயுறு தோளி பங்கன்' என்ற பதிகத்தைக் காலையில் தம் சிவபூசையில் ஓதி, அன்று மாலையே நவக்கிரகத்திற்குச் சாந்தி செய்யும் பெரியார் எத்தனை பேர் நம்நாட்டில் உளர்? அவர்கள் ஒன்று நவக்கிரகத்தை விடவேண்டும்; அல்லது சம்பந்தரை விடவேண்டும். இரண்டும் இல்லையேல் இறைவனிடத்து உண்மை நம்பிக்கை இல்லை என்பதை வெட்ட வெளிச்சமாகச் சொல்லிவிடவேண்டும். அவர்தம் மனத்தை 'செத்துச் செத்துப் பிறப்பதைத் தேவென்று, பத்திசெய் மனப்பாறை' என்கிறார் அப்பர். அப்பர் தம்வீறு

'சென்று நாம் சிறு தெய்வம் சேர்வோமல்லோம்' என்பதில் சிறக்கின்றது.

மற்றும் அப்பர்பெருமான் இறைவழிபாட்டு முறையை நன்கு விளக்குகிருர். நெட்டுயிர்ப்போடு உற்றபிணமாக உயிர் வாழ்ந்து, வீணுகக் காலங் கழிக்கும் வீணர்களை அழைக்கின்ருர். 'ஐயன்மீர் இப்படிச் சோம்பேறிகளாகப் பொழுது போக்கிடும் மகிழ்ச்சியில், நீங்கள் உயர்ந்தோர்கள் என எண்ணிக்கொள்ள வேண்டாம். உழைப்பில்லாது சோம்பலில் உழன்றது போதும். உங்கள் கணக்கெல்லாம் எழுதப்பட்டு வருகின்றது. ஏழைகள் முகங் கண்டு இரங்கி அன்பு வாழ்க்கை நடத்துபவர் கணக்கு முளது; கணக்குத் தீர்க்கும் நாளில் மீளாத்துயரத்தில் நீங்கள் வாடி வதங்க, அவர்கள் இறையன்பில் மகிழ்ந்திருப்பார்கள்' என்ற கருத்தடக்கி

> ''பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்
> எழுதும் கீழ்கணக்கு இன்னம்ப ரீசனே'

என்ற அடிகளைப் பாடி உள்ளார். ஆகவே வீண்பொழுது போக்கும் வீணர்கள் நம் சமயத்துக்கு வேண்டாம். இவர் தேவர், அவர் தேவர் என்று வேறுபாடு காட்டுபவர் வேண்டாம். சமயத்தைப்பற்றி வானளாவப் பேசுபவர்களைக் காட்டிலும் செயலாற்றுபவர் இன்று நமக்கு வேண்டும்.

பழங் காலத்தினின்று இக்காலத்திற்குப் பரந்து வந்தோம்! இதோ எதிரிலே இருப்பது வருங்காலம். எதிர்காலத்தில் பெருந் தலைவர்களாக, தொண்டர்களாக, செயலர்களாக, செம்மல்களாக, வர இருக்கின்றவர் இளைஞர்கள்! எதிர் காலத்திலே அவர்கள் மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு மிகப் பெரிதாகும். காலம் நமக்கென நிற்காது வெகு வேகமாக முன்னேறிக்கொண்டே செல்கிறது. இவ் விரைந்து செல்லும் காலச் சுழலில், வாழ்வுத் தோணியில், செல்லுங்காலத்து எதிர்த்து நிற்கவேண்டுவன பல. பிறநாட்டு மக்களெல்லாம் ஒல்லும் வகையால் நாட்டு வளர்ச்சிக்கும் கலை, மொழி. சமயம் ஆகிய அனைத்து உணர்ச்சிக்கும் அரும் பாடுபட்டு வருகின்றனர். நேற்று இந்தியாவைப் பங்கிட வேண்டும் என்று எழுந்த கிளர்ச்சியும், அதுபற்றி நாடு துண்டாக்கப்பட்ட நிகழ்ச்சியும் சமயத்தைப் பற்றியதே. ஆகவே சமயமே நாட்டை ஆக்க வல்லது என்பதை அவர்கள் அறிந்திருக்கிருர்கள். மேலை நாட்டுக் கிறிஸ்து சமயத்தை இன்று நாம் எக்கண் கொண்டு காண்கின்ரேம். சென்ற நூற்ருண்டிலே எக்கண் கொண்டு கண்டிருப்பார்கள் என்பதை எல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும். நாளுக்கு நாள் கிறிஸ்தவர் எண்ணிக்கை பெருகிக் கொண்டே போகிறது கண்கூடு. அவ்வாறு ஒரு சமயம் உலகிடை உயர்ந்து பரவுவானேன். அச்சமயத்தில் சிலரிடமாவது தியாக உணர்ச்சி, தன்னலம் இன்றி வாழ்தல் என்பன போன்ற எண்ணங்கள், அவ்வெண்ணங்களின் வழிச் செயல்கள் திளைக்கின்றன. கிறிஸ்தவர்கள் தாம் சம்பாதிக்கும் ஊதியத்தில்

ஒரு பாகம் சமய வளர்ச்சிக்கென்றே ஒதுக்குகின்றார்கள். கொடையைப் பற்றி அவர்கள் உள்ளம் எண்ணும் போது, சமயத்தில் தான் அவர் நாட்டம் நாடுகின்றது. சமயத்துக்கு ஆயிரக்கணக்காக, இலட்சக் கணக்காகப் பொருளை வாரி வழங்கியவர் பலர். அவர் தம் உளத் திட்பமும், பொருள் உதவியுமே இன்று உலகிடை அவர் தம் சமயம் பரவுவதற்கு ஏதுவாக உள்ளன. அவர்கள் பன்னிப் பன்னிப் பழங்கதைகள் சொல்லிக் காலத்தை வீணில் கழிக்க மாட்டார்கள். 'மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமை இல்லை, என உணர்ந்தவர்கள். செயலில் அவர்கள் சிந்தை செல்கின்றது. அவர் தம் சிந்தையின் நிறைவே இன்று இந்திய நாட்டில் குமரி முதல் இமயம் வரை கிறிஸ்துவ மக்கள் வாழ வழி வகுத்தது. ஆனால் நம் சமயத்தார் இன்று என்ன செயலில் செய்ய முற்படுகின்றனர். நம்நாட்டுச் சமயப்பணி தமிழ்ப் பணியையும் உடன் கொண்டு நிற்பது. ஆகவே ஒரே செயலில் இரு பணி ஆற்றி உயர்ச்சி பெறல் வேண்டும். நாடும் நகரும் இன்று சமயவழக்கத்தைச் சரிவரக் கொள்ளவில்லை. சமயக்கோயில் உணர்ச்சியின்மேல், நம்பிக்கையின் மேல், அன்பின்மேல் கட்டப்பட்டது என முன் கண்டோம். இன்றைய சமயவாழ்க்கையில் உணர்ச்சியில்லை; நம்பிக்கை இல்லை; கடமை இல்லை; அன்பில்லை. மக்கள் வாழ்க்கையில் அன்புணர்ச்சியை, எல்லோரும் ஓர் குலம் என்னும் ஏற்றத்தை, கடமையைச் செயல்மூலம் அறிவுறுத்த வேண்டும். ஏதோ காலம் கழிப்பதற்குச் சமயம் என்று எண்ணுகிற சோம்பேறிக் கூட்டத்தைத் தொலைக்கும் வீரவாள் அறிஞர்தம் உணர்ச்சி அலையே யாகும்!

கிறிஸ்து சமயத்தே ஆடவர் பெண்டிர் என்ற வேறுபாடின்றி அனைவரும் இயைந்து சமய அறப்பணி ஆற்றுகின்றார்கள். ஊர் தோறும் சென்று ஒதுக்கிடத்து வாழும் மக்கள் வாட்டம் தீர்த்து அவர்களை வருக என அழைத்துக் கொள்கிறார்கள். எத்தகைய இழிதொழில் செய்வதையும் அவர்கள் சமயத்தின் பொருட்டு ஏற்றுக் கொள்கிறார்கள். அங்கே தியாகம் அரும்ப வழியுண்டு. ஆனால் இங்கே திகைப்பு அரும்புகின்றது. மக்கள் பணி வாழ்க்கையில் எதுவாக அமையினும், ஆண்டில் சில நாட்களுக்காவது சமயம், தமிழ் என்ற இரண்டிற்கும் உழைப்பதாக உறுதி கொள்ள வேண்டும். என்றும் உழைப்பவர் விரைந்து வருக! சமயப் பணியில் சன்மார்க்கம் உண்டு, சமதர்மம் உண்டு, அரசியல் உண்டு, அனைத்து நலன்களும் உண்டு. நாம் அனைவரும் 'யாமார்க்குங் குடியல்லோம் யாதுமஞ்சோம்' என்ற வீரவாழ்வு வாழப் பழக வேண்டும். அரசியல் விடுதலையுற்ற நாடு பின்னும் அனைத்து விடுதலைகளையும் அடையவேண்டும் எனும் விருப்பம் உலகில் இருக்குமானால் அப்பரது வீரவாழ்க்கை மக்களிடம் அரும்புவதாக. 'அச்சமில்லை அச்சமில்லை' என்று வீதிதோறும் முழக்கமிடும் பாரதியின் பாடல் எங்கிருந்து எழுந்தது? 'அஞ்சுவது யாதொன்றுமில்லை அஞ்ச வருவதுமில்லை' என்ற அப்பரின் அடிபற்றி எழுந்ததன்றோ அது. சமயப் பணி ஆற்றியவர் வீரர் என்று அழைக்கப்படுகின்றனர். அவர்தம்

'வீரம் எம்மால் விளம்பும் தகையதோ' எனச் சேக்கிழார் நாயன் மார் வரலாற்றைத் தொடங்குகிறார். அத்தகைய வீரவாழ்வு-வெற்றி வாழ்வு - உண்மைக்கு உழைக்கும் உயர்வாழ்வு நம் வாழ்வை வளம்படுத்துவதாக அமைய வேண்டும்.

திண்ணிய வீரம் உள்ள இடத்து சிறந்த ஈரம் இருக்கும். அடியவர் வீரங் கூறவந்த சேக்கிழார், 'ஈரநெஞ்சினர் யாதுங் குறைவிலர், வீரம்' என்றே கூறுகின்றார். ஆகவே எவரிடம் உண்மை ஈரமும் உறுதி வீரமும் உறைந்து நிற்கின்றதோ அவர் யாதொரு குறைவுமில்லாதவராவர். அவர் மூலம் மெய்ச்சமயம் சிறந்து விளங்கும். மக்கள் உள்ளத்திலே ஈரம் இடம் பெறுவதாக!

தமிழ்நாட்டு மக்களது இன்றைய மனநிலை ஆக்கவேலையிலும் அழிவு வேலையிலேயே மூழ்ந்திருக்கிறது. நமக்கு வேண்டாத சாதி, வேண்டாத சமயம், வேண்டாத மக்கள் இருந்தால் அவர் களிடம் வெறுப்பேற்படுவது இயல்பு. அதுவும் அவர்கள் நம்மை நசுக்க எண்ணும் காலத்து மனம் பொங்கி எழும். அவ்வாறு எழு கின்ற மனம் அவர்தம் அழிவை நாடுவதைக் காண்கின்றோம். ஒரு கட்சிக்காரர் மற்றொரு கட்சிக்காரரை இகழ்வதும் ஒரு சமயத்தார் பிற சமயத்தாரைப் பழித்தலும் இன்னும் நாட்டிடைக் காண்கின் றோம். அவர்களை எவ்வகையாவது இழித்துப் பழித்து அழிக்க வேண்டும் என்று அவாவுகின்றோம். அதைத்தான் அழிவு வேலை என்று கூறினேன். ஆனால் நமது மனம் ஆக்க வேலையில் அமைய வேண்டும். நம் மாற்றான் எந்தெந்த வகையில் மேலோங்குகின்றான் என உணர வேண்டும். அவனினும் நாம் மேலோங்க வழி யாது என்று ஆராய வேண்டும். அவ்வாராய்ச்சியின் முடிவிலே ஆக்கப் பணி முகிழ்க்க வேண்டும்.

அவ்வாக்கப் பணிக்கு நம்மை உரிமை யாக்குவன யாவை? சமயங்கள் எக் கொள்கைகளின் மேல் நிறுவப் பட்டனவோ அவையே இதற்கு உரியன எனலாம். கடமை, அன்பு, உணர்ச்சி ஆகியவைகளே ஆக்க வேலைக்கு ஆணிவேர்கள். மக்கள் கடமை பெரிது என்று உணரவேண்டும். நாம் மட்டும் வாழ வேண்டும் என்ற எண்ணத்திலே கடமை முகிழ்க்காது. 'எல்லாரும் இன்புற்றி ருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே' என்ற சமதர்மத்திலே, சத்தியத்திலே கடமை தோன்றும். அதற்கு அன்பும் உடன் அமையவேண்டும். எனவே, நம் பணி ஆக்கத்திற்கு அடிப்படையாக அமையவேண்டும். அப் பணி அன்பால், கடமை யால், உணர்ச்சியால் கட்டப்பட்ட மாளிகையாக விளங்க வேண் டும். அம்மாளிகையில் விரைந்து வந்து இறைவன் எழுந்தருள் வான். இறைவன் எழுந்தருளப் பெற்ற உள்ளம் எதற்கும் அஞ் சாது. அஞ்சாத அமர வாழ்விலே அனைத்து நலங்களும் உண்டு. ஏற்றந் தருவதும் இனிமை தருவதும் எழில் தருவதும், இன்பம் தருவதும், யாவும் அந்த அமர வாழ்விலே அமையும். அத்தகைய வாழ்வு மக்கள் தம் வாழ்வாக அமைவதாக! வருங்காலம் அவ்வாழ்க் கையால் வளமுறுவதாக! மெய்மை உலகம் மேன்மை யுறுவதாக!

தமிழ் இன்பம்

தமிழ் என்ற சொல்லுக்கே இன்பம் என்பது பொருள். தமிழை அறிந்தார் உலகில் இன்பத்தை அறிந்தவராவர் என்று கூறுவர். 'செந்தமிழ் நாடு என்ற போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது என் காதினிலே' என்று பாடிச் சென்றார் பாரதியும். தமிழில் இன்பம் உண்டு; எழில் உண்டு; இனிமை உண்டு; ஏற்றம் உண்டு.

இத் தமிழ் மொழி காலத்தால் மிகத் தொன்மை வாய்ந்தது. இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னும் இத் தமிழில் இனிய பாடல்களும், அப்பாடல் வழி வாழ்வு நடத்தும் புலவர்களும், அப்புலவர்களின் இயல்பறிந்து போற்றிவந்த புரவலர்களும் நாட்டில் பலர் இருந்துவந்தனர். அன்று மொழி பல துறையில் சிறந்திருந்தது. தமிழில் உள்ள இன்பம் காணப் புலவர் பலரைப் போற்றி வாழ்ந்தனர் புவி மன்னர். தமிழ் கெட்டால் தம் வாழ்வு கெட்டது என எண்ணி நின்றார் பலர். தமிழ்க்கும் தமிழ் நாட்டிற்கும் வரும் இழிவு தமக்கு வந்ததாகவே கருதி அந்த இழிவு நீக்க அரும்பாடுபட்ட அரசர் பலர். மக்களும் தமிழறிந்து, தமிழ் வாழத் தாம் வாழ்ந்து வந்தனர். அரசர் மட்டுமன்றிச் சாதாரண மக்களும் கூடத் தமிழிடத்துத் தளராக் காதல் கொண்டு வாழ்ந்தார்கள். எனவே தமிழ் நாட்டுமக்கள் அனைவருமே தமிழ் நாட்டையும் மொழியையும் ஓம்பி வளர்த்து வாழ்ந்து வந்தனர் என்பது உலகறிந்ததாகும்.

தமிழ் மன்னனைப் பழித்துரைத்த காரணத்தால் கனகவிசயர் கண்ணகிப் படிமத்தை தாங்கிவந்தனர் என்பதைச் சிலப்பதிகாரம் எடுத்துக் காட்டுகின்றது.

'அருந்தமிழ் ஆற்றல் அறிந்திலர் ஆங்கெனச்
சீற்றங் கொண்டுஇச் சேனை செல்வது'

எனச் செங்குட்டுவனது சேனையின் செலவை அடிகள் அழகுற விளக்கியுள்ளார். பிறர் தமிழரைப் பழிப்பின் தளராது தாக்கி வெற்றி காணும் நிலைக்கு இது ஒரு தக்க சான்றாக அமைகின்றது அன்றோ?

தமிழ் நாட்டு வேந்தர் இதற்கு ஏற்றம் தராது போயினும் தமிழ் இன்பத்திற்குத் தனிச்சிறப்பு நல்கினர். பிறவற்றிற்கு முடி வணங்காராயினும் தமிழ்ப் புலவர் தம் அடிவணங்கினர்.

யிறர் செய்யின் கொடுமை என்று குற்றத்திற்குக் கொடுந்தண்டனை கொடுக்கும் கொற்றவரும் புலவர் செயலில் மாறுபட்டு நிற்பதைச் சங்க இலக்கியம் காட்டுகிறது. புலவர் வறுமையில் பட்டுழல்பவர். பகடேறிப் பவனி வருபவர் அல்லர். எளியவாழ்வினர்; எனினும் இன்தமிழை அவர்கள் ஆளுகின்ற காரணத்தால் புரவலர் அவர் அடிவணங்கி வந்தனர். மோசிகீரனுரைச் சேரமான் தகடூர் எறிந்த பெருஞ் சேரல் இரும்பொறை போற்றிய முறையை அவர் வாக்கினாலே அறிய, பின் இந்த உண்மை நன்கு புலப்படும்.

தமிழ் நாட்டு வேந்தர் தம் உயிரினும் வாழ்வினும் சிறந்ததாகக் கருதியன சில. அவற்றுள் ஒன்று முரசு கட்டில். வெற்றியையும் பிற உற்றதையும் உற்ருரும் மற்ருரும் உணர்தற் பொருட்டு முரசு முழங்கும். அத்தகைய பெருமுரசரைப் பேசற்கரிய தெய்வமெனப் போற்றி வழிபட்டனர் மண்ணுள் மன்னர். அம் முரசினை அமைக்கத் தனியிடம் உண்டு. அதற்கு முரசு கட்டில் எனப் பெயர் வழங்கும். அம்முரசினை அழகுபடுத்திப் பீலியும் பிறவும் அணிந்து கண்டு, காணவைத்து மகிழ்வான் மன்னன். அதற்கு நீராட்டுச் சடங்கு உண்டு. பலியிடும் பழக்கமும் உண்டு. இத்தனையும் எதனுல். ஆம்! அக்கால மன்னன் அம்முரசும் தம் நாட்டை வாழ்விக்க நல் ஒலி இயம்பும் தெய்வம் எனக் கருதினுன். கருதிய காரணத்தால் தன் உயிரினும் மேலாக, தெய்வத்தன்மையோடு பொருத்திப் போற்றினுன். அம்முரசு கட்டிலில் சேரமானே கால் வைத்து ஏறி அறியான். அவன் கைப்பட அலங்கரிக்கப் பட்டது அது. பட்டும் துகிலும் படர வைத்திருந்தான் அம்முரசு மஞ்சத்தில். அத்தனைத் துகிலும் அழகொடு விளங்கிய கட்டிலில் முரசம் காணப்படவில்லை. முரசு விழாச் சிறப்பிற்கு முன்பாகக் கழுவிவரக் கொண்டு செல்லப்பட்டிருந்தது. அனைவரும் அதன் உலாப் பெருக்கில் திளைத்திருந்தனர்.

அந்த நிலையில் மோசிகீரனுர் அவ்வழிவந்தார். நீண்ட தூரம் நடந்த களைப்பு. அரசனைக் காணவேண்டும் எனவிழைந்த போதினும், அரசன் முரசவிழாவில் முனைந்திருந்தமையால் முடியவில்லை. எனவே சற்று ஓய்வுபெற எண்ணிற்று அவர் உள்ளம். அருகில் முரசு கட்டில் வெறும் கட்டிலாக இருக்கக் கண்டார். அதில் உட்கார விழைந்தார். உட்கார்ந்தார். ஆனுல் அவரது இளைப்பு அவரை உறக்கத்தில் ஆழ்த்தியது ; உறங்கிவிட்டார்.

சிறிது நேரத்திற்கெல்லாம் அரசன் அங்குவந்தான். தெய்வம் துஞ்சும் செவ்விய கட்டிலில் யாரோ ஒரு வறியன் உறங்குவதைத் தூரத்தேயே கண்டான். உளம் கறுத்தது. சினம் செறிந்தது. கையும் உறைவாளைப்பற்றிற்று; அவ்வுறங்குபவனை மீளா உறக்கத்தில் ஆழ்த்த விரைந்து அருகில் வந்தான். உறங்குபவனை இன்னுன் என உறிய உணர்வு பிறந்தது. அறிந்தான். அவன் நினைத்த செயல் தவறு என உணர்ந்தான். அறிவொளி முகத்தில் துலங்கிற்று. உள்ளத்து உண்மை ஒளி - உறங்கி நிற்பினும் அவ்வொளி - முகத்திடை முகிழ்த்து நின்றது. உறங்குபவர் ஒரு புலவர்

என உணர்ந்தான். கை நெகிழ்ந்தது. வாள் வீழ்ந்தது. அருகிருந்தவர் கொடுக்கக் கவரி ஏந்தின கைகள். மெல்ல வீசினான் மன்னன் தன் மாசற்ற கைகளால் - மலர்ந்த முகத்துடன் - கனிந்த உளத்துடன்.

முரசு கட்டில் மாசு பட்டதை அவன் எண்ணவில்லை. முரசு தன்னினும் மேம்பட்டது என்ற கருத்து முளைக்கவில்லை. தெய்வத் தோடொப்ப, திருவிழாவிற்கு ஏற்ற முரசு துஞ்சும் கட்டில் என் பதைக் கருதவில்லை. அனைத்திற்கு மேலாக அவன் நெஞ்சம் தமிழ் இன்பத்தைக் கண்டது. தமிழ் இன்பத்தைத் தரணிக்குக் காட்டும் புலவர் நன்முகத்தை நோக்கிற்று. வீசினான், சற்றும் களைப்பறி யாமல். அவன் தனக்குக் காற்றுவேண்டினும், சோர்வுற்ற காலத் தும் கவரிவீசுதற்குப் பல மக்களைத் தன்பக்கல் வைத்திருந்தான். அவர்களில் ஒருவனை விட்டாலும் விடாது வீசிக் கொண்டிருப் பான். ஆனால் அந்த எண்ணம் அவனுக்கு வராதது வியப்பன்று. தக்க புலவனுக்குத் தன்னையன்றி வேறு யார் கவரி வீச உரியவர் என்று கருதிற்று தமிழ் இன்பம் கண்ட அவன் தனியுள்ளம். வீசினான்; வீசினான்; கவரி வீசிக்கொண்டே இருந்தான்;

உறங்கிய புலவர் சோர்வு நீங்கி எழுந்தார். எதிரில் மன்னன் கவரி வீசிய காட்சி அவரை ஒரு உலுக்கு உலுக்கிவிட்டது. அலறி எழுந்தார். அஞ்சேல் என்றான் அரசன். அரசனது தமிழ் நெஞ்சம் புலவரது நெஞ்சத்தை தொட்டது. எண்ணினார் ஆ! நாம் செய்தது கொடுஞ் செயல். அதற்கு அரசன் நம்மை வாளால் வெட்டி வீழ்த்தி இருக்க வேண்டும். வீழ்த்தாது விட்டதே ஒரு பெருஞ் சிறப்பு. அதுவே அரசனது தமிழ் இன்பம் அறிந்த தகை மைக்குச் சான்று பகரும். ஆனால் அதற்கு மேலாகத் தன்கையிலே கவரி கொண்டு வீசும் தனிச் சிறப்பும் எத்தகையது என்று எண்ணிற்று அவர் உள்ளம். உள்ளம் மடைதிறந்து, உணர்ச்சி பாட்டாக வருகின்றது. இதோ அவர் வாய்ச் சொல்:

‘மாசற விசித்த வார்புறு வள்பின்
மைபடு மருங்குல் பொலிய மஞ்ஞை
ஒலி நெடும் பீலி ஒண்பொறி மணிததார்
பொலங் குழை உழிஞையொடு பொலியச் சூடி
குருதி வேட்கை உருகெழு முரசம்
மண்ணி வாரா அளவை எண்ணெய்
நுரைமுகந் தன்ன மென்பூஞ் சேக்கை
அறியாது ஏறிய என்னைத் தெறுவர
இருபால் படுக்கும் நின்வாள் வாய் ஒழிந்ததை
அதூஉம் சாலும் நல்தமிழ் முழுதறிதல்
அதனொடும் அமையாது அணுக வந்துநின்
மதனுடை முழவுத்தோள் ஓச்சித் தண்ணென
வீசியோயே வியலிடம் கமழ
இவண் இசைஉடையோர்க் கல்லது அவணது
உயர்நிலை உலகத்து உறையுள் இன்மை
விளங்கக் கேட்டமாறு கொல்
வலம்படு குரிசில் நீஈங்கிது செயலே (புறம் 50)

இந்த நிகழ்ச்சி தமிழர் உள்ளம் மறக்கமுடியாத ஒன்று. தமிழ் நாட்டுப் புலவர்கள் அன்று புரவலர்களால் எவ்வாறு போற்றப்பட்டனர் என்பதற்கு இதனினும் வேறு சான்றும் வேண்டும் கொல்.

இன்னும் தமிழ் இன்பத்துக்கும் 'புலவர் பாடும் புகழுக்கும்' ஏங்குகின்ற புரவலர் பலர். 'புலவர் பாடும் புகழோர் விசும்பின் வலவன் ஏவா வானஊர்தி எய்துப' என்ற எண்ணம் அந்த உள்ளங்களில் ஒளிர்ந்தன. எனவே இவ்வுலக இன்பத்துக்கும், மறு உலக இன்பத்திற்கும் தமிழ் இன்பம் கடைக்காலாக அமைகின்றது என்பது அவர்கள் கண்ட - போற்றிய உண்மை நெறியாகும். இத்தகைய தமிழ் இன்பத்தை எண்ணி, இவ்வின்பம் தரும் செம்மைப் புலவன் வாடலாகாது என்றும், எவ்வகை யாயினும் அவனை வாழ வைக்கவேண்டும் என்றும் எண்ணி உதவ முன்வந்த புரவலர் பலர். குமணன் தன் தலை கொடுக்கத் துணிந்தான். கொடைவள்ளல் என்ற பேரும் புகழும் பெற்ற பெருவள்ளல் தன்மை அவனிடம் விளங்கிற்று. கடை எழு வள்ளல்களுக்குப்பின் தமிழ் இன்பம் துய்த்த பெருவேந்தன் இவனே எனப் பெருஞ் சித்திரனர் பாடுகின்றார். (புறம் 157). அவன் கொடைச் சிறப்பு அவன் தம்பிக்கு வெறுப்பு ஊட்டிற்று. தம்பியின் கொடுமை அஞ்சிக் குமணன் காட்டிடைக் கரந்து வாழ்கின்றான். புலவர்கள் அப் புரவலனை - தமிழ் இன்பம் அறிந்த தக்கோனை - அங்கும் சென்று வாட்டினார்கள். புலவர் பெருந்தலைச் சாத்தனார் அவனைப் பாடி நின்றார். அப்போது அவன் கொடுக்கக் கையில் ஒன்றும் இல்லை. அதை எண்ணி வருந்திற்று அவன் உள்ளம். நாடு இழந்த வருத்தத்தினும் இன்பம் சொரியும் தமிழ்ப் புலவருக்குத் தர இயல வில்லையே என எண்ணும் வருத்தம் அவன் உள்ளத்தே மிக்கது. ஒருவழி உண்டோ என எண்ணினான் - உண்ர்ந்தான் - ஆராய்ந்தான் கண்டான் ஒருமுடிவை - களித்தான். முடிவு என்ன? தன். உயிரைக் கொடுத்துப் புலவர் வறுமையைப் போக்குவது என்று. தெய்வத்தன்மை வாய்ந்த முரசினும் மேலாகப் புலவர் வாழ்வைக்கருதிய ஒரு புரவலனை முன்பு கண்டோம். இதோ இங்கு தன்னுயிரினும் மேலாகப் புலவர் வாழ்வை - தமிழ் இன்பினைக் காண்கின்ற காட்சி தெரிகின்றது. குமணனது தம்பி ஒரு அறிக்கை யிட்டான். மறைந்த மன்னனைக் கொன்று தலையைக் கொணர்வார்க்குப் பரிசு என்று பறை சாற்றினான். அந்த எண்ணம் குமணன் உள்ளத்தைத் தொட்டது. தான் வாழ்வதினும் தமிழ் இன்பத் தலைவர் பெருந்தலைச் சாத்தனார் வாழ்வே மேல் எனக் கருதினான். கருதி, தன்னினும் சிறந்த பொருள் அப்போது வேறு இன்மையினாலும், தலை புலவர் வறுமையைப் போக்கும் என்று உணர்ந்ததனாலும் தன் கையிலிருந்த வாளைப் புலவர் கையிற் கொடுத்துத் தலையினைக் கொய்து பயன்பெறுக எனக் கூறினான். இச் செயல் குமணன் தமிழ்ப் புலவர் வாழ்வைக் குறிக்கோளாக் கொண்டதைக் காட்டவில்லையா? இதைக் கண்ட புலவர் உள்ளம் என்ன எண்ணி இருக்கும். இத்தகைய

புரவலரும் உண்டோ என உணர்ந்தார். வாளுடன் ஓடினார். தமபி இடம் காட்டி அப் பெரு வள்ளல் பண்புரைத்தார். அவர் உரைத்த அடிகள் இவை!

மன்னு உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே
துன்னருஞ் சிறப்பின் உயர்ந்த செல்வர்
தொன்மை மாக்கள் தொடர் பறியலரே
தாள்தாழ் படுமணி இரண்டும் பூநுதல்
ஆடியல் யானை பாடுநர்க் கருகா
கேடில் நல்லிசை வயமான் தோன்றலைப்
பாடி நின்றன னாகக் கொன்னே
பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்த்தலென்
நாடிழந் ததனினும் நனி இன்னா தென
வாள் தந்தனனே தலை எனக் கீயத்
தன்னிற் சிறந்தது பிறிது ஒன்றின்மையின்
ஆடுமலி உவகையொடு வருவல்
ஓடாப் பூட்கைநின் கிழமையோற் கண்டே (புறம் 165)

என்ற பாடல் உணர்வார்க்கு தமிழ் மாட்டு உறுதிபயக்கும் ஒரு பாடலாகும். தன் உயிரினும் தமிழ் வாழ்வை - தமிழ்ப் புலவர் வாழ்வை - தமிழ் இன்ப வாழ்வைச் சிறந்ததென்று கருதிய குமணன் தமிழ் நாட்டில் இன்னும் வாழ்கின்றான்.

ஔவையாரைப் பற்றி அறியாதார் இல்லை. அவர் அதிகமான் அஞ்சியொடு கொண்ட தொடர்பும் உலகம் அறியும் - அதிகமானை அவர் அளந்தறிந்த நெறியும் நாடு நன்கு அறியும். தன் வாழ்வினும் தக்க தமிழ் அறிஞர் ஔவையார் வாழ்வே தமிழ் நாட்டுக்கு நலம் பயப்பது என அறிந்தவன் அவன். பலநாள் முயன்று பெறற்கரிய நெல்லிக்கனியைப் பெற்றான். பெற்றதைப் போற்றிக் கொண்டுவந்து உண்ணத் தொடங்கினான். ஔவை வந்ததை அறிந்தான். 'விருந்து புறத்ததா தான்உண்டல் சாவா மருந்தெனினும் வேண்டற் பாற்றன்று' என்ற வள்ளுவன் குறட்கருத்து அவன் உள்ளத்து எழுந்தது. சாதாரண விருந்துக்கே அதுவாயின் தமிழ் விருந்து அளிக்கும் தள்ளவொணுப் பெருவிருந்தாக ஔவையார் வந்தார் என்றால் மகிழாதிருப்பானா மன்னன். குறட் கருத்தையும் தாண்டினான் அவன். அந்நெல்லிக்கனியைத் தனக்கும் ஔவைக்குமாகப் பங்கு போட்டுக்கொள்ளவில்லை. கொண்டுவந்தான். அதன் பெருமை கூறவில்லை. தன் வாழ்வினும் ஔவை வாழ்வே தமிழ் இன்பத்தைப் பெருக்க வல்ல வாழ்வு என்று அவன் உள்ளம் கூறிற்று. தான் நெடுங்காலம் வாழ்வதினும் ஔவை வாழின் தமிழ் சிறக்கும் என்று அவன் எண்ணம் எழுந்தது. கையில் கனியை ஈந்தான். அதன் பெருமையை எடுத்துக்காட்டாது கொடுத்தான், உண்டாள் ஔவை; அதன் இனிமையைப் போற்றினாள் ஔவை. பிறகு சொன்னான் அதன் பெருமையை, அதை உண்டார் நெடுங்காலம் நிலமிசை வாழ்வார் என்ற செய்தியைக் கேட்ட ஔவையார் திடுக்கிட்

டார். தனக்கென நெடுங் காலமாக முயன்று தேடிப்பெற்ற ஒரு கனியை - உண்டு நெடுங்காலம் உலகில் உலவலாம் என்ற உணர்வொடு காத்துக்கொண்டு வந்த கனியை - காவலன் அதிகமான் தன்னினும் அதிகமாகத் தமிழை - தமிழ் இன்பத்தைப் போற்றிய காரணத்தால் அன்றோ தனக்களித்தான் என்ற உடன் உள்ளம் தழைத்தது. மலர்ந்தன கண்கள், மகிழ்ந்தது சிந்தை. இத்தகைய வள்ளல் வாழ் நாட்டில் நலிவு ஏது என எண்ணிற்று. உண்மையை உரைத்தால் மறுத்தல் ஒல்லும் என உரையாது ஈந்த கொடை நிலையைக் உளத்தில் கொண்டார் ஔவையார். அந்த நெல்லிக்கனியால் அவர் நெடுங்காலம் வாழ்ந்தார் என்பர். வாழ்ந்த அவர் உள்ளத்தே அதிகமானின் கொடைநலம் போற்றும் தனிநலம் நிழலாடிற்று. உள்ளம் உணர்ந்த சொற்கள் ஒவ்வொன்றாக உதட்டிடை அசைந்தன. முடிவில் பின்வரும் பாட்டு உதிர்ந்தது:

'வலம்படு வாய்வாள் ஏந்தி ஒன்னார்
களம்படக் கடந்த கழல்தொடி தடக்கை
ஆர்கலி நறவின் அதியர் கோமான்
போரடு திருவிற் பொலிந்தார் அஞ்சி
பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி
நீலமணி மிடற் றொருவன் போல
மன்னுக பெரும நீயே தொன்னிலைப்
பெருமலை விடாகத் தருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது
ஆதல் நின்னகத் தடக்கிச்
சாதல் நீங்க எமக்கீந் தனையே' (புறம் - 91)

ஆம்! அவ்வள்ளலை நீலமணிமிடற்றொருவன் போல மன்னுக என வாழ்த்துகின்றார் தமிழ் உள்ளத்தால். அவனும் இன்றளவும் புகழால் வாழ்கின்றான். இனியும் வாழ்வான்.

பெருஞ் செல்வம் பெற்ற அரசர்களும் கொடைவள்ளல்களும் மட்டும் புலவரிடம் இத்துணைப் பெருமதிப்பு கொண்டிருந்தார்கள் என எண்ணவேண்டா. சாதாரணச் செல்வர்களும், நடுத்தரமானவர்களும், குறுநிலமன்னர்களும், கொடுக்கக் கூடிய பெரும் பொருள் அற்றவர்களும் கூட அடக்காத தமிழ்க் காதல் கொண்டிருந்தார்கள். தோயன் மாறன் ஒரு சிறு வீரன். புலவர்களுக்கு வாரி வழங்கும் பெரும்பொருள் அவனிடம் இல்லை. அந்தக் காரணத்தாலேயே வந்த புலவர்க்கு இல்லை என்று துரைக்கும் இளிவரவு அவனிடம் இல்லை. அவன் போரிற் சிறந்தவன். பல பகைவரை வென்று வீழ்த்திவிடுவான். பகைவர் நாட்டுப் பொருள்களைக் கொண்டு வருவான், தனக்கென்று அல்ல, தக்கார்க்கு வழங்குவதற்காக. அந்தப் பொருள்களையெல்லாம் கொணர்ந்து பாடும் பரிசிலர்க்கு - பண்ணொன்றப் பாட்டிசைக்கும் பாணர்க்கு வரையாது வழங்குவான். பாணர் இசை ஓம்பி எழிற்றமிழ் வளர்க்கும் பான்மையாளர். அவர் பசிகடிதலே அவன் தொழில். உலகில்

தமிழ்ப்பசி போக்கும் பாணர் தம் வயிற்றுப் பசியைத் தணிய வைத்தான். 'பாண்பசிப் பகைஞன்' என்ற பெயரையும் பெற்ருன். பகைவரிடம் கொணர்ந்த பொருள் தீர்ந்தால் என்னசெய்வான்? அப்போதும் புலவர் அவனை விடவில்லை. பலர் பாட்டிசைத்துப் பரிசில் வேண்டினர். அவன் அறிந்த வழி ஒன்றே. அதுதான் பகைமேற் சென்று பொருள் கொணர்ந்து புலவர்களுக்குக் கொடுப்பது. அதில், அவன் போரில் வெற்றிபெறுதல் உறுதி என்று கொண்டகொள்கையும், அதில் பொருள் பெற இயலும் என்ற துணிபும் விளங்குகிற தன்றோ! போர்க்குப் படை - செய் படை - வில், வாள், வேல், அம்பு முதலியன வேண்டும். அதற்குக் கருக்கைக் கொல்லன் உதவவேண்டும். அரசன் அக் கொல்லனை இரப்பான் ஆயுதம் தருக என்று. ஆணையிட்டு ஆக்க வேண்டிய செயலை இரந்து பெறுவான் என எழுதுகிருர் ஆசிரியர். இரத்தல் - கருங்கைக் கொல்லனை நெடுவேல் தருக என இரத்தல் அவனுக்கு இளிவரவாகத் தோன்றவில்லை. புலவர் உண்ணு மருங்குல் அவன் உள்ளத்தை வாட்டிற்று. தான் நாடு கொண்டு நனிவாழ வேண்டும் என்ற பேராசையால் அவன் படை வேண்டவில்லை. நாட்டுப் புலவர் தம் வயிறு வாடாதிருக்க - அவர் வழி உலகம் தமிழ் இன்பம் துய்க்க வழிகாணப் பொருள் பெறவே பகைப்புலம் படர்கின்ருன் மாறன். அதற்கென 'தன் உயர்வும் கொல்லன் தாழ்வும் கூடக் கருதாது நெடுவேல் வடித்தருள்க' என இரக்கின்ருன். இந்தப் பெருஞ் செயலை ஆசிரியர் கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக்குமரனுர் கண்டாங்கு கட்டுரைக்கின்ருர்.

'நிரப்பாது கொடுக்கும் செல்வமும் இலனே
இல்லென மறுக்கும் சிறுமையும் இலனே
இறையுறு விழுமம் தாங்கி அமரகத்து
இரும்புசுவை கொண்ட விழுப்புண் நோய்தீர்ந்து
மருந்துகொள் மரத்தின் வாள்வடு மயங்கி
வடுவின்று வடிந்த யாக்கையன் கொடைஎதிர்ந்து
ஈர்ந்தையோனே பாண்பசிப் பகைஞன்
இன்மைதீர வேண்டின் எம்மொடு
நீயும் வம்மோ முதுவா யிரவல
யாம்தன் இரக்கும் காலைத் தான்எம்
உண்ணு மருங்குல் காட்டித் தன்னூர்க்
கருங்கைக் கொல்லனை இரக்கும்
திருந்திலை நெடுவேல் வடித்திசின் எனவே (புறம் - 180)

இந்த ஈர்ந்தைச் செல்வன் செயல் பிற பெருவள்ளல்கள் செயல்களை யெல்லாம் தாண்டி மேலே செல்கின்றதன்ருே,! அப்பாண்பசிப்பகைஞன் புகழ் வாழ்க!

சங்க காலத்தில் புரவலரும் பிறரும் எவ்வாறு தமிழ் இன்பத் துறை மூழ்கித் தம்மையும், தம் உயிரையும், பொருளையும் பெரிதென மதியாது தமிழிடத்தும், தமிழ்ப்புலவரிடத்தும், அவர் தம் வாழ்விடத்தும் வளம்பெறப் பற்றுக்கொண்டிருந்தார்கள் எனக்

கண்டோம். இனி, இடைக்காலத்தே அரசர் தமிழிடம் கொண்ட அன்பினை - தமிழின்பம் கண்ட முறையினைக் காணல் நலமாகும்.

சங்க காலத்துக்குப்பின் சில நூற்றுண்டுகள் தமிழ் நாட்டு வரலாற்றைப் பற்றி அதிகமாக ஒன்றும் தெரியவில்லை. தமிழ்நாடு குறைந்தது இரண்டு மூன்றுண்டுகள் இருட்டில் இருந்திருக்க வேண்டும். கி. பி. முதல் இரண்டாம் நூற்றுண்டுகளில் சங்கம் தழைத்தோங்கி இருந்தது. அதுபோது மேற்கண்ட நெறியிலே தமிழ் வளர்ந்தது. தமிழ்நாட்டுப் பொற்காலம் எனத்தக்க பெருமைவாய்ந்த நாள் அது. அது கழிந்து ஆறும் நூற்றுண்டுவரை இடையில் உள்ள மூன்று நான்கு நூற்றுண்டுகள் தமிழ் நாட்டை பற்றிய வரலாறு பெரிதும் எழுதப்படவில்லை. பிறகு பல்லவர் ஆதிக்கம் தமிழ் நாட்டில் அதிகமாகின்றது. அப்பல்லவரில் பலர் தமிழ் ஆர்வம் கொண்டு தமிழை ஓம்பி வளர்த்த வரலாறு உண்டு. சமயத்தலைவர்களாகிய தேவாரம் பாடிய மூவரும், முதலாழ்வார் மூவரும் வாழ்ந்து சமயத்தையும் தமிழையும் ஒருங்கே வளர்த்த காலம் அது. அக்காலத்தே வாழ்ந்த பல்லவர் பலர் தமிழ் நலம் கண்டு அம் மொழிப்புலவரைப் போற்றிப் புரந்துள்ளார்கள். அவர்களில் காலத்தால் சற்று பிற்பட்டவன் நந்திப் போத்தரையன். 'நந்திக் கலம்பகத்தால் மாண்டகதை நாடறியும்' என்ற சொல் இன்றும் தமிழ் நாடு அறிந்துள்ளது. ஒரு பாடல் தன்னைக் கொல்லும் என அறிந்திருந்த போதிலும் அந்தப்பாட்டால் தன் உயிர் அகலும் என அறிந்தபின்பும் கூட அந்தப்பாடலைக் கேட்கவேண்டும் என்று விரும்பினுன் அவன். சங்க காலக் குமணனை ஒத்த கொடைவள்ளல் நந்தி. அவனைப் போன்றே தமிழிடம் காதல் கொண்டவன். அவனை ஒத்தே உயிரினும் தமிழ் மேம்பட்டது என்ற உணர்வை உடையவன் அவன். அந்த உணர்வின் வழியே உயிர்துறந்தான் என்று வரலாற்று ஆசிரியர்கள் எழுதிவைத்துச் சென்றிருக்கிறுர்கள். அந்நந்திக்கு ஒரு இளவல் இருந்தான். குமணனது தம்பி அவனது கொடையும் புகழையும் கண்டு பொருமையுற்றது போன்றதே இவனும் பொருமை கொண்டான். ஆகவே தன் தமயனை - நந்தியைக் கொல்ல நினைந்தான். நினைப்பிலே வழிகண்டான். குமணனது தம்பியைப் போன்று அண்ணன் தலையைக் கொண்டுவருக என ஆணையிடவில்லை. அமைதியாகச் சிந்தித்தான். அண்ணனது தமிழ் வெறி அவனுக்குத் தெரியும். புலவர்தம் பாட்டினும் தன் உயிர் சிறந்தது என்ற எண்ணம் நந்திக்குக் கிடையாது என அறிந்தான். அவன் உயிரை வெல்லம் என எண்ணுதவன் என்பதை அறிந்தான். தக்க கவிஞரை அழைத்தான். கலம்பகம் பாடவைத்தான். ஆம்! இவை யெல்லாம் பிற்காலப் பாடல்கள். பிற் கால முறைகளும் கூட. நச்செழுத்து வைத்துப்பாடுதல் நலிதரும் என்று எண்ணிய காலம் அது. புலவர்தம் வாய்ச்சொல்லே வாழவும் உதவும் வகை காண்பது என்ற உணர்வு சங்ககாலததது. பிற் காலத்தே எழுத்துக்களில் சில வாழ்வையும் சில தாழ்வையும் அளிப்பன என்ற

எண்ணம் எப்படியோ எழுந்தது. அந்த எண்ணத்தில் எழுந்த பாட்டியல்பல. எப்படியும் புலவர் வாக்கு மன்னனைக் கொல்ல வழி தேடிற்று. புலவர் அஞ்சினர். எனினும் இளவல் சொல் எண்ணிக் கலம்பகம் ஆக்கினார். அரச அவை சென்றார். நூறுபாட்டில் ஒரு பாட்டைப் படித்தார். பாட்டின் சுவை உணர்ந்தான் நந்திப் போத்தரையன். தமிழ் இன்பம் கண்டான்; தன்னைமறந்தான், நூறுபாடல்களையும் கேட்கவேண்டும் என அவன் உள்ளம் விரைந்தது. பாடச் சொன்னான் தொடர்ந்து. புலவர் மயங்கினார். பாட்டினால் உண்டாகும் பயனை உடன் உரைக்க அஞ்சினார். சொல்லாமல் இருக்கவும் முடியவில்லை. பிறகு ஒவ்வொரு சொல்லாகச் சொல்லியும் விட்டார். தான் இறப்பதாக அறிந்தும் தளர வில்லை மன்னன். தமிழினும் தமிழ்ப்பாட்டினும் தமிழ் இன்பத்தினும் தன் உயிர் சிறந்தது அல்ல எனக் கூறினான். இறப்பினும் நூறுபாடலையும் கேட்டே இறப்பேன் என்று கூறினான். இல்லாவிட்டால் அந்தக் கலம்பகத்தைக் கேட்க இயலாதே. காஞ்சியில் தான் வாழ்ந்திருந்த மாளிகையிலிருந்து - பல்லவ மேட்டிலிருந்து சுடுகாடுவரை நூறு பந்தல்கள் போடவைத்தான். ஒவ்வொரு பந்தலினும் இருந்து ஒவ்வொரு பாடலைக் கேட்டான். நூறாவது பந்தல் சுடுகாட்டில் போடப்பட்டிருந்தது. சிதை அடுக்கிவைத்திருந்தது. சிதையின்மேல் சிறக்க அமர்ந்தான். சிந்தை தளர வில்லை. நூறாவது பாடலையும் பாடுக என்றான். புலவர் பாடினார்.

வானுறு மதியை அடைந்ததுன் வதனம்
வையகம் அடைந்ததுன் கீர்த்தி
கானுறு புலியை அடைந்ததுன் வீரம்
கற்பகம் அடைந்நதுன் கரங்கள்
தேனுறு மலராள் அரியிடம் சேர்ந்தாள்
செந்தழல் புகுந்ததுன் மேனி
யானும் என்கவியும் எவ்விடம் புகுவோம்
எந்தையே நந்திநாயகனே'

என்ற பாடலே அது. பாடல்முடிந்தது. சிதை தீப்பற்றியது. தீர்த்தான் நந்தி. இந்தக் கதை கேட்பதற்கு வியப்பாயிருப்பினும் அன்றைய பல்லவமன்னன் தமிழ்க்காதல் கொண்ட வகையினையும், தமிழின்பம் துய்த்த நெறியினையும் விளக்க வருகின்றதன்றோ! இவ்வாறு சங்ககாலத்தும் இடைக்காலத்தும் வாழ்ந்தபலர் தமிழ் இன்பத்துறை மூழ்கித் தம்மை மறந்தவாழ்வில் வாழ்ந்து வந்தார்கள் என்பதை எண்ணும்போது - நாம் எப்படி வாழ்கிறோம் என்பதை நினைக்கும்போது - நம்மை அறியாது வெட்கம் தான் உண்டாகிறது. 'இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர் விருந்து அமிழ்தம் என்றாலும் வேண்டேன்' என்று பாடிய புலவர்தம் இலக்கணத்துக்கு இலக்கியமாகி நின்ற மக்கள் எத்தனை பேர்!

உலகம் பொய்! கடவுள் ஒருவர் உண்டு; அவரைப் பற்றி வாழ்தல் வாழ்வு. தெய்வலோக வாழ்க்கைத்தான் சிறந்தது. பிறவா நெறியே பெருநெறி என்று பேசும் பெரும் சமயத்தலைவர்களெல்

லாம் கூடத் தமிழ் என்று எண்ணும் போது மாறுபாடுகின்றனர். தமிழா! ஆம் அத் தமிழ்ப்பாட்டிருந்தால் போதுமே எமக்கு; தேவ உலகமும் மோட்ச உலகமும் கைலாயமும் வைகுண்டமும் வேண்டாம் என்று பாடுகின்றனர், பரமனைப்பாடும் பண்பிலே. அரசர் மட்டுமன்றி அடியவரும் தமிழ் இன்பம் துய்த்து இறைவனுக்கு மேலாக, இறை உலக வாழ்வுக்கு மேலாக இத்தமிழைப் போற்றிவந்தனர் என்றால் 'இருந்தமிழே உன்னால் இருந்தேன்' என்ற சொல்லை ஒவ்வொரு தமிழனும் ஏன் வாழ்விடைப் பற்றலாகாது.

'பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரர் ஏறே ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிற யான்போய் இந்திரலோக மாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே'

என்ற திருவரங்கச் செல்லவர் முன் நின்று அமர வாழ்வையும் வேண்டாராய் பண் ஒன்றத் தமிழ் பாட்டிசைக்கும் பண்பே தமக்கு வேண்டும் என்ற நெறியில் நின்று ஆடிப் பாடிய ஆழ்வாரை அவனியில் யாரே மறக்கவல்லார்.

'விரைவிடை இவறும் நினைப்பிற வாமை
வேண்டுநர் வேண்டுக மதுரம்
பெருகுறு தமிழ்ச்சொல் மலர்நினக் கணியும்
பிறவியே வேண்டுவன் தமியேன்'

என்று அண்ணாமலையார் முன்னின்று உன் முத்திவாழ்வினும் என் முத்தமிழ் வாழ்வே உயர்ந்தது. அந்த வாழ்வையே எனக்கு அளந்தால் போதும் என்று அகம் குழைந்து வேண்டும் சைவ அடியவரை உலகம் போற்றுதிருக்குமோ? எனவே தனிவாழ்வினும் சரி, சமயவாழ்வினும் சரி, பொதுவாழ்வினும் சரி, புரவலர் வாழ்வினும் சரி தமிழ் இன்பம் துய்க்கத்தயங்கும் வாழ்வு யாம் கண்டதில்லை. அத்தமிழ் இன்பத்தில் தன்னை மறந்து, அரசைமறந்து, நாடு நகரை மறந்து, தன் உயிரை மறந்து, பிறவாப் பெருநெறியாகிய வீட்டின் பத்தையும் மறந்து நிற்கின்றார்களாயின் அத் தமிழ் இன்பத்தின் தனிப்பெருமை சாற்ற இயலாதது. அவ்வின்ப நெறிகாணத் தமிழர் எங்குவாழினும் இன்று துடிக்கின்றனர். கடல் கடந்து வாழும் தமிழ் மக்கள் தமிழ் தமிழ் என ஏங்குகின்றனர். தமிழ் இன்பம் பெற ஆவாவுகின்றனர். இதோ மலேயாவில் அவர் தமிழ் இன்ப வேட்கையினைத் தணிக்க எழுந்தது மலேயா தமிழ்ப்பண்ணை. தணிக்கும் வகையில் பணியாற்றுகின்றது. இடைக்காலத்துத் தமிழகம் சற்றுத் தளர்வுற்ற நிலையில் இருப்பினும் இன்றைய தமிழகம் தலை நிமிர்ந்து வாழத் தொடங்கிவிட்டது. தமிழக மட்டுமின்றிப் பிறவிடங்களில் உள்ள தமிழரெல்லாம் தமிழ் இன்பம் காணத் தொடங்கிவிட்டனர். தமிழை நோக்க உயிர் தமக்கு

வெல்லம் அல்ல என்பதை வாழ்விடைக் காட்ட முற்பட்டு விட்டனர் தமிழ் மக்கள். தமிழ் வளரும் - தமிழ் இன்பம் தழைக்கும்.

தமிழ் இன்பம் பாட்டுதோறும் மிளிரும் - அவ்வின்பத்தை - சுவையைப் பலரும் பலவாறு பேசியும் எழுதியும் பாராட்டியும் வருகிறார்கள். எனவே அதைப் பற்றி இங்கு நான் ஒன்றும் கூறல் வேண்டா! நான் காட்ட விழைந்த எல்லாம் தமிழ் நாட்டு மன்னரும் பிறரும் அன்றும் பின்னும் எவ்வாறு தமிழ் இன்பத்தைப் போற்றி உயிரினும் மேம்பட்டதாக ஓம்பிவந்தார்கள் என்பதையே. ஒருவாறு காட்டினேன் என உணர்கின்றேன். ஓங்குக அத் தமிழ் இன்பம்! வாழ்க தமிழ் நாடு!

புலவர் வீரம்

புலவர் யார் என்பதும் வீரம் எத்தகைய தென்பதும் உலகம் அறிந்தனவே! என்றாலும் புலவரையும் வீரரையும் ஒன்றுபடுத்திப் பார்க்கும்போது, பலர் வியப்படைவர். புலவர் அறிவான் மிக்கவரானும் திருவானும் செறிவானும் தாழ்வுற்றவராகலான், அவர்மாட்டு வீரம் எனும் விழுப்பொருள் பொருந்த இடமின்றே என எண்ணுவர் பல்லோர். வீரம் என்றவுடன் அரசனுக்கோ, அவனைச் சார்ந்த படைக்கலப் பயிற்சியாளர்களுக்கோதான் அது இயைந்தது என்று எண்ணுவர் பலர். அவர்கள் வீரம் என்னும் பொருளை அறியாதவராகின்றனர். வீரம் என்பது வாளிடையும் வில்லிடையும் விளங்குவதன்று. உளத்திடை முகிழ்ப்பது வீரம்! செயலிடைச் செம்மையுற விளங்குவது வீரம்! போர்க்களத்தில் மட்டுமல்லாது, புகும் வாழ்க்கைத்துறை அத்தனையிலும் வீரம் விளங்கவேண்டும். வாழ்வினும் சாவினும் வீரம் காட்டி விளிந்தவரே இன்று பெரியராக அறிஞரால் பேசப்படுபவராவர். ஆம்! வீரம் அனைத்தினும் மேம்பட்டது. வீரவாழ்வு இன்ப விளக்கை உலகில் ஏற்றவல்லது.

வீரரைப் பலவகையாகப் பிரித்துப் பார்க்கலாம். வாழ்விடை வரும் நலக் கேடுகளைத் தளரா உளத்துடன் ஏற்று வருத்தமற்ற வாழ்வில் வாழ்கின்றவர் அத்தனை பேரும் வீரர்கள்தாம். வீரர்கட்கு உளத்திண்மை வேண்டும். உடற்றிண்மையும், ஆயுதங்களும் மட்டும் ஒருவரை வீரராக்க முடியாது! அவற்றுடன் உளத்திண்மையும் ஒன்றியே உயரிய வீரனை உருவாக்கும். வீரர்தம் உளத்திண்மைக்குக் காரணம் அவர்கள் தனக்கென வாழாப் பிறர்க்குரியரா யிருத்தலேயாகும். அந்தப் பரந்த நோக்கில் - சிறந்த செயலில் ஆண்மை முகிழ்க்கும் - நெஞ்சு அஞ்சுதல்ஒழித்து நிமிர்ந்து நிற்கும். வாழும் வாழ்வு தமக்கும் பிறர்க்கும் என்ற உயர் எண்ணத்தில் வீரம் சிறக்கும். இச்சிறந்த வீரம் மற்றவரினும் புலவரிடம் அதிகமாகப் பொருந்தியிருப்பதைக் காணல் நலம். உலகில் பலவகை வீரர் இருப்பினும் உடலையும் உயிரையும் ஒருங்கே ஓம்பி, பாதுகாத்து, ஆற்றுவ அஞ்சாது ஆற்றி வாழும் புலவர் வாழ்வில் வீரக் கோடுகள் பல காணலாம். அவ்வீரர் வரிசையில் பிற நாட்டுப் புலவரினும் தமிழ் நாட்டுப் புலவர் தலையாயவராவர்.

தமிழ்ப் புலவர் என்ருலே இன்றைய நாட்டில் ஏளனத்துக்கு ஆளானவர் என்ற நிலையில் நிற்கின்றனர். எங்கும் தமிழ்ப் புலவரைப்பற்றிய ஏச்சும் பேச்சும்தான். அவர்தம் நிலை இன்னும் சீர்பெறவில்லை. தமிழ் வளர்ந்து வருகின்றபோதிலும், தமிழ்நாடு தலைதூக்கி நின்றபோதிலும், அனைத்தினுக்கும் அடிப்படையான தமிழாசிரியர்தம் நிலை - தமிழ்ப் புலவர்தம் நிலை - வளரவில்லை. உரிமை நாட்டில் தாய்மொழி பயிலும் தகுதி வாய்ந்த புலவர் பொன்னெனப் போற்றப்படல் வேண்டும். வேண்டுவது அவர்தம் உயர்வு! விளைவது நாட்டுக்கு நன்மை. இந்த எண்ணம் - உணர்வு இன்று நம் நாட்டிடை இல்லாது போயினும், அன்று, இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழ் நாட்டில் தலைசிறந்திருந்தது. புலவர் பாடும் புகழையே பொன்னுகப் போற்றினர் தமிழ் நாட்டுப் பேரரசர்கள். புலவரது வாழ்த்தும் பிறவும் தம்மை வாழ்விப்பன என்பது அவர்தம் எண்ணம். அந்த எண்ண அலையில் மிதந்த அப்பேரரசர் புலவர்களுக்கு வேண்டிய பொன்னும் மணியும் கொடுத்துப் புவியாண்டனர். புலவரது அஞ்சா வீரத்தையும் ஆண்மையையும் கண்டு போற்றினர். ஒவ்வொரு அரசரும் புலவரது வாய்ப் புகழுக்கு ஏங்கிக் கிடந்தனர். ஒரு பேரரசன் புலவர் பாடாது விடுதலும் மீளாத் துன்பத்திற்கு ஆளாதலும் ஒன்று என உணர்கின்ருன். தன் நாட்டையும் நலனையும் புலவர் பாடாது விடுவதாகிய ஒரு கொடுவினைக்குத் தான் ஆளாகும் நிலை அவன் கண்முன் தோன்றுகின்றது. அந்த அரசன் யார்? பாண்டியன் தலையானங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன். பகைவரைப் போர்க்களத்தே கொன்று புகழ்மாலை சூடியவன். அவன் ஒரு சூளுரை சொல்கின்ருன். போர்க்களத்தே பொன்ற வைப்பது அவன் செயல். ‘அந்தச் செயலில் பின்னடையின் என் நாட்டைப் புலவர் பாடாது விடுக’ என வஞ்சினம் கொள்ளுகின்ருன். எனவே வாழ்விடை வருகின்ற அத்துணை இன்னல்களிலும், புலவர் பாடாப் புன்மையே மிகத்தாழ்ந்தது என மதிக்கின்ருன். அப்புலவர் தம் தலைவனுகிய மாங்குடி மருதன் தன் எதிரில் தோன்றுகின்ருன். உடனே வாய்விட்டு ‘மாங்குடி மருதன் தலைவனுக, புலவர் படாது வரைக என் நிலவரை’ என்று பாடுகின்ருன். அவனும் ஒரு புலவன். எனவே அவன் கருத்துப் பாட்டாக வருகிறது. இதோ அவன் வாய்ச்சொல்:

நகுத்தக்கனரே நாடுமீக் கூறுநர்
இளையன் இவன்என உளையக் கூறி
பருமணி இரட்டும் பாவடிப் பணைத்தாள்
நெடுநல் யானையும் தேரும் மாவும்
படையமை மறவரும் உடையம் யாம் என்று
உறுதுப் பஞ்சாதுஉடல் சினஞ் செருக்கிச்
சிறு சொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமம் சிதையத் தாக்கி முரசமொடு

ஒருங்ககப் படேனுயின் பொருந்திய
என்னிழல் வாழ்நர் செந்நிழற் காணுது
கொடியன்எம் இறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றும் கோலே ஞகுக
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ ஞகப்
புலவர் பாடாது வரைக என் நிலவரை
புறப்போர் புன்கண் கூர
இரப்போக் கீயா இன்மையா னுறவே. (புறம். 72)

இது புலவரையும் அவர்தம் புகழ் மொழியையும் தமிழ்நாட்டு மன்னர் அன்று ஏந்த வகையில் போற்றினர் என்பதற்கு ஒரு எடுத்துக் காட்டு. இனி அப்புலவர் தம் வீரவாழ்வை ஈண்டு விளக்கிக் காண்பாம். நாம் மேலே கண்டபடி அந்நாளில் தமிழ்நாட்டுப் புலவர்கள் அஞ்சாது அறவாழ்வு வாழ்ந்தார்கள். வாழ்வைத் தமக்காக மட்டும் அன்றி உலகுக்கு என உயர்ந்த செம்மை நெறியிலே வாழ்வு நடத்திஞர்கள். எனவே, நாட்டில் அவ்வப்போது உண்டாகும் அல்லலைக்காண அவர்கள் அஞ்சி அரசரானுயிம், அல்லலுக்கு முதற்காரணராய் அமைந்தவர்களுக்கு அறமுரைத்தார்கள். அரசராயினும் அஞ்சிவாழும் வாழ்க்கை அவர்களுடையதன்று. நேருக்கு நேர் நின்று அறமுரைப்பதே அவர்தம் பண்பு. அதனல் தம் நிலை குலையினும், தலைசாயினும் தளராது நின்று மற்றவர்களுக்கு உதவும் வழியிலே அறமுரைத்தலைச் சிறந்த வீரம் எனக் கொண்டார்கள். அவர் தம் வீர அறவுரைகளால் விளக்க அறிவு பெற்ற வேந்தர் பலர். விளையாது நின்ற போர்கள் பல. அவற்றுள் ஒன்று காண்போம்.

சோழர் குடிக்குள்ளேயே போர் தொடங்குகின்றது. ஒரு புறம் நலங்கிள்ளியும், மற்றொருபுறம் நெடுங்கிள்ளியும் நின்று போர்க்களத்தே போர் தொடுக்கப் புகுகின்றனர். புலவர் ஒருவர் அவர்தம் செயல் கண்டார். போர்கண்டு அஞ்சி ஓடி ஒளிக்கவில்லை. அவர். புவி எக்கேடு கெட்டாலும் தமக்குக் கவலை இல்லை என்று அவர் கருதவில்லை. அவர்தம் எதிரில் சென்று அறமுரைத்தால் என்னுகுமோ என்று அவர் எண்ணவில்லை. அஞ்சாதவராகி, வீர உள்ளம் பெற்றவராகி இருவருக்கும் முன்சென்று நின்றுர். போர் தொடுக்கும் இரு அரசர்களையும் கண்டார். வீர முழக்கம் செய்தார். புலவர் வாய்ப் புகழுக்கு ஏங்கும் தமிழ்க் குடிவந்த இரு பெரு வேந்தரும் இகல் நீங்கினர், அவர்தம் வாய்மொழியால். அரசர் அவைக்களமும் செல்ல அஞ்சும் புலவர் வரிசை எங்கே? அஞ்சாது போர்க்களம் சென்று, பொருபடைக்கிடையில்,—போர் முரசுக்கிடையில் நின்று மாற்று வேந்தர் இருவரை அருகழைத்து அறமுரைக்கும் வீர நிலை எங்கே? யார் இப்புலவர்! ஆம், அவர் தாம் கோவூர் கிழார். ஒரு குடியிலே போரிட்டு மடியும் செயலை வீர உளத்தோடு—வீர உரையோடு விளக்குகின்றுர் அவர். அவர் பாடல் இது.

இரும்பனை வெண்தோடு மலைந்தோன் அல்லன்
கருஞ்சினை வேம்பின் தெரியலோன் அல்லன்
நின்ன கண்ணியும் ஆர்மிடைந்தன்றே; நின்னெடு
பொருவோன் கண்ணியும் ஆர்மிடைந்தன்றே
ஒருவீர் தோற்பினும் தோற்பதும் குடியே
இருவீர் வேறல் இயற்கையும் அன்றே; அதனல்
குடிப்பொருள் அன்று நும் செய்தி கொடித்தேர்
நும்மோ ரன்ன வேந்தர்க்கு
மெய்ம்மலி உவகை செய்யும் இவ் இகலே. (புறம் - 45)

இதனல் புலவர் போர்க்களமாயினும் அஞ்சாது புகுந்து அறம் உரைத்துப் போரையும் தடுக்கும் பேராற்றல் வாய்ந்தவர் என்பது நன்கு புலனகும்.

இன்னும் புலவர் அரசர்தம் எதிராக நின்று அவர், தமக்கு இழைக்கும் சிறுமையை எள்ளி உரைத்து அவர்தம் செருக்கை அடக்கிய வீரச் செயல்கள் பல. வேண்டுங்கால் வேண்டும் வகைப் பொருள் தராது போக்கிய மன்னர்களை முகங்கவிழச் செய்த சிறந்த வீரச் செயல்கள் பல நம்நாட்டில் உண்டு. அவற்றில் சில கண்டு மேலே செல்லலாம்.

பெருஞ்சித்திரர் ஒருபெரும் புலவர். தலைமைப்புலவர் வரிசையில் வைத்துப் போற்றக்கூடிய பொற்பார் நலமும் பண்பும் புலமையும் ஒருங்கு வாய்க்கப்பெற்றவர். அவர் பொருள் வேண்டி ஒரு கால் வெளிமான் என்ற அரசனிடம் சென்றுர். அவன் இறக்கும் நிலையில் இருந்தான்; என்றுலும், தன் இளவலை அழைத்து புலவர் வேண்டிய அளவு பொன்னும் மணியும் புனைபூணும் தருக என்று கூறினன். அவன் புலவர்தம் சிறப்பினை அறிந்தவன். புலவர் வாழ்ந்தால் தான் தன்வாழ்வும் புகழும் வாழும் எனக் கருதினவன். எனவே அந்த இறுதி நிலையிலேயும்கூட வந்த புலவருக்கு வரிசை வழங்கச் சொன்னன். ஆனல் அவன் தம்பி புலவர் பெருமை அறியாதவன். ஏதோ பிச்சையேற்கும் ஒருவன் என்று கருதிச் சிறிதளவு பொன் கொடுத்தான். வீரம் செறிந்த புலவர் தான்வேண்டிய பொருள் பெருவிடின் ஏற்றுக்கொள்வரோ. கொள்ளாரன்றே! எனவே அவன் கொடுத்த பொருளை ஏற்றுக்கொள்ளாது அவ்விடத்தை விட்டகன்றுர். சென்று ஒரு கொடைவள்ளலைக் கண்டார். வள்ளள் என்றதும் தமிழ்நாட்டு வள்ளல்கள் பலர் நம் கண்முன் தோன்றுவர் என்பது உறுதி. தமிழ்நாட்டில் முல்லைக் கொடிக்குத்தேரும், மயிலுக்குப் போர்வையும் கொடுத்துக் கொடைமடம்பட்ட அரசர் வாழ்ந்தாரே, அத்தகைய பாரி, பேகன் வரிசையில் வைத்து போற்றப்படும் புரவலன் குமணன் தன்தலை கொடுத்தும் புலவர் வறுமையைப் போக்கவேண்டும் என்று விரும்பிய அரசன். தன் தலையைக் காட்டினும் புலவர் வாழ்வே பெரிதென எண்ணினவன் அவன். எனவே அவன் பெருஞ் சித்திரனரை வருகவென்று ஏற்றுக்கொண்டதில் வியப்பொன்று மிலையன்றே! ஏற்றுப்போற்றி வேண்டிய வேண்டி

யாங்கு வாரி அளித்தான் வள்ளற் குமணன். பொன்னும் மணியும் கொடுத்ததோடு யானையும் கொடுத்தான். பெற்றபொருள் கண்டு உளம் மகிழ்ந்த பெருஞ்சித்திரனார் நேராக வீடுசெல்லவில்லை. வெளிமான் தம்பி வாழும் நாட்டுக்குச் சென்றார். தாம்கொண்டு சென்ற யானையை அவன் காவல் மரத்தில்யாத்தார். காவன்மரம் என்பது மிக எளிதானதன்று. பகைவராலும் பற்றமுடியாதது. அரசர் வீழினும் அம்மரம் விரைவில் அந்நியர் கைப் படாதது. வெற்றிச்சின்னமாக விளங்குவது. பகையரசர் போரில்வென்று பகைவர் நாட்டுள் நுழைவராயின், அக்காவன் மரத்தை வெட்டி வெற்றியை விளக்குவர். இந்த நிலையில் ஏற்றமுற்ற காவன்மரத்தில் தம்யானையைப் பிணித்த பெருஞ்சித்திரனார் வீரத்தோடு நேராக வெளிமான் தம்பியிடம் செல்லுகின்றார். வீரஉரை அவர் வாயிடைப் பிறக்கின்றது.

'நீ இரவலரைக் காக்கின்றவன் அல்லன். ஆனால் அதே நிலையில் உலகில் புலவரைக் காக்கின்ற பேரசரும் இல்லாமல் இல்லை. அந்த உண்மையை இதோபார். உன் காவல் மரத்தில் யான் பரிசாகப்பெற்ற யானை கட்டப்பட்டிருக்கின்றது. நான்போய் வருகிறேன்' என்று கூறிப்புறப்படுகிறார். அவர் பாடல் இது.

'இரவலர் புரவலை நீயுமில்லை
புரவலர் இரவலர்க் கில்லையு மல்லர்
இரவல ருண்மையுங் காணினி; இரவலர்க்கு
ஈவோ ருண்மையுங் காணினி; நின்னூர்க்
கடிமரம் வருந்தத் தந்துயாம் பிணித்த
நெடுநல் யானையெம் பரிசில்
காடுமான் தோன்றல் செல்வல் யானே' (புறம் 162)

இதனால் புலவர்தம் வீரமும் சிறப்பும் நன்கு விளங்குகின்றது. பெற்ற பரிசில்கூட அவர்களுக்குப் பெரிதாகத் தெரியவில்லை. உற்றவீரமே அவர்தம் வாழ்வில் அவர்கள் உயர்ந்ததாகக் கொண்டதெனக் காண்கிறோம். பரிசில் பெற்ற யானையைத் தம் உடன் கொண்டு செல்லாது அவனுக்குப் புலவர் வீரத்தை அறிவுறுத்த வேண்டி அங்கேயே—காவன் மரத்தில் கட்டிச் சென்ற பெருஞ்சித்திரனார் வீரம் போற்றத்தக்க தொன்றன்றோ !

இனி, புலவர்கள் அரசருடன் ஒருங்கிருந்து அரசகாரியங்களில் பங்குகொண்டு தூதுவராகவும் துணைவராகவும் கூடப் பணியாற்றி வீரர்களாயினர் என்பதையும் காணல் ஏற்புடைத்தாகும். கபிலர் நாடறிந்த புலவர், கபிலரை அறியாத தமிழர் இருத்தல் அரிது. அக்கபிலர் பாரியின் உயிர்த்தோழர். பாரி கொடைமடம் பட்டவன். நாத்தழும்பிருப்பப் பாடாதாயினும், முல்லைக் கொடி பற்றுக்கோடு இல்லாது படர வருந்துவது கண்டு தனது பொற்றேரை விட்டுவந்தவன். இவனது கொடைச் சிறப்பு தமிழ் நாட்டு மூலை முடுக்குகளிலெல்லாம் கேட்டது. மூவேந்தர் தம் புகழ் இவன் புகழ்முன் எதிர் நிற்கவில்லை. கண்டவேந்தர்கள்

கவன்றனர். ஒன்றுகூடி அறியாத மூவேந்தரும் இப்பாரியின் பொருட்டு ஒன்று கூடினர் சூழ்ந்தனர். ஒரு சிற்றரசன் நம் அனைவரிலும் மேலாக நம் கண்முன்னேயே பேரும் புகழும் பெற்றுச் சிறப்படைவதா என எண்ணினர். உடனே பாரியின் பறம்பு நாட்டை முற்றுகை இட நினைத்தனர். முற்றுகையும் இட்டனர். ஆனால் பறம்பு நாடு அவ்வளவு எளிதாக அவர்கள் நினைத்தபடி வெல்லக்கூடியதன்று. அங்கு இயற்கை உணவுப் பொருள் எத்துணை நாள் வேண்டுமாயினும் உண்டு வாழ இருந்தது. எனவே முற்றுகையால் யாவரும் கலக்கமுறவில்லை. உள்ளிருந்த பல்லோருள்ளும் கபிலரும் ஒருவர். அவர் வீரம் அவரை வீணே முடங்கிக் கிடக்கவிடவில்லை. வீரத்தோடும் எழுந்தார். மதில் மேல் நின்றார். வெளியே மூவேந்தரும் முற்றுகையிட்டிருப்பதைக் கண்டார். அவர்கள் மூவரும், அவர்தம் சேனைகளும் பல நாட்களாக இம் முற்றுகையில் முனைந்திருப்பதை நோக்கினார். உண்மையில் இரக்கமுற்றார். மூவேந்தரையும் அழைத்துப் பேசுகின்றார் வீரத்தோடு. 'எத்துணை நாள் இப்பறம்பு மலையை முற்றியிருப்பினும் இதைக் கொள்ளுதல் இயலாது. பாரி தன் முன்னூறு ஊர்களையும் புலவர்களுக்கு வாரி வழங்கிவிட்டான். இனி இருப்பது இப்பறம்பு மலை. அவனும் நானும் கூட இருக்கிறோம். ஆகவே இம்மலையைக் கைக்கொள்ள விரும்புவீர்களாயின் இப்போரை விட்டுவிடுங்கள். சேனையைத் திருப்புங்கள். பகைவரை புறங் காட்டச் செய்யும் பாரி புலவர்களுக்குத் தன்னையே கொடுக்கும் தகுதிவாய்ந்தவன். ஆதலினால் திரும்பிச் செல்லும் நீங்கள் பறம்பு மலையைக் கொள்ளப் பேராவல் உடையவர்களாயின் உங்கள் மனைவியரைப் பின் அழைத்துப் பாணர் கோலத்து அவன் முன் வந்து இம்மலையை வேண்டுங்கள். தன்னையே புலவர்களுக்குக் கொடுக்கும் பாரி தயங்கான். உங்கள் விருப்பம் நிறைவேறும்' என்று கூறினார். அவர் பாடல்கள் பல சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் மேற்குறித்த கருத்தமைந்த பாடல்கள் கற்போர் உளத்துக்கு உரம் உண்டாக்குவதாகும்.

அளிதோ தானே பாரியது பறம்பே
நளிகொள் முரசின் மூவிரு முற்றினும்
உழவ ருழாதன நான்குபய னுடைத்தே
ஒன்றே, சிறியிலை வெதிரின் நெல்விளை யும்மே
இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பழமூழ்க்கும்மே
மூன்றே, கொழுங் கொடி வள்ளிக் கிழங்கு வீழ்க்கும்மே
நான்கே, அணிநிற லோரி யாய்தலின் மீதழிந்து
திணிநெடுங் குன்றம் தேன் சொரியும்மே
வினைக ணற்றதன் தினையே யாங்கு
மரந்தொறும் பிணித்த களிற்றினி ராயினும்
புலந்தொறும் பரப்பிய தேரினி ராயினும்
தாளிற் கொள்ளலிர் வாளிற் றூரலன்
யானறி குவேனது கொள்ளு மாறே
சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி
விரையொலி கூந்தல் நும்விறலியர் பின்வர

ஆடினிர் பாடினிர் செலினே
நாடும் குன்றும் ஒருங்கீயும்மே. (புறம் 109)

கடத்தடுதானை மூவரும் கூடி
உடன்றனிர் பறம்பு கொள்ளுதற்கரிதே
முந்நூ றூர்த்தே தண்பறப்பு நன்னாடு
முந்நூ றூரும் பரிசிலர் பெற்றனர்
யாமும் பாரியும் உளமே
குன்றும் உண்டுநீர் பாடி னீர் செலினே (புறம் 110)

என்ற இரு பாடல்களும் எண்ணி இன்புறத்தக்கன.

இனி, ஆண்பாற் புலவர்களே யன்றிப் பெண்பாற் புலவர்களும் வீரத்தில் சிறந்து நின்றவர் என்பதும் அவர்கள் அரசகாரியங்களில் உற்றுழி உதவி வீரங் காட்டி அஞ்சா வாழ்வு வாழ்ந்தனர் என்பதும் ஈண்டு காணல் ஏற்புடைத்தாகும். ஔவை என்னும் பெரும் புலவர் அவனி அறிந்தவர். அவர் பாடிய பாடல்கள் பல சங்க நூற்றொகையில் இடம் பெற்றுள்ளன. புறநானூற்றுள் அவர் பாடிய பாடல்கள் பல. அரசர்களுக்கு அறிவுறுத்துவனவாக அமைந்த பாடல்கள் பல உள்ளன. கபிலர் ஒரு நல் வள்ளலைச் சார்ந்திருந்தது போன்றே ஔவையாரும் அதிகமான் என்னும் வள்ளலைச் சார்ந்திருந்தனர். 'சான்றோர் சான்றோர் பாலராப' என்ற மொழிக்கேற்ப அறிவினான் அமைந்த ஆன்றோர் அவரை ஒத்த அறிவும் திருவும் அறனும் மிக்காரைச் சார்ந்திருத்தல் இயல்பே யன்றோ!

ஔவையார் அதிகமான் என்னும் கொடை வள்ளலைச் சார்ந்திருந்தார். அதிகமான் தன் உயிரினும் புலவர் உயிரைப் பெரிதாக மதித்தவன். உண்டால் நெடுங்காலம் வாழ வைக்கும் நெல்லிக் கனியைத் தனக்கென வைத்துக்கொள்ளாது ஔவைக்குக் கொடுத்து நெடுங்காலம் வாழ வைத்தான். தான் வாழ்வதிலும் புலவர் வாழ்வாராயின் பயன் உண்டு என்று உணர்ந்தான். 'சாதல் நீங்கத்' தமக்கீந்த நெல்லியின் சிறப்பையும் அதிகமான் பெருமையையும் பலபடப் பாராட்டுகின்றார் ஔவையார். அவருடைய வீரம் வெளிப்படும் இடம் ஒன்று நம் கண்முன் தெரிகின்றது. அதிகமான் நாட்டின்மீது தொண்டைமான் படை தொடுக்க நிற்கின்றான். அந்த நிலையில் அதிகமான் படை பலத்தையும் பிற நலத்தையும் தொண்டைமானுக்கு எடுத்துச் சொல்லும் தூதுவர் ஒருவர் வேண்டும் என்று தேடுகிறான். தூதுவர் ஆண் மக்கள் - அதிலும் ஆற்றலும் வீரமும் வாய்ந்தவர்தான் என்று எண்ணுவது மரபு. என்றாலும் நம் ஔவையார் தூது செல்ல இசைந்தார். பெண்மை வீரம் பெருக்கெடுக்க அவர் முன் வந்து ஆற்ற நின்ற செயல் கண்ட செம்மல் அதிகமான், ஔவையார் அஞ்சாது அறமுரைக்கும் ஆற்றல் வாய்ந்தவராதலின் அவரைத் தூதாக அனுப்பினான். தொண்டைமான் நாட்டுக்குத் தூது சென்றார் ஔவையார். ஔவையாரின் அரும்பண்புகளைத் தொண்டைமானும் அறிவான். எனவே தூதுவர் என்ற ஒருமுறையி லன்றிச்சிறந்த புலவர் என்ற

வகையிலும் பெருஞ் சிறப்பு செய்து வரவேற்றான். உணவு முதலிய ஆனபின்பு தன் படைக்கலக் கொட்டிலைக் காட்டினர். அங்குள்ள படைக்கலம் கண்டு ஒருவேளை ஔவையார் அஞ்சுவாளோ என எண்ணினான். ஆனால் ஔவையாரோ அதற்கெல்லாம் அஞ்சாது அறமுரைக்கின்றாள். "தொண்டைமானே, உன் படைகள் அழகாக உள்ளன; பூச்சூடியிருக்கின்றன. பீலி உண்டு. எண்ணெய் பூசப்பட்டன. அடுக்கடுக்காக, அணி அணியாகக் கண் கவர் வனப்புடன் இருக்கின்றன. ஆனால் அந்த அதிகமானுடைய படைகளோடு நிலை கெட்டு, ஒடிந்து, பாழ்பட்டு கொல்லன் உலைக் களத்தில் உள்ளன" என்று கூறுகின்றார், இதனால் தொண்டைமான் பல படை பெற்றும் பயிலா வகையில் பத்திரப்படுத்தி வைத்துப் போரறியாது தடுமாறுபவன் என்றும், அதிகமானோ அடிக்கடி போர் செய்து பகைவரை வெற்றி கொள்ளுகின்ற காரணத்தால் அவன் ஆயுதங்கள் சிதைந்து கொல்லனிடம் மறுபடியும் மறுபேருக்காகச் சீராக்க அனுப்பப்பட்டிருக்கின்றன என்றும்ஆகவே அவன் போர்வல்லான் என்றும் கூறுகின்றார். இவ்வாறு வேற்றரசன் முன் ஒரு தூதாகச் சென்றவள் சொல்வது என்றால் அஞ்சத்தக்க நிலையன்றோ அது! அதிலும் ஒரு புலவர்—பெண் சொல்வது என்றால் போற்றத்தக்கதன்றோ! ஔவையார் பேசினார். பெருமையுற்றார். பெண் வீரம் பெரிது, புலவர் வீரம் பெரிது என்று பேசும் நிலையில் அவர் பாடல் அமைகின்றது. இதோ அவர் பாடல்.

'இவ்வே, பீலி அணிந்து மாலை சூட்டிக்
கண்டிர ணோன்காழ் திருத்தி நெய் யணிந்து
கடியுடை வியனக ரவ்வே; அவ்வே
பகைவர் குத்திக் கோடு நுதி சிதைந்து
கொற்றுறைக் குற்றில மாதோ என்றும்
உண்டாயிற் பதங் கொடுத்து
இல்லாயின் உடனுண்ணும்
இல்லோ ரொக்கல் தலைவன்
அண்ண லெங்கோமான்வைந்நுதி வேலே' (புறம் 95)

இவ்வாறே ஒவ்வொரு புலவர் தம் வீரமும் திறனும் காட்டிக் கொண்டே போனால் கணக்கில் அடங்கா! புலவர் தம் வீரம் அறமும் அன்பும் கலந்தது. அமைதியும் ஆற்றலும் நிறைந்ததும், அந்த வீரம் இன்று இல்லை. புலமை அவற்றின் இடையில் பூக்க வேண்டும். அங்கு அமைதி ஆற்றல் அறம் அனைத்தும் முகிழ்க்கும். வீரம் விளையும். அந்நாள் வருவது என்னாளோ!

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 10448